பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

சித்திரமும் சொற்சித்திரமும்

[ஆங்கிலம்: பி. வி. பதி]

மொழிபெயர்ப்பு:
கோ. கி.

பிரசுரம்:
மதராஸ் பிரிமியர் கம்பெனி

முழு விற்பனை உரிமை:
தமிழ்நாடு வெளியீடு
33, பிராட்வே :: சென்னை

முதற்பதிப்பு : நவம்பர், 1946.

விலை ரூ. 5

பதிப்புரிமை

முன்னுரை

நான் இந்நூலை சிறிது தயக்கத்துடனேயே எழுதத் துவக்கினேன்; ஏனெனில் இது புகைப்படப் பிடிப்பும் செய்திப் படத் தயாரிப்புமே தொழிலாகக்கொண்ட நான் செய்யக்கூடிய வேலைகளைச் சேர்ந்ததல்ல. சில சமயங்களில் நான் இந்தியப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதியதுண்டு; ஆசிரியர்கள் அவற்றுக்கு அளித்த ஆதரவு என்னை பெரிதும் ஊக்கியது. செய்திச் சுருளுக்கான பொருளைத் தேடிக்கொண்டு சுற்றுங்கால் என் உள்ளத்தெழுந்த கருத்துக்களையும், அனுபவங்களையும் ஒரு புத்தகமாகத் தொருக்கவேண்டுமென்ற எண்ணம் மனதில் உள்ளூர இருந்ததுண்டு. ஒரு நிலையில்லாத செய்திப் படம் நடத்துவோனுடையதும், செய்திப்படம் பிடிக்கவேண்டி நாடோடியாகத் திரிபவனுடையது மான என் வாழ்க்கை, அமர்ந்து ஒரு நூலை எழுதுவதற்கு ஓய்வே அளிக்க வில்லை.

கடந்த சில வாண்டுகளாக படப்பிடிப்புக்குவேண்டிய உபகரணங்கள் கிடைக்காமையாலும், படம் பிடிப்பதில் உண்டான வேறு சிரமங்களாலும், என் வேலைகள் பெரிதும் தடைப்பட்டன. இந்த வேண்டாது வந்த ஓய்வை, நான் பிடித்திருந்த படங்களையும், எழுதியிருந்த யாத்திரைக் குறிப்புகள்—கைப் புத்தகங்களையும் திரும்பப் புரட்டிப் பார்ப்பதிலும், அனுபவங்களிற் பலவற்றைப் புதிதாக எழுதுவதிலும் கழித்தேன்; அதன் பயனே இந்நூல்.

நான் போதிய அளவு தங்கிப் பார்க்காமையால் எவற்றைப்பற்றி எழுதுவது உசிதமாகாதோ, அத்தகைய சில நகரங்களையும் வேறு இடங்களையும் பற்றி வேண்டுமென்றே எழுதாது விடுத்திருக்கிறேன்; ஆதாரங்கள் இருந்தும் வேறு சில இடங்களையும் ஒதுக்கிவிட்டேன்; ஏனெனில் நூலாசிரியர் உலகத்திற்குப் புதியவன் ஒருவன் எடுத்ததுமே பெருத்த பாரதம் எழுதத் துவக்குவது எனக்குப் பிடிக்கவில்லை.

இதிலுள்ள 16 அத்தியாயங்களையும் என் யாத்திரைக் குறிப்பின் சாரம் என்பது பொருந்தும். இந்தியாவில் காணத்தகுந்த பலவற்றையும், இதிலடங்கியுள்ள புகைப்படங்கள் நிதர்சனமாக்குகின்றன வென்று கூறலாம். தன் சரக்கைத் தேடிச்சுற்றிய படம் பிடிப்போனுடையவையான இதிலுள்ள கருத்துக்களையும், மனோபிம்பங்களையும் அவை தமக்குரிய மதிப்பைப் பெறட்டுமென்று சமர்ப்பிக்கிறேன்.

பி. வி. பதி.

பொருளடக்கம்

		பக்கம்
I.	பண்டைக்காலக் காட்சிகள்	1
II.	கங்கையின் வாயிலில்	5
III.	ராஜபோக நகரம் டில்லி	8
IV.	ஒரு புராதனப் போர்க்களம்	16
V.	லாகூர்	20
VI.	மறைந்த நகரங்களின் மங்கிய சித்திரங்கள்	26
VII.	பொற்கோயில்	31
VIII.	ரஜபுத்திர ராஜ்யங்கள்	33
IX.	அக்பரின் தலைநகரங்கள்	38
X.	கண்ணன் களித்த நிலம்	41
XI.	வரகவி வாழ்ந்த ஊர்	43
XII.	கூர்ஜரம்	46
XIII.	கிருஷ்ணாநதி டெல்டா	53
XIV.	கர்னாடகத்தின் தலைநகரம்	58
XV.	சில தென்னிந்தியக் காட்சிகள்	63
XVI.	மேற்குக்கரை அரசி	69



மொகலாய சக்ரவர்த்திகள் வீற்றிருந்து தர்பார் நடத்தும் சிங்கார ஆசனம்.

சித்திரமும் சொற்சித்திரமும்

I

பண்டைக் காலக் காட்சிகள்

“கங்கை நதி பெருமிதத்துடன் உதிக்கும் அப் பனிச் சிகரங்களை நீங்கள் அடைவதற்கு, நூறு நாட்கள் பிடிக்கும்”—இது இமாலயத்தின் அடிவாரத்தில் வசிக்கும் அச் சந்நியாசி கூறியதன் சாரமாகும். அவர் பேசும் பொழுதே, கங்கை, ஸிந்து என்ற இரு பெரு நதிகளின் பிறப்பிடமும் என்றும் உருகாப் பனி வீடுமான இமயத்தின் சிகரங்களை நாம் நிமிர்ந்து நோக்கவே பண்டைக் காலக் காட்சிகள் கண்முன் மிதந்து வருகின்றன. மிக மிகப் புராதன காலத்தில் மனிதன் பேருழைப்புடன் வாழ்ந்தது ஸிந்து நதி பாயும் நிலத்தில் அல்லவா? இந்தக் குளிர்ந்த ஏகாந்தமான கங்கை வெளிகளில் வேதங்களென வழங்கும் தெய்வீக ஸம்ஸ்கிருதப் பாசுரங்களை ரிஷிகளும், முனிவரும் பாடியகாலத்திலிருந்து எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்டன! காற்றின் கனிந்த பாட்டிலும், ஆற்றின் எக்களிப்பிலும் எத்துண்டு, பண்டைக் காலத்தில் சென்று திரிந்த மனம், மலைப்பாதையில் சுமையைத் தாங்கிச் செல்லும் கோவேறு கழுதைகளின் அரவம்கேட்டு நிகழ்காலத்திற்குத் திரும்பவும், நம் பகற் கனவு கலைகிறது.

“முன்னொரு காலத்தில் பெரியதோர் ராஜ்யத்தைச் சேர்ந்த புராதன நகரம் இருந்த இடம் இது,” என்று இப்பொழுது புராதனச்சின்ன ஆராய்ச்சியாளர் தக்ஷசிலத்தின் ஓர் மண் மேட்டைச் சுட்டி வர்ணிக்கிறார். ‘ஹாரோ’ பள்ளத்தாக்கிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட பல விலை மதிக்கவொண்ணாத பொருள்கள் 2500 ஆண்டு

களுக்கு முந்திய மக்களின் வாழ்க்கையை அநுமானிக்க உதவுகின்றன. காலம், இந் நகரங்கள் ஒரு காலத்தில் இருந்ததென்பதையே மனித நினைவிலிருந்து அநேகமாக அழித்து விட்டது.

"இங்கேதான் பாரதப்போர் நடந்தது; ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு கீதையை உபதேசித்தது இந்த இடமே," என்று அந்தப் பரந்த வெளியை நாம் நோக்கிக் கொண்டிருக்கும்பொழுது ஒரு துறவி கூறுகிறார். கணப் பொழுதிற்குள் மகாபாரதத்தில் வர்ணிக்கப் படும் போர் நம் கண்முன் தத்ரூபமாக வந்து மறைகிறது—உண்மையில் அங்கு உள்ளது பச்சைப் பூண்டுமற்ற எல்லையில்லாச் சமவெளியே!

டில்லிக்கு எப்பொழுதும் ராஜயோகம்தான். இதிஹாஸகாலத்தின் இந்திர பிரஸ்தத்திற்கும் சரி, சரித்திர காலத்தின் டில்லிக்கும் சரி, யோகம் ஒன்றே. டில்லி ஒன்றல்ல, ஏழு நம் மனக்கண்முன் ஒன்றன்பின் ஒன்றாக, சித்திரங்கள்போல் எழுந்து மறைகின்றன. அவை இருந்தது ஏறக்குறைய 2000 வருஷங்களில் ஆகும். இதிஹாஸங்களில் வர்ணிக்கப்படும் வீரர்கள் அரசு துறந்து, நாடோடிகளாய்த் திரிந்து, கோட்டை, கொத்தளங்கள் எழுப்பிய காலம் ஒன்று; பின் டில்லியில் குத்புதீன் என்பவன் சுல்தான்களின் ஆட்சியை ஸ்தாபித்து குதுப் மீனரை நிர்மாணிக்க ஏவிய காலம்; பின்னர், சலவைக் கற்பீடத்தின்மீது மயில் சிம்மாசனத்தமர்ந்து செங்கோட்டையில் தம் பிரதானியர்களுக்கு சக்கரவர்த்தி தரிசனம் தந்த காலம்; அங்குள்ள கல்வெட்டொன்று பாரசீக பாஷையில், "உலகில் சொர்க்கம் உண்டானல் இதுவே, இதுவே, இதுவே!" என்ற சொற்களைத் தாங்கி நிற்கும்; வர்ணக் கற்கள் பதித்த சுவர்களும் சலவைக்கல் தளங்களும், நீர் அருவிகளும், நகாசு வேலையுள்ள சாளரங்களும் வெகு சூட்சுமமான வேலைப்பாடுள்ள கூரைகளும் முகலாய சாம்ராஜ்யத்தின் சீரையும் சிறப்பையும் தெளிவாக்குகின்றன.



ராஜா மான்சிங்கினல் அமைக்கப்பட்ட குவாலியர் கோட்டை.



டில்லிச் செங்கோட்டையின் நுண்ணிய சித்திரவேலைப்பாடுள்ள ஒரு ஜன்னல்.



சாரநாதின் பாழடைந்த புத்த மடங்கள்.

சிதம்பரத்தில் ஒரு தெரு — பழமையும் புதுமையும் இணைந்த இந்திய வாழ்க்கைக்கு ஒரு உதாரணம்.

இங்கே, தெய்வநதி கங்கையின் காசிக் கட்டத்தில் தங்கள் பாபங்களைப் போக்க வரும் மக்களின் மகிழ்ச்சியே மகிழ்ச்சி! நூற்றாண்டுகள் பல கழிந்தும் கங்கைத் துறைகளில் நீராடவரும் யாத்திரிகளின் காட்சி சிறிதும் மாறியிருப்பதாய்த் தெரியவில்லை. ஏனெனில் புராதன காலத்திலிருந்தே காசி ஒரு புண்ணிய க்ஷேத்திரமாகக் கருதப்பட்டுவந்திருக்கிறது. இந்தத் துறைகளில் தலைமூழ்கி எழுந்த யாத்திரிகள் எத்தனை கோடியோ! எத்தனை அரசர்கள் இந் நகரத்தில் ஆட்சி புரிந்தனரோ! எத்தனை மகான்கள் இப்புண்ணிய ஸ்தலத்தைத் தங்கள் வாசஸ்தலமாகக் கொண்டிருந்தனரோ! புத்த பகவானும் இங்கே யாத்திரையாக வந்திருந்தாராம். நம் மனக்கண்முன் எத்தனையோ மங்கிய சித்திரங்கள் வந்து மறைகின்றன. புத்தமத நூல்களில் புத்தபகவான் ராஜ ஹம்ஸ உருவில் கங்கை நதியைக் கடந்ததாகக் கூறப்படும் வரலாறு அப்படியே நம்முன் வருகிறது. கங்கையைக் கடந்து புத்தர் ஸாரநாதுக்குச் சென்றார். ஸாரநாதில் உள்ள பாழான விச்ராமங்களை நோக்குங்கால் எத்தனையோ பிக்ஷுக்கள் வெகு தூரத்திலிருந்து வந்து புத்தர் அடியைப் பற்றியொழுக முயன்ற அக் காலத்தின் சித்திரம் நம் முன் எழுதுகிறது.

"சக்கரவர்த்தி அற்புதமான மாளிகைகள் அமைக்கத் திட்டம் வகுக்கிறார்" என்று அக்பர் காலத்துச் சரித்திர ஆசிரியன் அபுல் பஸல் எழுதுகிறான். பின்னர் புறக்கணிக்கப்பட்ட தலைநகரான பதேஹபூர் ஸிக்ரியின் ராஜத்வாரம் மேற்கூறிய வாக்கியத்திற்கு நிதர்சனமான உதாரணமாகும். ஒவ்வொரு ஞாபகச் சின்னமும், கட்டடமும், குளங்களும், கிணறுகளும்கூட முன்னரே தயாரிக்கப்பட்ட திட்டப்படி நிர்மாணிக்கப்பட்டன. இந்தத் தலைநகரில்தான் அக்பர் பல ஆண்டுகள் 'அகண்ட இந்தியா' என்றும், 'அனைவருக்கும் ஒரு மதம்' என்றும் கனவு கண்டு ஓரளவுக்குத் தானும் அனுஷ்டித்து வந்தது. இந் நகரம் அழிந்து பாழ்பட்டுப்போயினும் அக்பர் நடத்திய ஏகாந்த ராஜஸபையும் அக்காலத்தில்

செழித்து ஜனநெருக்கமாயிருந்த நகரமும் கண்முன் வந்து நிற்கின்றன. பின்னர் அவை மறைந்துவிடவே நம் முன் பரந்து கிடப்பது பாழே.

ஆகாயத்தை அளாவும் ஆலயங்களுக்குப் பின்புலமாக அமைவது தென்னிந்தியாவின் மேகம் சூழ்ந்த வான வெளியே. 15 நூற்றாண்டுகளுக்கு முன் தெய்வங்களுக்கு அமைந்த கோயில்களின் வாயில்களை, சிற்பிகள் இந்தக் கோபுரங்களமைத்துச் சிறப்பித்தனர். அரசர்கள் இந்த மாபெரும் கலா சிருஷ்டிகளை ஆதரித்ததால் கலைஞர் இவற்றை நிருமிப்பதில் வெற்றி பெற்றனர். நமக்கு அவர்கள் சேமித்துள்ள நுண்ணிய கோபுரச் சிலைகளின் அழகைக் கண்டு மகிழ்ந்திருக்கும்பொழுது நம் மனம் மதத்தைச் சிறப்பிக்கவேண்டிக் கலையைக் கையாண்ட அவர்களின் ஓய்வற்ற வாழ்க்கையை எண்ணிப் பூரிக்கிறது. வடக்கிலோ, கிழக்கிலோ, தெற்கிலோ, மேற்கேயோ ஓய்வு, ஒழிவு இல்லாத தினசரி இந்திய வாழ்க்கையுடன் அதன் இறந்தகால வாழ்க்கையும் இணை பிரியாது காணப்படுகிறது. கோயில்கள், மசூதிகள், புண்ணியஸ்தலங்கள், பாழடைந்த புராதன நகரங்கள் ஆகியவையும், செழித்தோங்கி வாழும் நகரங்களில் வழங்கும் சம்பிரதாயங்களும், புராதன இந்தியாவை அப்படியே நம்முன் கொணர்ந்து நிறுத்துகின்றன. கைத்தொழில்களும், ஆபீசுகளும் நிறைந்தநவீன நகரங்களில் புதிய காலத்தின் சில அம்சங்களையும் காண்கிறோம். மோட்டார் டிராம் வண்டிகளும், ரயிலும், ஆகாய விமானமும் சிறிய பெரிய நகரங்களையும், கிராமங்களையும் ஒன்றுகப் பிணிக்கின்றன. புராதன நாகரிகம் அமைத்த திரையில் காலமும், சரித்திரமும் சேர்ந்து தற்கால இந்தியாவை சித்திரித்திருக்கின்றன.

இந்தியாவைச் சுற்றிவரும்பொழுது கண்ணிற் பட்டவைகளும், மனதில் எழுந்தவைகளும் அடுத்துவரும் அத்தியாயங்களில் உள்ளன. அவை சித்திரங்களாகவும், சொற்சித்திரங்களாகவும் அமைக்கப்பெற்றுள்ளன.



ஸிக்கந்திராவிலுள்ள அக்பரின் சமாதி.

II

கங்கையின் வாயிலில்

கங்கை தன் மலை வீட்டை விடுத்துச் சமவெளியில் இறங்குமிடத்தில் ஹிரிஷீகேசம் என்ற சிற்றூர் உளது; அங்கே குறுகிய கண்களும், துருத்திக்கொண்டிருக்கும் தாடைகளுமுள்ள மலைவாழ்மக்கள், தங்கள் எளிய பண்டங்களை விற்கவேண்டி லக்ஷ்மண ஜூலா என்றழைக்கப்படும் தொங்கு பாலத்தின் வழியாக வருகிறார்கள். இரும்புக் கம்பங்களின்மீது தம் தாய்களைத் தொடர்ந்து வரும் குட்டிக் குரங்குகள் ஒன்றையொன்று துரத்தி விளையாடும்; இரும்பால் பாலம் அமைவதற்கு வெகு காலம் முன்பே லக்ஷமண ஜூலா இருந்திருக்கிறது. ராமர் முதலானோர் ஹரித்வாரத்திற்கும், ஹிரிஷீகேசத்துக்கும் இவ்வழியாகவே சென்றனரென்பதும் இங்கே அப்பொழுதே தொங்குபாலமுண்டென்பதும் கர்ணபரம்பரை. அப்பாலம் கொடிகளாலானதோ, கயிறுகொண்டு பின்னியதோ, யார் கண்டது?

இந்த ஹிரிஷீகேசத்தையடுத்து தெளிந்து பைந்தளிர் நிறத்திலுள்ள நீர் பற்பல கிளைகளாகப் பிரிந்து பல காடடர்ந்த தீவுகளிடையே இனிய ஓசையுடன் விசையாகப் பாய்ந்தோடி ஹரித்துவாரத்திற்கருகில் மீண்டும் கூடுகின்றது. துள்ளிக் குதித்த இளங்கன்னி, தாயின் சிறப்பெய்தியதைப் போல், மலையருவியாயிருந்த கங்கை, பேராறாக மாறுவதை 'சாந்தீ பஹாட்' (வெள்ளிமலை), பார்த்துக் களித்து நிற்கிறது.

ஹரித்வார க்ஷேத்திரம் கங்கையின் கிளையொன்றின் கரையில் அமைந்துள்ளது; அங்கே விஷ்ணு தம் திருவடியைச் சார்த்தியதாக வைணவரும், சிவன் தன் பாதத்தை வைத்ததாகச் சைவரும் கூறுவர். பண்டைக் காலத்திலிருந்தே 'குமாயின்' ஸ்தலங்களுக்குப்போக

விரும்புவோர் இவற்றைத் தாண்டியே செல்வது வழக்கம். பழைய காலத்திலிருந்தே யாத்திரிகள் பெருத்த கருங் கற்கள் படுத்துக் குறுகியனவும் இடையிடையே வேறு திசைகளில் திடீரெனத் திருப்புவனவுமான தெருக்களிற் புகுந்து சென்று, பல்வகைப் பழவரிசைகளால் ஒளி பெற்றுத்திகழும் திறந்த வெளிகளில் சுற்றியிருக்கிறார்கள். யாத்திரிகள் பல்வகைப் பண்டங்களும் நிரம்பியுள்ள கடைகளில் தமக்குத் தேவையான உருசியுள்ள உண் டியோ, இனிய தேனீரோ, மணமலரோ, பல நிறங் களுடனும், பல உருவிலும் உள்ள கூடைகளோ வாங்கி யிருக்கிறார்கள். தெருக்களின் இருபுறமும் கங்கை நீரில் துவைத்து உலர்த்தப்பெற்று வெண் கொடிகளென மேல் பாடங்களில் ஆடைகள் பறக்க, அழகிய சாளரங்க ளமைந்த வீடுகள், கீழே கடைகளுடன் இருக்கும்; ஆயினும் ஹரித்வாரத்தின் தெருக்கள் இருண்டிருக்க வில்லை; காரணம், நகரமெங்கும் இனிய மலைச்சாரல் வீசும்; பளிச்சென்று களியுடன் ஒளிரும்-கதிரவனும் துடைத்து வைத்துள்ள ஆப்பிள் பழத்திலும், பித்தளைப் பாத்திரத்திலும், பளபளவென்றிருக்கும் ஒரு கன்னியின் கூந்தலிலும் தன் கிரணங்களைச் செலுத்தி நாற்புறமும் பிரதிபலிக்கச் செய்கிறான். ஸ்ப டிகம்போல் தெளிந்த நீரில் எல்லாத் துறைகளிலுமே வெள்ளிக் கம்பி யைப்போல் சிறியவையும், அடிவாழை மரத்தைப் போல் பெருத்தவையுமான மீன்கள் யாத்திரிகளின் கிரு பையைக் கோரி முண்டித்தள்ளி முன்னே வந்து நிற்கும். ஹரித்வாரத்தின் மீன்களைப் பிடித்தல் அபசாரமாகும்; ஆகவே, அங்கே செம்படவர்களோ, வலையோ கிடையா.

ஹிந்துக்களின் ஸௌரமான வருஷப் பிறப்பு-அது தான் ஹரித்வாரத்தின் பெரிய திருநாளெனப் பிரசித்த மான கும்பமேளம்; பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு முறை, நடைபெறுவது. சிறிய கும்பமேளம் ஆறு வரு ஷத்திற்கு ஒருமுறையாகும். இத் திருநாளுக்குப் பல மாதங்களுக்கு முன்னரே இந்நகரில் அதற்கான ஆயத்



ஹரித்துவாரத்தின் கங்கைத் துறைகள் (1).



ஹரித்துவாரத்தின் கங்கைத் துறைகள் (2).

தங்கள் நடைபெறுவதுபோல், இந்தியாவின் பல திசைகளிலிருந்தும் யாத்திரிகள் இபபுண்ய ஸ்தலத்தை நோக்கிக் கிளம்புகின்றனர். சாதுக்களும், சந்நியாசிகளும், மடாதிபதிகளும், சாதித் தலைவர்களும் ஹரித்வாரத்தில் கூடுகின்றனர்; இங்கே அம்பாரி வைத்த யானைகள் அவர்களை கங்கைத் துறையிலிருந்து கோயிலுக்கும், கோயிலிலிருந்து துறைக்குமாக திருவிழாத் தினங்களில் தாங்கிச் செல்கின்றன; பண்டை நாட்களிற்போலவே தினமும் யானைப் பவனி நடைபெறுகிறது. செய்திப் படம் பிடிப்போனே 20-ஆம் நூற்றாண்டை இடையே புகுத்துகிறான்!

சூரியன் கும்பராசியிற்புகும் நாளாகிய, இந்தத் திருவிழாவின் முக்கியதினத்தில் நீர்த்துறைகளின் காட்சியைப் பார்க்கக் கண்கள் ஆயிரம் வேண்டும்! யாத்திரிகள் திரள் திரளாக ஆயிரக்கணக்கில் தம் பாவங்களைப் போக்கிப் புனிதமாவதன் பொருட்டு வந்து முழுகுகின்றனர். ஆனால், உற்சவமுண்டோ, இல்லையோ, ஹரித்வாரத்தில் எப்பொழுதும் யாத்திரிகள் உண்டு.

பஞ்ச பஞ்ச உஷக்காலத்தில் ஒருவர் பழைய ஸம்ஸ்கிருத ஸ்தோத்திரங்களைப் பாடுகிறார்; அவருடைய குரல் அனவரதமும் ஒலித்தோடும் ஆற்றுடன் கலக்கிறது. விரைந்தேகும் வெள்ளத்திலிருந்து 'ஜில்' என்று வீசும் காற்று உறங்கியவர்களை எழச் செய்கிறது. தெளிந்த வானத்தில் அதோ சந்திரன் மங்கி மறைகிறான். ஹரித்வாரத்தில் பொழுது விடிந்துவிட்டது. இதற்குள் பலர் துறைகளில் குளிக்கக் கூடிவிட்டனர். சூரிய கிரணங்கள் குளிரில் விறைத்த கைகால்களில் சூடேற்றி விட்டன. பண்டை ஆரியர் காலத்தில் நடந்தது இதுவே; இன்று நடைபெறுவதும் இதுவே.

III

ராஜபோக நகரம், டில்லி

மாபெரும் வீரனும் மக்களுக்கு மிகக் கொடிய சாபம் போன்றவனும் ஆவான், செங்கிஸ்கானுடைய சந்ததியான நொண்டித் தைமூர் என்பவன். அவன் 15 நாட்களே டில்லியில் தன்னைச் சக்கரவர்த்தியாகப்பிரகடனம் செய்து கொண்டு இருந்தபின், திரும்பும்பொருட்டு 90,000 வீரர்களடங்கிய படையுடன் ஸிந்து நதியைக் கடந்தான். பெருத்த பொருளுடன் ஹரித்வாரம், பஞ்சாப் வழியாகத் திரும்பியபின், அவன் இங்கே விட்டுச் சென்றது, அராஜகமும் பஞ்சமும் நோய்களுமே. 'டில்லி வெகு தூரம்' என்று சிங்கமென்ற விருதுபெற்ற பாபர் கைபர் கணவாயைத் தாண்டும் சமயத்தில் தன் வீரர்களிடையே தோன்றிய கலக்கத்தையும், குழப்பத்தையும் கண்டு கூறியதாகச் சொல்லப்படுகிறது. ஆயினும், அவன் ஹிந்துஸ்தானச் சமவெளியில் இறங்கி பானிபத்திலும், பயானாவிலும் போரிட்டு டில்லியில் சிம்மாசனத்தை ஸ்தாபித்துக்கொண்டான். "கடவுளின் கிருபையால் இந்தச் சிரமசாத்தியமான காரியம் எனக்குச் சுலபமாயிற்று" என்று பாபர் தன் தினக்குறிப்பில் எழுதியிருக்கிறான். தைமூரைப்போலன்றி இங்கு தங்குவதற்காகவே பாபர் வந்தவன். அவன் ஆக்ராவில் உயிர் நீத்தான்; அவனுடைய உடல் அவனுக்கு மிகவும் பிரியமானதோர் தோட்டத்தில் அடக்கமாவதற்காகக் காபூலுக்கு எடுத்தேகப்பட்டது. தைமூர் விட்டுச் செல்லாத ஒன்றை பாபர் விட்டுச் சென்றான்; தலைநகரான டில்லியிலிருந்து ஆட்சி புரிந்து முகலாயரென்று புகழ்பெற்ற அரசர்களின் பரம்பரையே அது.

பாபர் டில்லிக்கு வந்தது ஏன்? அவன் பாலியத்தில் துருக்கிஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தின் தலைவன் வீட்டில் தங்கியிருந்தபொழுது அத்தலைவனுடைய கிழத்



பிருதிவிராஜன் ஆண்ட டில்லியின் பாழ்பட்ட தோற்றம்.



புல்லியின் 'புராணகிலா' (பழைய கோட்டை)



குதுப்மினரை ஒத்த அரைகுறையான கட்டடம்.

தாய் அவனுக்கு இந்தியாவைப் பற்றிய கதைகளைக் கூறினாளாம். அவற்றை அவள் தைமூரின் படையில் சேர்ந்திருந்த தன் சகோதரன் கூறக் கேட்டிருந்தாள். ஹிந்துஸ்தானத்தின் விநோதங்களையும் செழித்துப் பரந்த சமவெளிகளையும் அற்புதமான நகரங்களையும் அளவற்ற பொருள் வளத்தையும்பற்றி கிழவி சொல்லக் கேட்கவே, அந்த வாலிபனுடைய மனம் சாமர்க்கண்டைவிடப் பெரிய சாம்ராஜ்யமொன்று அமைப்பதைப்பற்றிக் கனவு காண ஆரம்பித்தது. ஆகவே, அவன் இந்தியாவுக்கு வந்தபொழுது தலைநகரான டில்லியை அடைந்தான். சரித்திரம் என்ற மாலையில் கோர்த்த மணிகளைப்போல், யமுனை நதியின் தென் கரையில் ஒன்றல்ல, இரண்டல்ல, ஆறு டில்லி நகரங்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் சிதைந்து பாழ்பட்டுக் கிடக்கின்றன. ஆனால் பழைய டில்லியும், புது டில்லியும் மொகலாயர் காலத்தையும், பிரிட்டிஷ் ஆட்சி காலத்தையும் இணைக்கின்றன. எல்லாவற்றிலும் மிகப் புராதனமானது இதிஹாஸகாலத்தைச் சேர்ந்த (புராண கிலா) பழைய கோட்டை. குதுப் மீனார், கடைசி ஹிந்து அரசனான பிரித்விராஜனுடைய தலைநகரின் சிதைந்த இடத்தின்மீது முதல் முகம்மதிய அரசர்கள் எழுப்பிய ஸ்தானத்தைக் குறிக்கும். குதுப் மீனாரை ஏழு கோயில்களைத் தகர்த்துக் கொணர்ந்த கற்களைக்கொண்டு எழுப்பினார்களாம்; இங்குமங்கும் காணப்படும் ஒரு சில கம்பங்களையும் நுண்ணிய வேலைப்பாடுள்ள வாயில்களையும் புராதனச் சின்ன ஆராய்ச்சியாளர்களையும், சரித்திர விற்பன்னர்களையும் மயக்கும் ஹிந்து சாஸனங்கள் பொறிக்கப்பட்ட இரும்புத் தூண் ஒன்றையும் தவிர, பழைய டில்லியைச் சேர்ந்ததென்று சொல்வதற்கு வேறெதுவும் காணப்படவில்லை.

"துக்லக் பாத்" கோட்டையும், புனிதமான அமைதி நிலவும் 'கோட்லா' தோட்டங்களும், துக்லக் பரம்பரையை நினைவுறுத்துகின்றன; சிதைந்து சிதறிக் கிடக்கும் டில்லியின் 'காப்' மைதானம் தனது நேர்த்தியான இயற்கைக்

காட்சிகளுடன், லோடி வம்சத்தின் சின்னமாக அமைந் திருக்கிறது. கில்ஜிகளின் டில்லிக்கு 'ஸிரி' என்பது பெயராகும். ஆனால் அந்த நகரம் இப்பொழுது அறவே மறைந்துவிட்டது. குதுப் மீனாரை விஞ்சவேண்டும் என்ற ஆசையினால் ஆரம்பிக்கப்பட்ட கட்டடம் ஒன்றின் அடித் தளமே இன்றும் அவர்களின் பேராசையை புலனாக்கு கிறது.

ஏழாவது டில்லியான முகலாயரின் டில்லி இன் றும் அவர்கள் சிற்பத்திலும், கலையிலும் கொண்ட அன்பைக் குறிக்கும் அரண்மனைகள், மசூதிகள், சமாதி கள், தோட்டங்கள் ஆகியவற்றுடன் விளங்குகிறது. மயிலாசனமும், உலக விளக்கு என்ற கோஹினூர் வைரமும் அதன் பெருமைக்குச் சின்னங்களாக அமைய, ஷாஜஹான் காலத்தில் ஓங்கிய சீருடன் விளங்கிய மொக லாய ஆட்சியின் சிறப்பை இன்றும் விளக்கிக்கொண்டு இருப்பது, பழைய டில்லியின் செங்கோட்டையாகும். அம்பாரியுடன் அலங்கரித்த யானைமீது அமர்ந்து சக்கர வர்த்தி அவுரங்கசீப் பெரிய மசூதிக்கு தினமும் பவனி செல்லும் பாதையிலுள்ள 'சாந்தினி சௌக்' என்பது இன்றும் புகழுடன் மேல்வகுப்பாரின் வாசஸ்தலமாக விளங்குகிறது.

எப்பொழுதும்போல் 'சாந்தினி சௌக்' பிரபல மாகவே இன்றும் உள்ளது. அதன் நெருக்கமான கடைத் தெருக்களில் நானாவிதமான உடைதரித்த பலநாட்டு மக்கள் குழுமியிருக்கிறார்கள். அதன் கடைகளிலும் நடை பாதையிலும் விற்பனைக்குள்ள பொருள்களின் வகை எத்தனையோ! சோப்புகள், அழகுப் பொருள்கள் பல்வகைப் புடவைகள், பாபாஸுகள்; மருந்து வகைகள், பித்தளை முதலிய உலோகப் பாத்திரங்கள்; நகைகள், தந்த சாமான்கள், பித்தான்கள், கொக்கிகள், பெல்ட்கள்; தாம்பூல - பான சாமான்கள்; இரும்புப் பெட்டிகள், உடுப்புப்பெட்டிகள் முதலிய நூற்றுக்கணக்கான சுதேசி, விதேசிப் பொருள்கள் அங்கு விற்கப்படுகின்றன. 'சாந்



டில்லி செங்கோட்டையின் சுவர்.



புதிய டில்லி.யின் சட்டசபைக் கெதிரி
லுள்ள நீரூற்று.

தினீ சௌக்'கில் பல திசைகளிலிருந்தும் வந்துசேரும் தெருக்கள் சந்துகள் முதலியவைகளில் ஒரு காலத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய சித்திரக் கைத்தொழில் களை இன்றும் தொழிலாளிகள் செய்துவருகிறார்கள்; நாள் முழுதும் மோட்டார் முதலிய வாகனங்களிலும், குதிரை சாரட்டுகளிலும், கால் நடையாகவும் ஜனவெள்ளம் இடை யறாது ஓடிக்கொண்டே இருக்கிறது. மோட்டார்களின் சத்தமும், குதிரைகளின் குளம்பொலியும், அங்காடிக் காரர்கள் தம் பொருள்களை விற்க இடும் கூச்சலுடன் சேர்ந்து சகல ரோக நிவாரணி மருந்தின் பெருமை களை உச்ச ஸ்தாயியில் கூவி அனைவருக்கும் அறிவிக்கும் அந்த மனிதனுடைய குரலுடன் கலக்கிறது. இடை யிடையே, சந்துபொந்துகள் வழியாகவும், அகன்ற சாலைகள் வழியாகவும், திருப்பங்கள் வழியாகவும், மூச்சுத் திணற பிரயாணிகள் நிறைந்திருக்கும் மஞ்சள் நிறமுள்ள டிராம் வண்டிகளைச் செலுத்திச் செல்லும் மகா நெஞ்சுர மும் அதிசாமர்த்தியமும் உள்ள டிராம் ஓட்டுகிறவர்கள், 'கிளாங், கிளாங்' என்று மணியை அடித்து வண்டியை நிறுத்துவதால் எழும் ரோதைகளின் 'க்ரீச்' என்ற சப்தம் கேட்கும்.

சாந்தினி சௌக்கினுடைய சந்தடிக்கும், கூட்டத்திற் கும் மேலே—ஏராளமான புறாக்கள் வாசம் செய்யும்— மணிக்கூண்டு கம்பீரமாகத் தலைதூக்கி நின்றுகொண்டு கழியும் ஒவ்வொரு மணியையும் அடித்துத் தெரிவிக்கிறது. பண்டங்கள் வாங்குவதற்காகக் கூட்டத்தினிடையே அடித்துப் பிடித்துக்கொண்டு அலைந்து திரிந்தவர்கள் பொழுது போனதே தெரியாமல் வெகு நேரம் ஆகி விட்டதை உணர்ந்து வேகமாக வீடு திரும்புங்கால் சித்திர வேலைப்பாடமைந்த உயர்ந்த வீடுகளின் பலகணிகளி லிருந்து களிப்புக் கும்மாள துவனியைக் கேட்பார்கள். பழைய நகரத்தின் சத்தம், சந்தடிகளிலிருந்து மிகவும் தொலைவில் அமைந்துள்ளது புதிய டில்லி என்னும் புதிய நகரம். அது முதன்முதலில் பார்க்கும்பொழுது ஆடம்பர மற்று, ஒழுங்காகவும் அடக்கமாகவும் அமைந்திருப்பதா

கத்தோன்றுகிறது. அதனுடைய சர்க்கார் காரியாலயமும், கௌன்ஸில் கட்டடமும் நீர்ஊற்றுகளும், சிங்கார மேடைகளும், பரந்த புல்தரைகளும், பெருத்த பாதை வளைவுகளும், அவற்றின் சித்திர வேலையின் சிறப்பைக் கருதும் பொழுது பாரிஸ், ரோம், லண்டன் முதலிய நகரங்களின் மிக அழகிய ஸ்தலங்களை நினைவுறுத்துகின்றன. புராதன ஞாபக சின்னங்களிலிருந்து மாறுபட்டதும், 'சாந்தினீ சௌக்'கிலிருந்து வேறானதுமான குரலில் செங்கல்லினால் அமைந்த புதிய டில்லி, "நானே ராஜயோகமுள்ள டில்லி" என்று சொல்வதுபோல் தோன்றுகிறது. ஊற்றுகளை அடுத்துள்ள கல் தொட்டிகளில் பிரதிபிம்பிக்கும் கட்டடங்களிலெல்லாம் அதிக வனப்பு வாய்ந்தது கௌன்ஸில் கட்டடமே. இது நிர்மாணமானதிலிருந்து இதனுள் எத்தனை உணர்ச்சி ததும்பும் உபந்நியாசங்களும், சிந்தையைச் சிறைப்படுத்தும் சொற்பொழிவுகளும் நிகழ்ந்திருக்கின்றன! இங்கேதான் சட்டசபையும், ராஜாங்க சபையும் கூடி வாசாமகோசரமாக நாட்டு விஷயங்களைப்பற்றிச் சர்ச்சைகள் நடத்தி வந்திருக்கின்றன.

இங்குள்ள அசோகன் ரோட், அக்பர் ரோட், துக்லக் ரோட், ஜஹாங்கீர் ரோட், விண்சர் சௌக்கம், கானட் வளைவு, கில்ஜி ரோட், ஹார்டிஞ்சு சாலை, ராஜமார்க்கம், ராணி மார்க்கம், பிரித்விராஜ் ரோட், பார்லிமெண்ட் தெரு ஆகியவை போன்ற சாலைகளெல்லாம் 'ஆறிடும் மேடும் மடுவும்' போன்ற இந்தியாவின் சரித்திரத்தை நினைவுறுத்துவனவாய் அமைந்துள்ளன. பார்லிமெண்ட் தெரு, கௌன்ஸில் கட்டடத்தையும் கானட் வட்டத்தையும் இணைக்கிறது. இந்த அகன்ற சாலையில் அகில இந்திய ரேடியோவின் மத்திய ஸ்தாபனம் அமைந்துள்ளது. விஞ்ஞான முறைப்படி அமைந்துள்ள இதன் ஸ்டுடியோக்களில் இருக்கும் நவீன ஒலிப்பதிவு, ஒலிபெருக்கி ஆகிய இயந்திரங்களின் உதவியினால் டில்லியின் ஒலிபரப்புகளெல்லாம் நடைபெறுகின்றன.



புதிய டில்லியிலுள்ள சட்டசபை (நீரில் அதன் நிழல் தெரிகிறது)

ஈட்டிகள் தாங்கி நிற்கும் அகாலி சிக்கியர்கள்.

கானட் ஸர்கஸ் என்பது பெரும் வளைவு மட்டுமல்ல— ஒன்றுக்குள் ஒன்முன பல வட்டங்களால் அமைந்தது. மத்தியில் உள்ளது பசும்புல் பரப்பு. அதை யடுத்து நாற் புறமும் ஊற்றுகளும் கட்டடங்களும் சிறிது உயரத்தில் அமைந்திருக்கின்றன. எல்லாவற்றிலும் பெரியவட்டத் திற்கு வெளியே பெருத்த சாலைகள் செல்கின்றன. புது டில்லியின் இந்தக் கேந்திர ஸ்தானத்தின் மாலைநேரக் காட்சி மனோகரமாய் இருக்கும்! மக்கள் புல்தரைகளில் அமர்ந்து பொழுது போக்குகிறார்கள்; குழந்தைகள் சுற் றித் திரிந்துகொண்டும், பாண்ட் வாசிப்பதைக் கேட்டுக் கொண்டுமிருக்கிறார்கள். இந்தியாவின் எல்லாப் பாகங்களி லிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வந்துள்ள வகை வகை யான மக்கள் இந்தச் சித்திர விசித்திரமான நடைபாதை களில் உலாவிக்கொண்டும் குண்டூசி முதல் கோமேதகம் வரையில் விற்பனைக்கு வைத்துள்ள கடைகளில் நின்று பார்த்துக் கொண்டும், வாங்கிக்கொண்டும் இருப்பதைக் காணலாம். கானட் வட்டத்திற்குப் போகும் சாலைகளில் உள்ள சினிமா கொட்டகைகளுக்குச் செல்லும் கூட்டத் தையும் காணலாம்.

சில சமயங்களில் இந்தமகிழ்ச்சி ததும்பும் காட்சிகள் ஒரே குழப்பமாக மாறுவதுண்டு. பிப்ரவரி மாதத்தின் மாலைகளில் மேகங்கள் ஆகாயத்தில் சூழ்ந்து கொண்டு இடியும், மின்னலுமாகி வளைவைச் சுற்றியுள்ள கட்டடங் களைப் பளபளவென்று சோபிக்கச் செய்யும்; விடாது பொழியும் மழையில் எங்கும் மை இருளாய்விடும்.

மார்ச்சு மாதத்தின் மாலைகளில் காற்று பேய்க் காற்முக மாறுவதுண்டு. அப்பொழுது ஆயிரக் கணக் கான இயந்திர விசிறிகள் ஏக காலத்தில் சேர்ந்து இயங்கு வதுபோல் இருக்கும். அதனல் புழுதித் திரள் கிளம்பிக் கண்ணை மறைக்கும். ஒருவன் ‘புயல்!’ என்று கத்தவே நூற்றுக் கணக்கான குரல்கள் ‘புயல்! புயல்!’ என்று கூவ ஜனங்கள் புல் வெளியிலிருந்தும் நடைபாதைகளி லிருந்தும் தம் வீடுகளுக்கோ, தங்குமிடத்திற்கோ ஓடு

வார்கள். உடனே ஒளிமங்கிவிடவே தெருக்களில் காற்றின் ஓலம் மட்டும் கேட்கும். குதிரை வண்டிகள் தங்குமிடம் காலியாகிவிட, புழுதிக்காற்று காருட்வளைவையே கவிழ்ந்து கொள்கிறது. இந்த சாம்ராஜ்யத் தலைநகரிலேயே இயற்கை இவ்விதமாக மனம் போன போக்காய் இயங்குகிறது!

பொழுது புலர்ந்துவிட்டது. ஆஜ்மீர் வாசல் வழியாகப் புது-டில்லியைக் குறித்துப் போக்குவரவு தொடங்குகிறது. புழுதி மயமான சாலையின்மீது மாட்டு வண்டியின் ரோதைகள் பெருத்த பாரத்தைத் தாங்கி ஊர்கின்றன. தன் ஆபீஸ் தாழ்வாரத்தில் களைத்துத் தூங்கும் குமாஸ்தாவை, குதிரைக் குளம்பொலி திடுக்கிட்டு எழச் செய்கிறது. ஒரு மனிதனையே சுமப்பதற்காக அமைந்த சைக்கிள் வண்டியில் பல பால் தகரங்களை ஏற்றித் தானும் ஏறிவரும் பால்காரன், வாயிலைத் தாண்டி உள்ளே வருகிறான். டில்லியில் இன்னொரு நாள் ஆரம்பமாகிவிட்டது! சாலைகளுக்கப்பால் உயர்ந்த கட்டட வரிசைகளின் மீது அதோ சூரியன் மங்கலாக எழுந்து வருகிறான்!

காலை வளர்ந்து நண்பகலாகவே போக்கு வரவு பெருகுகிறது. முன்னரே கூலிகள்—ஆண், பெண், அவர்களின் குழந்தைகள் யாவரும் பாடிக்கொண்டே அவரவர் வேலைகளுக்குச் சென்றுவிட்டார்கள். யாத்திரிகள் பலவிடங்களிலிருந்தும் குதிரை வண்டிகளில் பெட்டிகளையும், படுக்கைகளையும் ஏராளமாக ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். சூரியனைப் பார்த்தால் மணி $10\frac{1}{2}$ இருக்குமென்று தோன்றுகிறது; போக்கு வரவு அதிகமாகிக்கொண்டேயிருக்கிறது. குதிரை வண்டிகளும், பீடன்களும், சைக்கிள்களும், பஸ்-லாரிகளும், குமாஸ்தாக்களையும், தலைமை குமாஸ்தாக்களையும், உயர்தர ஆபீஸர்களையும் புது-டில்லியை நோக்கிச் சுமந்து செல்லுகின்றன. 11 மணி அடித்துவிட்டது. ரயில் வண்டியின் ‘க்ரீச்’ என்ற குரல் நேரத்தையும், இடத்தையும், தூரத்தையும் ஒருங்கே தெரிவிக்கிறது—மற்றொரு ரயில்

வண்டி இந்தியாவின் ஏதோ ஒரு பகுதியிலிருந்து வெகு தூரம் கடந்து டில்லிக்கு வந்து சேர்ந்துவிட்டது! ராஜாங்கக் காரியாலயத்தை வடக்கு, தெற்கு என்ற இரண்டு பகுதிகளாகப் பிரிக்கும் அகன்ற சாலையில் மோட்டார் வண்டிகள் பவனி போவதைப் பார்க்கிறோம். அவற்றில் உச்ச ஸ்தானத்தில் உள்ள 400 உத்தியோகஸ்தர்களும் நாட்டு நிர்வாகத்தை நடத்த வருகிறார்கள்.

காஷ்மீர் வாசலுக்கு அப்பால் உள்ள நகரத்தின் பகுதி புதிய டில்லியை விடப் புராதனமானதும், பழைய டில்லியைவிடப் புதியதும் ஆகும். டில்லியின் இந்தப் பகுதி சமீபகாலம் வரையில், தற்சமயம் புதிய டில்லி வகிக்கும் ஸ்தானத்தையே தாங்கி நின்றது. சிங்காரப் பாதைகளும், நந்தவனங்களும், விசாலமான பங்களாக்களும், பிற கட்டடங்களும், சகல வசதிகளும் உள்ள போஜன சாலைகளும்—டில்லியின் இந்தப் பகுதியை மிகவும் ரமணீயமாக்குகின்றன. இந்த மத்திய டில்லியில் இப்பொழுதும் சில நிர்வாகக் காரியாலயங்கள் நிலைத்துள்ளன. இதன் ஒரு ஓரத்தில் குதிரைச் சவாரிக்கான மரங்களடர்ந்த சரிந்த சாலை இருக்கிறது. சரிந்து செல்லும் ஒரு சாலை சர்வகலாசாலையின் வாசல்வரை போகிறது. செங்கற்களாலான புதிய டில்லி எழுவதற்கு முன் இந்தியாவின் ராஜப் பிரதிநிதிகள் இங்குதான் வசித்து வந்தார்கள்; இன்றோ, மாகாணத்து வாலிபர்கள் தோட்டங்களில் உலாவவும், விசாலமான அறைகளில் அமர்ந்து படிக்கவும் செய்கிறார்கள். இதே அறைகளில் ஒரு காலத்தில் ராஜாக்களின் ஆடம்பரமான தினசரியை நடைபெற்று வந்தது. இந்த இடத்தின் சூழ்நிலையே இளமையும் நம்பிக்கையும் நிரம்பியதாகும்.

சரிவுச் சாலையின் மேல் மட்டத்தில் அசோகனின் 'கல் தூண்' ஒன்று ஓங்கி நிற்கிறது. அதன் அடியில் இன்றைய பெருமைமிக்க டில்லியின் அற்புதக் காட்சிகளும் யமுனைக் கரையில் வாழ்ந்து வீழ்ந்த பல நகரங்களும் பரந்து கிடக்கின்றன.

IV

ஒரு புராதனப் போர்க்களம்

டில்லியையும் லாஹூரையும் இணைக்கும் சாலையின் நீளம் 300 மைலுக்கு அதிகமாகும். 100-வது மைலை அடுத்து குருக்ஷேத்திர மைதானம் இருக்கிறது. மாலைச் சூரியன் இம் மைதானத்தையே சிவப்புமயமாக்கி மேற்றிசையின் அடிவானத்தில் மறைந்து விடுகிறான். இரு பக்கங்களிலும் தோன்றும் கரிய நிழல்கள் இவ்விடத்தின் தனிமையைப் பெருக்குகின்றன. கரு நீல ஆகாயத்தின்கீழ் தென்படும் உயர்ந்த கரிய உருவங்கள் கோயில் கோபுரங்கள் என்பதைக் காண்கிறோம். கல்லினால் அமைந்த ஒரு குளக்கரையிலிருந்து பார்க்கும் பொழுது சிறிது தூரத்திற்கப்பால் உள்ள நீரும், அந்திப் பனியில் மறைந்திருப்பதால், நன்கு புலப்படவில்லை.

தங்கள் காலத்தைச் சிந்தனையிலும் தியானத்திலும் கழிக்கவும், பகவத் கீதையை அது இயற்றப்பட்ட இடத்திலேயே அமர்ந்து படிக்கவும் விரும்புகிறவர்களுக்காக 'கீதா பவனம்' கட்டப்பட்டது. எளிய வாழ்க்கையைத் திருப்தியுடன் நடத்துகிறவர்களுக்காக—கிணற்றிலிருந்து நீர் சேந்தித் திறந்த வெளியில் சோறு சமைத்து உண்டு, காலையில் எழுந்து குளித்து துணி துவைத்து வெயிலில் உலர்த்தி, திறந்த வெளியிலோ, காற்றோட்டமுள்ள விசாலமான அறையிலோ மெய்ம்மறந்து தூங்கக்கூடியவர்களுக்காக, அமைந்தது 'கீதா பவனம்.' அதில் ஒரு புஸ்தகாலயம் உண்டு; 12-க்கு அதிகமான பாஷைகளில், கீதைக்கு உள்ள எல்லா மொழிபெயர்ப்புகளும் அதில் வைக்கப்பட்டிருக்கின்றன.

குருக்ஷேத்திரத்தில் பார்ப்பதற்கு ஒன்றும் இல்லை; என்றாலும் உணர்ச்சியை எழுப்புவதற்குப் போதிய பொருள்கள் உள்ளன. அங்குள்ள கோயில்களில்



ஸ்ரீ கிருஷ்ணன் பகவத்கீதையை உபதேசித்த குரு க்ஷேத்திரம்.

சில பாழடைந்து இருப்பினும், அவை மிகப் புரா தனமானவையல்ல. ஒரு பெரிய குளத்தைமட்டும் பழைமை பொருந்தியதென்று கூறலாம். விசாலமான சத்திரம் ஒன்று முகலாயர் காலத்தைச் சேர்ந்ததென்று தோன்றுகிறது. இப்பொழுது அது ஆடுமாடுகளை அடைத்துவைக்க உதவுகிறது. நல்ல முன் யோசனை யுடன் அமைக்கப்பட்டுள்ள விஸ்தாரமான கோட்டையி லுள்ள கணக்கற்ற அறைகளையும் அதன் கொத்தளங் களையும் பார்க்கும்பொழுது அது வாசத்திற்காகவும், பாது காப்பிற்காகவும் நிர்மாணிக்கப்பட்டதென்பது புலனு கிறது. அந்தக் கோட்டை இப்பொழுது சிறு பிள்ளை களின் பள்ளிக்கூடமாக இருக்கிறது; குழந்தைகள் குறு கிய கல் படிகளின் வழியாக ஏறி, மேல் தளத்திலுள்ள தங்கள் வகுப்புகளுக்குப் போகிறார்கள். வகுப்புகளின் அறைகளின் வாயில்களின் மேலே 'கடைசியில் சிரித்த வன் சிரிப்பே சிறந்தது', 'ஒரு இழையால் தைத்தால் ஒன்பதிழை மிஞ்சும்', 'பிரிட்டன் கடலெல்லாம் ஆளும் இராணி' என்று பொருள்படும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத ஆங்கிலச் சொற்றொடர்கள் வெள்ளைச் சுண்ணும்புகொண்டு ரோமன் எழுத்துக்களில் பொறிக்கப் பட்டுள்ளன. குருக்ஷேத்திரத்தின் கோட்டையுடன் சம் பந்தமுள்ள அக்பர், ஜஹாங்கீரைப்பற்றியவையும், டில்லி சக்கரவர்த்தியை எதிர்த்துப் போரிட முயன்ற சேனைத் தலைவர்களைப்பற்றியவையும், அவர்கள் இட்ட முற்றுகை கள், அடைந்த வெற்றிகள் ஆகியவற்றைப்பற்றியவையு மான வரலாறுகள் வேறு உண்டு. கோட்டையின் உச்சியில் முகலாயச் சிற்ப முறையில் அமைந்த ஸ்தூபிகளிலிருந்து நோக்குங்கால் நாற்புறமும் பரந்து கிடக்கும் வெளிகளில் இங்கே ஒரு சிறிய கிராமமும், அங்கே ஒரு சிவன் கோயி லின் உயர்ந்த கோபுரமும், அதற்கப்பால் சோலைகளின் இடையே தன் வட்டமான தலையைத் தூக்கிக்கொண்டு நிற்கும் 'கீதாபவன'மும் காணப்படும்.

"இந்தப் பக்கத்தில்தான் பாண்டவ சேனைகள் அணி வகுத்து நின்றன. அதோ, கௌரவப்படை குழுமியிருந்த இடம் இருக்கிறது" என்று குருக்ஷேத்திரவாசியான சந்நியாசி கூறுகிறார். இங்கே பூமி சிறிது சரிவாக இருக்கிறது, அங்கே புல் தரை காணப்படுகிறது; அருகில் ஒரு ஆல மரத்தடியில் கிருஷ்ணனுடைய ரதம் நின்ற இடத்தை நினைவூட்டுவதாக கிருஷ்ணனுடைய பாத-சின்னம் அமைந்த கோயில் ஒன்று உளது. எங்கே தர்மம், நாணயம் உண்மை, நீதி, கௌரவம், நேரிய நடத்தை ஆகிய வற்றுடன் கூடிய வாழ்க்கைக்கு வந்த ஆபத்தைப் போக்க மகாபாரதப்போர் நடந்ததோ, அங்கே இப்பொழுது ஆடுகள் மேய்ந்துகொண்டிருக்கின்றன. ஈட்டிகள் மோதி மின்னல் பரப்பிநின்ற இடத்தில் இப்பொழுது சூரிய வெளிச்சத்தில் புல்-அரிவாள்கள் மின்னிக்கொண்டிருக்கின்றன. யுத்த கோஷங்களும், வீர முழக்கங்களும் காது செவிடுபடும்படி ஓங்கி நின்ற இடத்தில் இப்பொழுது ஆடுகளின் தீனக்குரல்கேட்கிறது. கௌரவர்களை எதிர்த்துச் சமர் விளைத்துப் பாண்டவர்கள் வெற்றி வாகை சூடிய இடத்தில் தலையில் சும்மாடும் உடலில் கம்பளியும் தாங்கிய இடையர்கள் மந்தைகளைத் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கிறார்கள்.

குருக்ஷேத்திரத்தின் குளக்கரையில் புராதனமான மரநிழலில் அமர்ந்தால் என்னென்னவோ சென்ற காலச் சிந்தனைகள் எழுகின்றன. நிச்சப்தமான உச்சிப்பொழுதில் பெரிய சுராமீன் ஒன்று நீரின் வெளியே துணிந்து தலை நீட்டித் தனக்கு வேண்டிய தீனியைப் பிடித்துக் கபளீகரம் செய்தபின் கோரைகளுக்கும் தாமரை இலைகளுக்குமிடையே புகுந்து மறைகிறது. ஒரு சிறிய தீவின் கோயிலை அடுத்துப் பூத்துப் பரந்து நிற்கும் மரத்தின் ஊதாநிறம், கரும்பச்சை மாமரங்களுக்கும், சிவப்பு நிறச் சுவர்களுக்குமிடையே நன்கு எடுத்துக் காட்டுகிறது. ஒரு



முகலாயர் காலத்தில் கட்டப்பட்டு குருக்ஷேத்திரத்திலுள்ள சத்திரம்.



ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருவடி பதிந்த இடம்.—குரு க்ஷேத்திரம்.

யாத்திரி பகவத்கீதையின் சுலோகத்தை இனிய குரலில் பாராயணம் செய்வது எங்கிருந்தோ அமைதியான காற்றில் தவழ்ந்து வருகிறது :

"பிறந்ததுமில்லையது இறப்பதுமில்லை,
நேற்றோடு இன்றும் நாளையும் தொடாததை,
பிறவாதின்றுபோல் என்றுமிருந்து
பழையதிற் பழையதாய், மெய்யழிவுறினும்,
அழியாதான்மா"

இவ்விடமே அறிவை மயக்கும் அமைதி நிரம்பியதாகும்!

V

லாகூர்

பஞ்ச நதிகள் பாயும் பாஞ்சால நாட்டின் தலைநகரான லாகூரை, சிறப்பில் டில்லி ஒன்றுக்கே சிறிது குறைந்த தென்று சொல்லவேண்டும். நூற்றுக் கணக்கான வருஷங்களாக கலகங்களுக்கெல்லாம் அது கேந்திரமாக இருந்திருக்கிறது. அது அரசர்கள் முடிதரிப்பதையும் ராஜ சபையின் ஆடம்பரங்களையும் வட, மத்திய ஆசியாவிலிருந்து வந்த கொள்ளைக் கூட்டத்தாரின் அட்டூழியங்களையும், மதப் பற்றும் போர்வீரமும் ஒருங்கே கலந்து ஓங்கி எழுந்த ஒரு புதிய ஜாதியையும் கண்டிருக்கிறது. பரம்பரையாகப் புகழ்பெற்ற லாகூர் இதிஹாஸ புராணக் காலங்களிலேயே இருந்ததாம். ஆனால் சரித்திரத்தில் முதன் முதல் அது குறிப்பிடப்படுவது முதல் நூற்றாண்டிலாகும். அங்கேயுள்ள முகலாயர் அமைத்த அத்புதமான சிற்ப வேலைப்பாடுள்ள கட்டடங்களும் ஞாபகச் சின்னங்களும், குழப்பம் மிகுந்திப்பினும் உள்ளத்தைக் கவரும் அதன் சரித்திரத்தின் புகழ் பெற்ற ஆடவர்களையும், அழகிய பெண்களையும், கொடிய வீரர்களையும், நாகரிகமான பிரபுக்களையும் கொண்ட லாகூரின் நீண்ட ஆயுளின் மைல்கல்களாக அமைந்துள்ளன. லாகூரும் அதன் சுற்றுப் புறங்களும், அங்குள்ள புகழ்பெற்ற கோட்டை அரண்மனைகள், சமாதிகள், தோட்டங்கள், ஜனநெருக்கமான கடைத்தெருக்கள், கோயில்கள், ஆகாயத்தை அளாவும் கோரிகள் ஆகியவற்றுடன் ஒரு பரந்த பிராந்தியத்தின் வளர்ச்சியையும் சரித்திரத்தையும் ஒரே இடத்தில் சேர்த்துக் காட்டும் கண்ணாடியாக உள்ளன. இந்த நகரத்தில் பல தடவைகளில் தகர்த்துச், சிதைக்கப்பட்டு மீண்டும் எழுப்பப்பட்ட எத்தனையோ வகைச் சிற்பச் சைலிகளைக் காணலாம். உபயோகத்தையே கருத்திற்கொண்டு அமைத்தவைகளும், கவர்ச்சியையே



அக்பர் அமைத்த லாகூர் கோட்டை.



நவலாக் (ஒன்பது லட்சம்) மாளிகையின் சுவரிலுள்ள சித்திர வேலைப் பாடுகள்.



லாகூர் கோட்டையின் உள்ளேயுள்ள- ஒன்பது லட்ச பங்களா.

நோக்கமாகக் கொண்டு ஆற்றல் பெற்றிருந்தும், வரவர இழிவு எய்திவரும் அரசர்கள் அமைத்தவைகளும், சமய நோக்குடன் சிறிதும் ஆடம்பரமில்லாது அமைத்தவைகளும், மருந்துக்கும் கற்பனையேயில்லாத முரட்டுப் படை வீரர்களால் எழுப்பப்பட்டவைகளும் என்று கட்டடங்களில் எத்தனையோ வகை. லாகூர் இரு முறை தன் சரித்திரத்திலேயே சிறப்பின் சிகரத்தை எட்டிப் பிடித்ததென்று கூறலாம்—(1) முகலாயரின் காலத்திலும், (2) சீக்கிய சிங்கமான மகாராஜா ரஞ்ஜித் சிங்கின் ஆட்சியிலும். 'முகலாய சாம்ராஜ்ய ஒருமை' என்ற மாளிகையின் சிற்பியான அக்பரையும் சீக்கியர்களிடையே ஊக்கத்தையும் ஒற்றுமையையும் வளர்த்து அற்பாயுளான சீக்கிய ராஜ்யத்தை அமைத்த ரஞ்ஜித் சிங்கையும் ஒரே இனத்தவரென்று கருதலாம். முன்னவர் தற்பொழுதுள்ள பெரிய கோட்டையை ஒரு பழைய கொத்தளத்தின்மீது எழுப்பி அதன் நாற்புறமும் பெரிய காவற் சுவர் அமைத்தார். சீக்கியரோ (ரஞ்ஜித் ஸிங்) பஞ்சாபின் பெரும் பகுதியைக் கைப்பற்றிய பிறகு லாகூரைத் தலைநகராக்கி அக்பரின் கோட்டையைப் புதுப்பித்து முகலாயரின் சுவர்களை மேலும் உயர்த்தினார். ஆங்கிலேயர் பஞ்சாபைக் கைப்பற்றியதற்கு முந்திய காலத்தைச் சேர்ந்த மிகப் பழையதும் புதியதுமான சரித்திரப் பிரசித்திபெற்ற சின்னங்கள் இவை இரண்டுமாகும்.

முகலாயர்களின் காலமே லாகூருக்கு யோக காலமாகும். அக்பரும் ரஞ்ஜித் சிங்கும் பாதுகாப்புக்காகக்கோட்டைகள் கட்டினார்களென்றால், அழகுக்காகவும் ஆனந்தத்திற்காகவும் கட்டடங்கள் நிர்மாணித்த இரண்டு சக்கரவர்த்திகளும் உண்டு. பஞ்சாபின் கடும் கோடையிலும் 'குளுகுளு' என்று இருக்கும்படியாகத் திட்டம் அமைத்துப் பார்ப்பதற்கு வெகு நேர்த்தியான சிற்ப வேலைகளுடன் அமைக்கப்பட்ட 'சயனமாளிகை' என்ற அரண்மனை ஜஹாங்கீருடைய கலைப்பற்றுக்கும் சுக ஆசைக்கும் உதாரணமாகும். 'நௌலகியா' அல்லது 'ஒன்பது லக்ஷ' மாளிகை என்ற ஷாஜஹானால் ஒன்பதுலக்ஷ ரூபாய்

செலவில் கட்டப்பட்ட மாளிகை அவன் அமைத்த தோட்டங்களில் உள்ள புஷ்பங்களையும் அவைகளில் விளையாடும் பக்ஷிகளையும் தத்ரூபமாகக் காட்டும் பொருட்டு ஏராளமான செலவில் பல நிறமுள்ள செயற்கை - ரத்தினங்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பது - அந்தச் சக்ரவர்த்தியின் உதாரித்தனத்தை வெளியிடுகிறது. இதே சக்கரவர்த்தி, பிற்காலத்தில் ரஞ்ஜித் ஸிங் தமது தர்பாருக்காக உபயோகித்த கண்ணாடிகளாலேயே நிர்மாணிக்கப்பட்ட 'சீசா' மாளிகையை எழுப்பினர்.

ஆடம்பரமில்லாமல் அக்காலத்துச் சம்பிரதாயத்திற்கு எதிராக வெள்ளைச் சலவைக் கற்களால் அமைக்கப்பட்டுள்ள அனூர்கலியின் சமாதி லாகூரின் மற்றொரு சிறந்த சின்னமாகும். இளவரசன் சலீம் தன் தந்தையின் தர்பாரில் அவருடைய அன்பிற்குப் பாத்திரமானவளைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்தாகக் கதை. இதைக் கண்ட அக்பர் அனூர்கலி என்ற அந்தப் பெண்ணை, தன் அந்தப்புரத்திலிருந்து உடனே பிரஷ்டம் செய்து உயிருடன் புதைத்து விடும்படி உத்தரவிட்டானும். பலவாண்டுகளுக்குப் பிறகு அவள் புதையுண்ட இடத்தில் ஒரு சமாதி எழுப்பி அதன்மீது 'ஆ! என் அன்பைக் கொள்ளைகொண்டவளுடைய முகத்தை நான் மீண்டும் பார்க்க முடியுமானல் உலகம் உள்ளவரையில் அதற்காக நான் கடவுளுக்கு நன்றி செலுத்திககொண்டிருப்பேன்!' என்று எழுதச் செய்தான். ஜஹாங்கீர் க்ஷணச்சித்தம் உள்ளவனக இருந்திருக்கவேண்டும். ஏனென்றால் இந்த வாசகம் வெளியிடுவதைப்போல அவன் அவ்வளவு அதிகமாக அனூர்கலியையே நினைத்துக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. அவனுடைய ராணி நூர்ஜஹான் பலவருஷங்கள் வரை அவன் அன்பைப் பெற்று அவன் அருகிலிருந்து மிகவும் திறமையாக ஆட்சி செய்திருக்கிறுள்.

நூர்ஜஹான் லாகூர் கோட்டையிலிருந்து சிறிது தூரத்தில் தன் சொந்த உபயோகத்திற்காக ஒரு தோட்டம் அமைத்திருந்தாள். 'தில்குஷ்' (ஆத்மானந்தம்) என்று



அனார்-கலி சமாதி.



லாகூரிலுள்ள ஷாலிமார் நந்தவனம்.



லாகூருக்குப் புறத்தேயுள்ள ஜிஹாங்கீர் சமாதி.

லாகூர் கீழ்மால் வீதியிலுள்ள பஞ்சாப் விச்வவித்தியாலயம்.

அவள் அதற்குப் பெயரிட்டாள். 1627-ம் வருஷம் இதே தோட்டத்தில் உள்ள 'ஷா தாரா' என்ற அழகிய சமாதியில் ஜஹாங்கீரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

நகரத்திலிருந்து சில மைல் தூரத்தில் 'ஷாலிமார்' என்ற பிரசித்தி பெற்ற தோட்டங்கள் இருக்கின்றன. அவை 17 வது நூற்றாண்டில் ஷாஜஹானால் திட்டம் வகுக்கப்பட்டு அவனுடைய புகழ்பெற்ற எஞ்ஜினியரான அலி மர்தனால் அமைக்கப்பட்டன. லாகூரைச் சேர்ந்த ஷாலிமார் தோட்டங்கள், காஷ்மீரத்தில் ஜஹாங்கீரினால் அமைக்கப்பட்ட அதே பெயருள்ள தோட்டங்களின் பிரதியேயாகும்.

பழையகாலத்து லாகூர் நகரத்தைப்போல் அல்லாது சென்ற ஒரு நூற்றாண்டில் லாகூர் நகரம் மிகவும் நேர்த்தியான உருவம் பெற்றிருக்கிறது. இந்தப் புதிய தலைநகரத்தின் இடையே கீழ் மேல் என்ற இரு வீதிகளும் உடலின் இரு முக்கிய ரத்தக் குழாய்களைப்போல் ஓடுகின்றன. முகலாய-சீக்கிய காலத்தின் சின்னங்களான கட்டடங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவையாக, சாலைகளின் இரு பக்கங்களிலும் அருகிலும் புதிய கட்டடங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவை பஞ்சாப் சர்வகலாசாலை, கண்காட்சிச் சாலை, உயர் நியாயாலயங்கள், பாங்குகள், உள்ளூர், இந்திய, வெளிநாட்டுக் கம்பெனிகள் ஆகியவையாகும். பார்ப்போரை பிரமிக்கச் செய்யும் சட்டசபை கட்டடமும், பரந்து கிடக்கும் கவர்னர் மாளிகையைச் சுற்றிய மைதானமும், லாரன்ஸ் தோட்டங்களும், பத்திரிகைக் காரியாலயங்களும், அகில உலகத்திலிருந்தும் வந்து விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள புஸ்தக, பத்திரிகைக் கடைகளும் அங்கேயே உள்ளன.

சில மாலைகளில் ஜனங்கள் சாலையில் உலாவும் பொழுது பார்த்தால் தலைநகரம் எவ்வளவு சுறுசுறுப்பாய் இருக்கிறதென்பது தெரியவரும். அங்குள்ள போக்கு வரவு சாதனங்கள் எத்தனையோ வகையாகும். டோங்கா

(குதிரை வண்டிகள்) டம்டம் (பீட்டன்கள்) சத்தம் போடும் மோட்டார் பஸ்கள், சந்தடியே இல்லாது காற்று வேகத்தில் போகும் விலை உயர்ந்த மோட்டார்கள், எல்லாம் உண்டு. காப்பி ஹோட்டல்களிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும், பிரபுக்கள்முதல் சாதாரண ஜனங்கள் வரை பல வகுப்பு மக்களையும் காணலாம். அகன்ற சாலைகளின் இரு ஓரத்திலும் உள்ள குறுகிய பாதைகளில் ஜனங்கள் நடந்து போகிறார்கள். பெண்கள் அழகிய சேலைகளும், அவற்றுக்குப் பொருத்தமான ஜோடுகளும் அணிந்தோ, பஞ்சாபி மேலங்கியும் பைஜாமாவும் மெல்லிய முகமூடியும் அணிந்துகொண்டோ இருக்கிறார்கள். ஆண்கள் அணியும் உடைகளில் எத்தனையோ வகை. மேல் நாட்டு உடைதரித்திருந்தும் தங்கள் மதத்திற்குரிய தலைப் பாகையுடன் விளங்கும் சீக்கியர் ஒரு வகை. காக்கி உடை தரித்த படைவீரர்களும் ஆபீஸர்களும், பழுப்பு நிறம் உள்ள கால், மேல் சட்டைகள் அணிந்த ஆகாயப் படையைச் சேர்ந்தவர்களும் வெவ்வேறு வகை. சிலர் முழங்கால் வரையில் தொங்கும் நீண்ட கோட்டும், கால்களுடன் ஒட்டிய நிஜாரும் அணிந்து தலையில் சாதாரணக் குல்லாயோ விசேஷமான தலைப்பாகையோ தாங்கிச் செல்கிறார்கள். வேறு சிலரோ கதர் ஆடையணிந்து காந்திக் குல்லாயுடன் விளங்குகிறார்கள்.

நகரத்தில் சுறுசுறுப்பான கடைத் தெருக்களும், உன்னதமான வீடுகளும், அகன்ற வீதிகளும் நாகரிகமான பகுதிகளும் 'மாடல் டவுன்' என்ற அழகிய விஸ்தரிக்கப்பட்ட புதிய நகரப் பகுதியும், வெள்ளைக்கார, இந்தியத் துருப்புகள் தங்கியுள்ள கண்டோன்மெண்டும் ஆக பழையதும், புதியதும் கலந்து உள்ளது. காலம் மாறுவதால் லாகூர் நகரமும் மாறி, தன்னுடைய எல்லைகளை மிகவும் விஸ்தரித்துக் கொண்டிருக்கிறது. அதனிடம் பரம்பரையாக வந்துள்ள சிறப்புக்களும்—ஞாபகச் சின்

னங்கள், பழக்கவழக்கங்கள்—புதிதாய்ச் சேர்த்துக்கொண்டவைகளும் ஆகிய எல்லாம் சேர்ந்து மேல்நாடும் கீழநாடும் ஒன்று கூடியதுபோல் ஆகியிருக்கின்றது. லாகூரைப் பார்த்தால் மகிழ்ச்சியும், வருத்தமும் ஒருங்கே உள்ளத்தில் எழுகின்றன. ஆனால், இங்கே மகிழ்ச்சிக்குரிய அம்சங்கள் மட்டும் எங்கும் இருந்து, வருத்தத்திற்கு ஒரு காரணமும் இல்லாதிருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது. வருத்தத்திற்குக் காரணம், சென்றவிடமெல்லாம் காணப்படும், ஏழ்மையும் பசியும் பட்டினியும் கடனும் வதைக்க, பெயரும் புகழும் பெற வகையின்றி எப்படியோ உயிர்வைத்துக்கொண்டுள்ள நடைபிணங்களான மக்களே.

VI

மறைந்த நகரங்களின் மங்கிய சித்திரங்கள்

பார்லாமும் ஜோஸபத்தும் என்ற மத்திய யுகத்தின் கதை ஒன்றை ஆராயும் பொழுது ஆல்டுஸ் ஹக்ஸ்லீ கூறுவதாவது: "கௌதமருடைய சரித்திரத்தின் சிதைந்த வரலாற்றைத் தவிர புத்த மதத்தைப் பற்றி கிறிஸ்துவ நாடுகள் ஏதும் கேள்வியுறாது இருந்தன என்பது சரித்திரத்தின் துக்ககரமான அம்சங்களுள் ஒன்றாகும். மேல் நாட்டில் சமீப காலம் வரையில் புத்த பகவான் தத்துவம் நிறைந்த ஒரு கட்டுக்கதையின் நாயகனாக மட்டில் திகழ்ந்தது மிகவும் வருந்தத் தக்க விஷயம்.''

புத்த பகவான் தாம் பிறந்து உபதேசித்த நாட்டைவிட வெளி நாடுகளிலேயே அதிக அன்பர்களையும் அடியார்களையும் பெற்றிருக்கிறார் என்பதும் வருத்தத்திற்குரிய விஷயமே அல்லவா? புத்த மதத்தின் பெருத்த சாஸ்திரீய நூல்களிலிருந்தும், புத்தரைப் பற்றிய கதைகள் வரலாறுகளிலிருந்தும், வெகு தொலைவிலிருந்து வந்த புத்த பிக்ஷுக்கள் எழுதிவைத்திருக்கும் யாத்திரை வர்ணனைகளிலிருந்தும், இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் காணக்கிடைக்கும் சின்னங்களிலிருந்தும், சிற்பங்களிலிருந்தும், புதையுண்டு மறைந்த சில நகரங்களைத் தோண்டும்பொழுது வெளியாகும் புராதனப் பொருள்களிலிருந்தும், புத்தருடைய தத்துவங்களும் உபதேசங்களும் அவருடைய நாட்டிலிலேயே பரிமளித்த அந்தக் காலத்தைப் பற்றி நாம் கற்பனை செய்து பார்க்கமுடியும். இன்று அழிந்த பல ராஜ்யங்களின் புதைக்களமாக இருப்பினும் அக்காலத்தில் தக்ஷசிலம் ஓர் புகழ்பெற்ற நகரமாக விளங்கி வந்தது.

இந்திய சரித்திரத்தின் பராக்ரமம் மிக்க மன்னர்களுள் ஒருவனான அசோகன் இளவரசனாய் இருந்த காலத்

தக்ஷசிலக் கண்காட்சிசாலையி
லுள்ள புத்தர்முகம்.



தக்ஷசிலத்தில் அசோகன் எழுப்பிய 'தர்மராஜிக ஸ்தூபம்'



தக்ஷசிலத்தில் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்ட
கழிவு நீர்க்கிணறு.

புத்தமடங்களிலுள்ள சிதைந்த விக்கிரஹங்கள்—தக்ஷசீலம்.

தில் ஆண்ட முதல் நகரம் தக்ஷசீலமே. அவன் சக்கரவர்த்தியான பிறகு புத்த மதத்தைத் தழுவினன். அவனது பேராதரவில் தக்ஷசீலம் அழகிலும் புகழிலும் ஓங்கி விளங்கியது. அசோகன் தன் மகனையும் இந்த நகரத்திற்கு ராஜப் பிரதிநிதியாக அனுப்பி வைத்ததிலிருந்து இதன் முக்கியத்வத்தை அவன் உணர்ந்திருந்தது தெரிகிறது. தக்ஷசீலத்தின் மேடுகளைத் தோண்டியதில் வெளியான எண்ணற்ற புராதனப் பொருள்களிலிருந்தும் 'ஹாரோ' பள்ளத்தாக்கு முழுவதும் ஒரு காலத்தில் நிரம்பியிருந்த புத்த மடங்களிலிருந்தும் புத்த காலத்தில் கலை மலர்ந்து வளர்ந்த வகை புலனாகும். கம்பீரமாக அமைந்துள்ள ஆதி புத்த காலத்தின் சிற்பங்களும் மிகச் சிறந்த சித்திர-சிற்பக் கலைகளுக்கு உதாரணங்களும் நிரம்பியுள்ள தக்ஷசீலம் எவ்வாறு மதத்திலிருந்து எழும் உத்ஸாகம் கலைகளாகப் பரிணமிக்கிறது என்பதைக் காட்டுகின்றன. தக்ஷசிலம் புத்த மதத்திற்குக் கேந்திரமாய் இருந்தது மட்டுமல்ல; கௌதம புத்தரின் அவதாரத்திற்கு வெகுகாலம் முன்னரே ஸம்ஸ்கிருத இலக்கியத்தில், ஒரு பிரஸித்தமான சர்வகலாசாலையாகவும் அகில உலகுடனும் தொடர்புள்ள ஒரு வியாபார-கேந்திரமாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

உண்மையில் மூன்று தனி ஸ்தலங்களில் அமைந்துள்ள பல புராதன நகரங்களே தக்ஷசீலம் எனப்படுவது. 'பீர்மேடு' என்ற மிகப் புராதன ஸ்தலத்தில் ஒன்றின் மேல் ஒன்றாகக் காணப்படும் பாழடைந்த பல நகரங்களின் சின்னங்களை ஆராயுங்கால் அவைகி. மு. 7 வது நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று தெரிகிறது. இவைகளுள் ஒன்றில் அலெக்ஸாண்டர் என்ற கிரேக்க மன்னனின் படையெடுப்பைக் குறிக்கும் பொருள்கள் மிகுந்திருக்கின்றன. அசோகன் புத்தமதத்தைத் தன் அரசாங்க மதமாக்கிய பொழுது அவன் அனுப்பிய பிக்ஷுக்கள் 'பீர்' மேட்டிற்கே வந்தார்களாம். பீர் மேட்டின் நகரங்களின் எஞ்சிய பகுதிகளைப் பார்க்கும்பொழுது அந்தப் புராதன காலத்தில் வீடுகளும் தெருக்களும் எவ்

வாறு நிர்மாணிக்கப்பட்டன என்பது தெரிகிறது. தக்ஷசீலத்தின் 'சிர்காப்' என்ற இரண்டாவது பகுதியோ கண்டு பிரமிக்கத்தக்க நகர நிர்மாண முறையை ஆதாரமாகக் கொண்டு விளங்குகிறது. தென் வடலாக நகரத்தின் நடுவில் உள்ள ராஜவீதியும், ராஜவீதியிலிருந்து நேர் கோணமாகப் பிரிந்து செல்லும் கிளைவீதிகளும், தனித் தனிப் பகுதிகளுடன் அமைந்துள்ள ராஜ மாளிகையும் அற்புதமானவை. அங்கு கிடைத்துள்ள கணக்கற்ற பாத்திரங்களும், தினசரி வாழ்க்குதவும் பிற கருவிகளும், நாணயங்களும், நகைகளும், பொம்மைகளும், பெருத்த மதிற்சுவர்களும், கோபுர வாயில்களும், தக்ஷசீலத்தைச் சேர்ந்த இந்த 'சிர்காப்' நகரம் எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாய் இருந்திருக்கவேண்டும் என்பதை விளக்குகின்றன. பாரஸீகர்களின் கடவுள் ஆராதனைக்காக அமைந்ததென்று நம்பப்படும் 'ஜண்டியால்' என்ற கோயிலும், ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் வழங்கியதாகக் கூறப்படும் இருதலைக் கழுகின் சின்னமும், தக்ஷசீலத்திற்கு வெளிநாடுகளுடன் தொடர்பிருந்ததற்கும், அது இந்தியாவுக்கும் ஆசியாவுக்கும் நடந்துவந்த வாணிபத்துக்கு முக்கிய இடமாக இருந்ததற்கும் அடையாளங்களாகும்.

மூன்றாவது ஸ்தலமான 'ஸிர்ஸூக்'கின் சின்னங்கள் பீர்மேட்டைவிடக் குறைவாகவே கிடைக்கின்றன. அது 5வது நூற்றாண்டில் வெள்ளை ஹூணர்களால் அழிக்கப்பட்ட தக்ஷசீலத்தில் பெருமையுடன் ஆண்ட கடைசி ராஜகுலத்தின் தலைநகரமென்பதை அறிவதற்கு வேண்டிய அடையாளங்கள் மட்டும் கிடைக்கின்றன. சைனாவிலிருந்து வந்த முதல் யாத்திரி தனது புத்ததேச யாத்திரையில் எழுதியிருக்கும் குறிப்புக்களிலிருந்து அவன் ஸிர்சுக் நகரத்திற்கு வந்திருக்க வேண்டுமென்வி தெரிகிறது. அது அழிந்து 2 நூற்றாண்டுகள் ஆனபின்பு யுவான் சுவாங் என்ற வித்வானான சீன யாத்திரி அவ்



ஜண்டியால் கோயில்—சிர்காப், தக்ஷசிலம்.

தட்சசிலத்தின் குழந்தைகள்.

தக்ஷசிலத்திலுள்ள கல்காட்சிச்சாலையின் உட்புறம்.

விடத்தில் சில பாழடைந்த புத்த மடங்களையும் ஸ்தூபங்களையுமே கண்டதாகவும், அவைகளில் அப்பொழுதும் அற்புதங்கள் நடைபெற்றதாகவும் எழுதியிருக்கிறான்.

'ஸிர்சுக்' சிறப்புடன் விளங்கிய காலமே புத்த மடங்கள் ஓங்கிய காலமாக இருந்திருக்கலாம். கணக்கற்ற பாழடைந்த அந்த மடங்கள் 'ஹாரோ' பள்ளத்தாக்கில் காணக் கிடைக்கின்றன. மோரா மொராது, ஜௌலியன் என்ற மடாலயங்களைச் சேர்ந்த பிக்ஷுக்கள் ஹத்யால் மலைகளின் வறண்ட பசுமையற்ற சிகரங்களிலிருந்து தூய பற்றற்ற உள்ளத்துடன் கீழே பள்ளத்தாக்கில் பரந்து கிடந்த நகரத்தின் வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கலாம். ரஹஸ்ய மயமான திருப்தியுடன், அவர்கள் தமது அறைகளில் அமர்ந்து தியானிக்கவோ, தம்மிடமுள்ள அபூர்வமான நூல்களை ஆராயவோ, அரைகுறையாக விட்டிருந்த புத்த விக்கிரகத்தைப் பூர்த்தி செய்யவோ திரும்பிப் போயிருக்கலாம். பங்கமான இச்சிலைகளிற் சில இன்றும் தியானத்தில் அமர்ந்திருப்பதாகவே தோன்றுகின்றன.

தக்ஷசிலத்தின் வெளிப்பட்டுள்ள நகரங்களிலும் மடாலயங்களிலும் நிலவும் அமைதியும், சிதைவுற்ற ஆடம்பரமில்லாத அற்புதமான சிலைகளில் காணும் சாந்தியும் புத்தருடைய துறவையும், மன அமைதியையும் பிரதிபலிக்கின்றன. அவை இந்த உலகத்தின் நிலையாமையையும் நற்சிந்தனை, நல்வாழ்வு நல்லறிவு ஆகியவற்றின் சிறப்பையும் பறைசாற்றுகின்றன.

இந்தப் பாழடைந்த இடங்களின் பழைய வரலாறுகளை விளக்குவதற்கே போலும், பீர்மேட்டிலிருந்து சிறிது தூரத்திலுள்ள குன்றின் உச்சியில் ஒரு புதிய கட்டடம் விளங்குகிறது. அதன் சுவர்கள் விலைமதிக்கவொண்ணாத பொக்கிஷங்களைப் பாதுகாத்து நிற்கின்றன. அந்தப்

பொக்கிஷங்களோ அவற்றை முதலில் நிர்மாணித்தவர்களுக்கும், இப்பொழுது தோண்டித் தேடிக் கண்டுபிடித்த புராதனச் சின்ன விற்பன்னர்களுக்கும் பெருமை அளிப்பவையாகும். இந்தக் காட்சிச் சாலையைச் சுற்றிலும் உள்ள புல்வெளிகளிலிருந்து பார்த்தால் ஹதியால் குன்றுகளும், ஹாரோ நதியும், பாழடைந்த நகரங்களும் மேடுகளும் நிறைந்த அதன் பள்ளத்தாக்கும் தெரிகின்றன. தக்ஷசிலம் தாழ்வுற்று மறைந்ததிலிருந்து தாமும் மண்ணுள் மறைந்துகிடந்த புத்த விக்கிரகங்களின் முகங்களில் நிலவும் சாந்தி இந்தப் பிரதேசமெங்கும் நிலவுகிறது.



சிக்கியர்களின் குருதுவாரத்தின் உள்ளேயுள்ள சித்திரக் காட்சிகள்.



சீக்கியரின் தங்கக் கோயிலில் உள்ள ஒரு ஸ்தூபி.

சீக்கியர் குடும்பத்துடன் திருவிழாவுக்கு வந்திறங்குகிறார்கள்.

VII

பொற்கோயில்

பஞ்சாபின் கோடைக்கால சூரியனைப் பலவகைகளில் ப்ரதிபிம்பித்து தகதக வென்று மின்னிக்கொண்டிருக்கும் கோயிலின் தங்கமுலாம் பூசிய விமானத்தை ஏறிட்டுப் பார்க்கும்பொழுது கண்கள் கூசுகின்றன. 'தாரண தரண' (ஏழையைக் கரையேற்றுவோன்) னுடைய தங்கக் கோயிலின் வனப்பு அனைத்தும் அதை அடுத்த தீர்த்தத்தில் பிரதிபிம்பிக்கிறது. நீரில் தெரியும் நிழலுரு தத்ரூபமான அழகுடன் குளிர்ச்சியாய் இருப்பதால் நமது கண்கள் அகன்று அதன் அழகனைத்தையும் ஆவலுடன் பருகுகின்றன. குளக்கரையில் அழகிய விருக்ஷங்கள் அணிவகுத்தாற்போல் வளர்ந்து தழைத்துள்ளன. குளத்து நீர் மகாரோகிகளுக்கும் ஆரோக்கியத்தை அளிக்குமென்று கூறப்படுகிறது. சீக்கியர்கள் பெரிதும் விரும்பும் உத்ஸவ தினங்களைத் தவிர மற்ற நாட்களில் மரநிழலில் குளத்தின் படிக்கட்டுகளின் எந்த இடத்திலும் அமைதியும் ஏகாந்தமும் திகழ்கின்றன.

சிற்பத்திலும் சரி, அமைப்பிலும் சரி, எதிர்பாராத அழகுடன் விளங்கும் இந்த தாரணதரணனுடைய கோயில் அமிர்தசரசிலுள்ள தங்கக் கோயிலைப்போல் பிரசித்தம் அடையவில்லை என்பது உண்மையே. இதற்குக் காரணம், இது பாதையைவிட்டு விலகித் தொலையில் அமைந்திருப்பதே போலும். பஞ்சாப் சிங்கமான ரஞ்ஜித் ஸிங்கை இந்தக் கோயிலுக்கு அழைத்தவர்களுடைய சந்ததியார்கள் முக்கியமாக கவனிக்கும் இரண்டு விஷயங்களில் ஒன்று மதம், மற்றது ஏழைகளுக்கு உதவி. சீக்கிய சிங்கம் இங்கு வந்ததற்குக் காரணம் அவர் அமிர்தசரசின் தங்கக் கோயிலைப்போலவே இதனிடமும் பக்தி கொண்டிருந்ததே. அவர் இதன் விமானத்திற்குத் தங்கமுலாம்

பூசுவித்து சுவர்களையும் மேல்தளத்தையும் அலங்கரிக்கச் செய்தார்.

ஜஹாங்கீருடைய ஆட்சியில் இளவரசன் குஸ்ரூ குரு அர்ஜுனனிடம் அடைக்கலம் புகுந்தது தாரண தரணனுடைய கோயிலிலேயே. அந்த குரு இளவரசனுக்கு அடைக்கலமும், பொருளும் அளித்தார். பின்னர் குஸ்ரூ பிடிபட்டபொழுது சக்கரவத்தியினல் கொடிய மரண தண்டனை அளிக்கப்பட்டார். இந்தப் புகழ்பெற்ற கோயிலின் சித்ர, விசித்ர ரூபங்களைப் பிரதிபிம்பித்துக் காட்டும் தாரண தரணனுடைய குளம் குரு அர்ஜுனன் அமைத்ததே.

நீரில் தெரியும் நிழல்களைக் காணுங்கால் நம் மனம் சீக்கிய மதத்தின் ஸ்தாபகரான குரு நானக்கை நினைக்கிறது. 'குரு நானக்' என்ற தமது நூலில் தல்ஜீத் ஸிங் எழுதுகிறார்: "15 வது நூற்றாண்டிலும், அதை அடுத்த காலங்களிலும் இந்தியாவை ஈவு, இரக்கமற்ற விதேசப்படைகள் மதத்தின் பெயரால் படையெடுத்து, எண்ணற்ற மனிதர்களை இரக்கமின்றி வெட்டி வீழ்த்தியதுடன், வீடுவாசல்களையும் சிறிதும் தயக்கமின்றி கொள்ளையிட்டன" குரு நானக் தம் காலத்தைப்பற்றி, "இந்தக் காலமே உருவிய வாளைப்போல் இருக்கிறது. அரசர்களெல்லாம் கொலைஞர்கள்" என்று கூறியதாக மேற்கூறிய ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

தாரண தரணனுடைய தரிசனத்தின் பொருட்டு வரும் பக்தர்கள் கோயிலுள் செல்லுமுன் செருப்புகளைக் கழற்றி குளத்தில் கால்களைக் கழுவிக்கொண்டு செல்வதிலிருந்து குரு நானக்குடைய உபதேசங்களுக்கு மக்களிடையே உள்ள மதிப்பும், மரியாதையும் விளங்குகின்றன. குழப்பமும், ஆபத்துக்களும் நிரம்பியிருந்த காலத்தில் அவர் தமது தூய தெளிவான மதத்தை ஸ்தாபித்தார். அந்தச் சீக்கியமதம் "வாளோங்கும் காலமே மதம் ஓங்கும் காலம்" என்ற கருத்தை விளக்குகிறது.



பாலைவனக் கப்பலான ஒட்டகம்.



பாழடைந்த சித்தூர்க்கோட்டை.



புராதனப் பாழ்களினிடையே உயதபூர் மகாராணா எழுப்பியுள்ள அரண்மனை.



சித்தூரில் ராணாகும்பா எழுப்பிய ஜயஸ்தம்பம்.

VIII

ரஜபுத்திர ராஜ்யங்கள்

பாலைவனத்தின் சகிக்கமுடியாத சூரிய வெப்பத்தில் கானல் காட்சிகள் தோன்றி மறையும்பொழுது, பொறுமையே உருவெடுத்த ஒட்டகம் தன் முதுகுச் சுமையான தலைப்பாகையணிந்த ரஜபுத்திரனையும், பளபளப்பான உடைகளுடன் கூடிய அவன் மனைவியையும், குழந்தைகளையும் சுமந்துகொண்டு செல்கிறது. இந்தியாவின் இந்தப் பகுதியில் மலர்களின் வர்ண விசித்திரங்களும், இலைகளின் பசுமையும் அரிது. ஆகவே, ராஜபுதனத்தின் பெண்கள் பல வர்ணப் புடவைகளையும், பளபளப்பான நகைகளையும் அணிய விரும்புவதில் ஆச்சரியமில்லை. வானவெளியைக் கதிரவன் கடந்து செல்லும் பொழுது மாறிக்கொண்டே யிருக்கும் வெளிச்சத்தால் ஆகாயத்திலும், பூமியிலும் எழும் வர்ண வகைகள் எத்தனையோ! அப்பொழுது இந்த வறண்ட மணல் வெளியும் ஓர் தனி அழகு பெருகிறது. மனிதக் கண்களுக்கு எப்பொழுதும் ரஞ்சகமான வர்ண வேறுபாடுகளை இந்நாட்டின் மாறும் இயற்கைக் காட்சிகளிலும் பெண்களின் பலநிற ஆடைகளிலும் காணலாம்.

ராஜபுதனத்தில் சுற்றிவரும் யாத்திரி எல்லாப் பாலைவனங்களுக்கும் - முக்கியமாக அல்ஜீரியா பீடபூமிக்கும்- பொருத்தமான அம்சங்களை இங்கும் காணமுடிவதோடு பாலைவனக்கப்பல் என்று அழைக்கப்படும் (உண்மையில் பாலைவன அரசனான) ஒட்டகத்தைக் காண்பான். ராஜபுதனத்தின் பெரும் பகுதி 'தார்' என்ற பாலைவனமே. மற்றப் பெரிய பாலைவனங்களைப்போல இது முழுமையும் வெண்மணலாக இல்லாமல் வறண்ட நிலமாகவே இருக்கிறது. விளைவைக் குறித்து இதை வறண்டதென்று நாம் கூறினாலும் சரித்திரத்திலும் விளை

வித்துள்ள வீரர்களிலும், இது மிகச் செழுமை வாய்ந்ததே! ஒரு காலத்தில் இந்த விசித்திர நாட்டின் தலைநகரமாய் இருந்தது சித்தூர்; ஆனால் அது இப்பொழுது பாழடைந்து கேட்பாரற்றுக் கிடக்கிறது.

'நார்ஸீஸஸ்' என்பவன் தன் ப்ரதிபிம்பத்தையே கண்டு மோகமடைந்து அதைப் பெறமுடியாத வருத்தத்தால் உயிர் நீத்தான் என்று ஒரு கிரேக்கக் கதை உண்டு. ஒரு ராஜபுதன வரலாறு, டில்லியின் சுல்தானன அல்லாவுத்தீன் கில்ஜி சித்தூரின் மகிபனுடைய மனைவியும் சௌஹான் ராஜகுமாரியுமான பத்மினி என்ற ஒப்பற்ற அழகியின் எழிலைக் கண்ணாடியில் கண்டு காதல் வெறி கொண்டானென்று கூறும். அவள் அழகின் மோகம் தலைக்கு ஏறவே அலாவுதீன் சித்தூர் கோட்டையை முற்றுகையிட்டுப் பத்மினியை தனக் களித்தால் அதற்குப் பிரதியாக முற்றுகையை நிறுத்திவிடுவதாகக் கூறினான். ஆனால் பதிவிரதையான அந்தச் சௌஹான் ராஜகுமாரி ரஜபுத்திர முறைப்படி தீக்குளிக்கவே, அவளுடைய கணவன் போர்முனையிலே உயிர் நீத்தான். இந்த வரலாறு கிரேக்கக் கதையை நினைவுறுத்துவதாக இருந்தாலும், இதிலடங்கியுள்ள பயங்கரமான ரத்தக் களரியும் அதைத் தொடர்ந்து விளைந்த நஷ்டங்களும் இந்த ஹிந்துக் கதையை கிரேக்கக் கதையைவிட எவ்வளவோ சிறப்பு வாய்ந்ததாகச் செய்துவிடுகின்றன.

ராஜபுதனத்தின் வரலாறுகள், பெண்கள் தியாகத் தீ வளர்த்ததையும், பத்மினியின் தலைமையில் பெண்களெல்லாம் சென்று தீக்குளித்ததை வீரர்கள் நின்று பார்த்துக் கொண்டிருந்ததையும், பிறகு ராணா சித்தூர் கோட்டைக் கதவைத் திறக்கச் செய்து தன் படைவீரர்களை அழைத்துக் கொண்டு போர்க்களத்திலிறங்கி சத்துருக்களின் மீது பாய்ந்து தான் வெட்டுண்டு மாயும் வரையில் ஒவ்வொரு வீரனும் சத்துருக்களை வெட்டி வீழ்த்தியதையும் வர்ணிக்கின்றன. ஒரு சரித்திராசிரியன், "சுல்தான் சித்தூர் கோட்டையில் நுழைந்தபொழுது சூன்யமான



அழகிய ஏரிகளும் அரண்மனைகளும் நிறைந்த உதயபூர் நகரம்.



பாலைவனத்திடையே பிகானீர் நகரம்.



சித்தூர்க் கோட்
டைச் சுவரிலு
ள்ள சிற்பங்கள்.

சந்தடியற்ற ஊரையே கண்டான். அதன்மீது, அவன் ஆசையுடன் விரும்பிவந்தது எதையோ அது எரிவதால் கிளம்பும் புகை வட்டமிட்டு எழுந்து கொண்டிருந்தது. அப்பொழுது அவனுக்கு வந்த ஆத்திரத்தில் பத்மினியின் மாளிகையைத் தவிர எஞ்சிய நகரம் முழுவதையும் அழித்துவிட்டான்." என்று கூறுகிறான்.

சித்தூர் அரசபரம்பரையில் கடைசி ராணாவான உதய சிங்கன் காலத்தில் சித்தூர் கோட்டை கடைசியாக மிகவும் மூர்த்தன்யமான முற்றுகைக்கு உள்ளாயிற்று. அது அக்பர் ஆட்சியிலேயே மிகவும் பெயர் பெற்றதும் ஆச்சரியகரமானதுமான போராகும். அதனால் சித்தூர் கோட்டை அழிந்தது.

உதயசிங்கன் உதயபூரை அமைத்தான். சித்தூர் கோட்டையைத் துறந்த பிறகு ரஜபுத்திர வீரர்கள் உதயப் பூரில் வந்து குடியேறினார்கள். அது இப்பொழுது ராஜ புதனத்திலேயே தலைசிறந்த நகரமாக விளங்குகிறது. அது தம்மைச் சூரிய குலத்தைச் சேர்ந்தவர்களென்று கூறும் அரசர்களின், அழகிய ஏரிகளும் பிரம்மாண்டமான மாளிகைகளும் அரண்மனைகளும் உள்ள நகரமாகும்.

ஜெயப்பூரிலிருந்து ஜெய்ஸல்மீருக்கும் உதயபூரி லிருந்து பிகானீருக்குமாக இந்த இந்தியப் பாலைவனத்தி னுடைய சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரங்களை இணைக் கும் இருப்புப் பாதைகள் செல்லுகின்றன. ஜோத்பூரி லுள்ள ஆகாய விமானம் தங்கும் இடமோ ராஜபுத னத்தை வெளிநாடுகளின் தலைநகரங்களுடன் இணைக் கிறது.

ஒரு மைல் நீளமுள்ள 'காரவான்' என்னும் ஒட்ட கைச் சவாரி செய்யும் யாத்திரிகளின் கூட்டம் புறப் படும்பொழுது அதன் பின்னால் மேகம்போல் புழுதி கிளம்புகிறது. ரஜபுத்திரர்களும், முஸ்லிம்களும் ஆன பிகானீர் வாசிகள் நாலாவில் நடந்த வருஷாந்திரச் சந்தை யிலிருந்து திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள்

மாட்டு வண்டிகளிலும், குதிரைகள்மீதும், ஒட்டகங்களின் மீதும், ஒட்டக வண்டிகளிலும் வருகிறார்கள். அவர்கள் பாலை வனத்திலேயே பிறந்து வளர்ந்தவர்களாகையால் அதன் புழுதியோ, மணலோ, சூடோ அவர்களை ஒன்றும் செய்வதில்லை.

பிகானீர் என்பது ராஜபுதனத்தின் முக்கியமான ராஜ்யங்களில் ஒன்றாகும்; அதன் தலைநகரம் வெகு காலத்திற்கு முன்பு ராவ் பிகாஜி என்பவரால் நிர்மாணிக்கப்பட்டது. பழைய நகரின் கோட்டையில் சரித்திரப் பிரசித்திபெற்ற போர்களின் சின்னங்களும், விருதுகளும் தொங்குகின்றன. முகலாய சக்கரவர்த்திகளால் பிகானீர் சக்கரவர்த்திகளுக்கு அவர்களுடைய ஆண்மை, வீரம், ஆகியவற்றிற்குப் பரிசாக அளிக்கப்பட்ட விருதும் வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது வாசத்திற்கு உபயோகிக்கப்படாதிருந்தும் இதிலுள்ள கல்லிலேயே குடைந்த ஜன்னல்களும், கல்லினாலேயே அமைக்கப்பட்டுள்ள மதில்களின் மேல்அலங்காரங்களும் இந்த உறுதியான கட்டடத்தை மிகவும் வனப்பு வாய்ந்ததாகச் செய்கின்றன. இன்று பிகானீரிலுள்ள அநேக அரண்மனைகளில் பாலைவனத்தின் உஷ்ணத்தைத் தடுக்கும் பொருட்டு ஜன்னல்களிலெல்லாம் வெட்டிவேர்த் தட்டிகள் தொங்கவிட்டிருப்பதைக் காணலாம். பலவிடங்களில் அறைகள் ஐரோப்பிய முறையில் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. 14-வது லூயி என்ற பிரெஞ்சு தேசத்து அரசனுடைய முறையும், பிகானீரின் அரண்மனைகளுக்கு விலக்கத் தக்க வெளிநாட்டு முறையல்ல. ஆயினும் வீர நினைவுகளும் போர்ச் சின்னங்களும் நிறைந்துள்ள பழைய கோட்டை இன்றும் மகத்துவமுள்ளதாகவே இருக்கிறது. பிகானீரின் ஸ்தாபகரான பிகாஜி தம் ஆற்றல் மிக்க கையில் தாங்கிச் சுழற்றிய பாரமான வாள் அங்கே தொங்குகிறது.

சந்தை கூடுமிடத்தில் ஒட்டகங்கள், மனிதர்கள், எருதுகள், பசுக்கள், யானைகள், குதிரைகள் ஆகிய எல்லாம்

இருக்கின்றன. பாலைவன வாசிகள் தம் நகரத்தில் வெகு சுறு சுறுப்பாய்க் காணப்படுகிறார்கள். ஊதா - வெளியும், ஒட்டகைப் பவனியும் இப்பொழுது காணப் படவில்லை. அவைகளுக்குப் பதிலாக பல நிறமுள்ள உடுப்புகள் அணிந்த மக்கள் நிறைந்துள்ள அழகிய சந்தையும், சூரிய உஷ்ணத்தினால் அதிகக் கஷ்டம் விளையா திருப்பதற்கென்று அமைந்துள்ள குறுகிய தெருக்களுமே நம்முன் இருக்கின்றன.

தெருவானாலும், சந்தையாயினும் மாளிகைகள் உள்ள நகரங்களானாலும், உயர்ந்த கோட்டைகளானாலும், பாலை வனத்தின் பரந்த மணல் வெளியானாலும், பல நிறங்களைக் காட்டும் மாயக் கண்ணாடியைப்போல் ராஜபுதனத்தை எங்கு நோக்கினாலும் நாம் காண்பது பலவகை வர்ணங் களே! வர்ணங்களே ரஜபுத்திர ராஜ்யங்களின் இயற் கைக் காட்சியையும் மக்களின் வாழ்க்கையையும் அழகு படுத்துகின்றன.

IX

அக்பரின் தலைநகரங்கள்

பாபர் 'பயா'ஞ போரில் வெற்றியடைந்தபொழுது அதிலிருந்து சிறிது தூரத்திலுள்ள இடத்திலிருந்து அவனுடைய பேரனை அக்பர் பெரிய சாம்ராஜ்யத்தை ஆளப் போகிறுனென்று நினைத்திருக்கமாட்டான். சுல்தான்கள் டில்லியை தம் தலைநகராக ஆக்கிக் கொண்டிருந்தபோதிலும் அக்பர் முதல் தலைநகராக ஆக்கியது ஆக்ரா நகரையே. பிறகு அவன் பதேஹ்பூர் சிக்ரியையும் அதன் பிறகு மீண்டும் ஆக்ராவையும் தலைநகரமாகச் செய்து கொண்டான். ஆக்ராவிலேயே அக்பரின் பேரன் (ஷாஜஹான்) உலகெங்கும் புகழ்பெற்ற தாஜ்மஹாலை எழுப்பினுன்.

அக்பர், மதக்காரணங்களுக்காகத் தன் ஆட்சியின் கேந்திரத்தை முதல் தலைநகரான ஆக்ராவிலிருந்து 26 மைல் தூரத்திலுள்ள பதேஹ்பூர் சிக்ரிக்கு மாற்றினுன். அவன் வெகுநாளாகப் பிள்ளையை விரும்பிக்கொண்டிருந்தான். சிக்ரியிலிருந்த மகான், பிற்காலத்தில் ஜஹாங்கீர் சக்கரவர்த்தியான ஸலீம் பிறப்பானென்று ஜோஸ்யம் சொல்லியிருந்தார். ஆகவே சிக்ரி முக்கியத்துவம் பெற்றுவிட்டது, அக்பர் அங்கே சிவப்புக் கற்களைக் கொண்டு ஒரு நகரம் அமைத்தான்.

ஜெரோம் ஸேவியர் என்ற மூன்ருவது ஜெஸ்யூட் மிஷனின் தலைவன் இந்த அக்பரின் தலைநகரைக் கடந்தபொழுது "இங்குதான் 'ட்ராய்' நகரம் இருந்ததென்று சொல்லலாம்" என்று எழுதினுன்.

பதேஹ்பூர் என்ருல் விஜயபுரி என்று பொருள். ஆகவே ஸிக்ரியுடன் பதேஹ்பூர் என்பதை அக்பர் சேர்த்தான். பதேஹ்பூர் சிக்ரியிலுள்ள மசூதியின் பிரம்மாண்ட



சிக்ரியின் ஒரு ராஜவாயில்.



பதேக்பூர் சிக்ரியிலுள்ள பாழடைந்த யானைக்கொட்டடிகள்



Octagonal well in Fatehpur Sikri which formed part of the fine water-supply system of the city.

மான வாயில் அக்பருடைய கூர்ஜர வெற்றியை நினைவுறுத்துவதற்காக அமைக்கப்பட்டது. அந்தக் காலத்தில் கீழ்நாட்டின் கேந்திரமாய் இருந்த பதேஹ்பூர் சிக்ரியை மகான் அக்பர் எவ்வளவு பொருட்செலவில், இன்ப நோக்குடனும், உறுதியாகவும், அழகாகவும் அமைத்தானென்பதை அதன் சித்திரங்களே நன்கு விளக்கக்கூடும். ஆனல் அங்கே ஒரு குறை; சிக்ரியில் தண்ணீர் கிடையாது; ஆகவே தன் இஷ்டப்படியே அமைத்த அந்தத் தலைநகரை இறுதியில் விட நேர்ந்தது; காபூலை படையெடுத்துப் போகவேண்டுமென்ற காரணத்தைச் சொல்லி அதைத் துறந்தான்; ஆனல் அவன் அதன்பிறகு அந்த விஜயபுரிக்குத் திரும்பி வரவேயில்லை. அது இப்பொழுது பாழ்பட்டுக் கிடந்தும், மிருகங்களிலெல்லாம் அதிக பலம் வாய்ந்த யானையை அவன் அடக்கியதைப்போலவே, அற்புதமான கட்டடங்களுக்கு திட்டம் போடுவதையும் அறிந்திருந்த அந்த பெரிய சக்கரவர்த்தியின் புகழைப் பாடிக் கொண்டிருக்கிறது.

அக்பருடைய இறுதித் தலைநகரிலுள்ள மாபெரும் செங்கோட்டையிலிருந்து அவனுடை பேரனை ஷாஜஹான், வரண்ட உஷ்ணமான இடை வெளிக்கப்பால் தான் மிகவும் நேசித்த மும்தாஜின் நினைவில் அமைத்த சலவைக்கல் சமாதியைப் பார்த்துக்கொண்டிருப்பது வழக்கம். ஷாஜஹான் இறுதியில் உள்ளமுடைந்து, ஆசைகளெல்லாம் நாசமாகி, எந்தக்கோட்டையில் அமர்ந்து தன் பரந்த ராஜ்யத்தையெல்லாம் ஆட்சிபுரிந்தானே அதிலேயே தன் மகன் அவுரங்கசீபினல் சிறையிடப்பட்டு, தனதும் முகலாய சாம்ராஜ்யத்தினுடையதுமான இறுதி நெருங்கிவிட்டதைக் குறித்து வருந்தி, மேற்கு திசையில் மறையும் சூரியனைப் பார்த்தபடியே மக்காவை நோக்கித் தலைவணங்குவான்.

இன்று உள்ளது போலவே, தான் உயிரிலும் அதிகமாக நேசித்த 'அரண்மனை அணி' யென்ற மும்தாஜ் மஹால் அடக்கமாயிருக்கும் இடத்தின் மீது அமைத்த

சலவைக் கட்டடத்தை அவன் பார்த்துக் கொண்டிருந்த போதும், அது அதே வனப்புடன் விளங்கிற்று. ஷாஜஹான் தன் இராணியின் பிரிவைக் குறித்துப் புலம்பியதாக ஒரு பாரஸீகக்கவி செய்துள்ள பாட்டு மிகவும் உருக்கமாக அமைந்திருக்கிறது ;

"அவள் நீர் அருந்திய அருவி இது ;
அவள் இறந்தாள், அருவி ஏனோ ஓடிக்கொண்டிருக்கிறது !
அவள் உருசித்த மது இதுவே,
அவள் மறைந்தாள், தேனின் இனிமை ஏனோ மாறவில்லை !
அவள் இந்த ரோஜாமலரில் சாய்ந்திருந்தாள்,
அவளைக் காணோம், ரோஜாச் செடி ஏனோ வளர்ந்துகொண்டே [யிருக்கிறது !
அவள் என் உள்ளத்தைத் தன்கையிற் கொண்டாள் ;
அவள் இறக்கவும் என் உள்ளம் அவளுடன் சமாதியாகிவிட் [டது !

ஒரு காலத்தில் அக்பருடைய தலைநகராய் இருந்த ஆக்ராவில் உள்ள வனப்பு மிக்க சலவைக்கல் சமாதியுள் மும்தாஜும், ஷாஜஹானும் அடுத்தடுத்து மகா நித்திரை செய்து கொண்டிருக்கிறார்கள் !



மதுரையிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் கோயில்.



கோகுலத்திலுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் கோயிலின் வாயில்.



பிருந்தாவனத்திலுள்ள ஜோபாய் அரண்மனே.



கண்ணன் களித்து விளேயாடிய
யமுனேக்கரை (கோகுலம்)

X

கண்ணன் களித்த நிலம்

இந்திய நகரங்களை ஒருவன் சுற்றிப் பார்க்க விரும்பி ஞல் அவனுடைய மனம் காலதேசத்தை ஒத்து மாறும் தன்மையதாய் இருக்கவேண்டும். ஒரு நகரம் மிகவும் நவீன காலத்ததாய் இருக்கும். மற்ருென்று சரித்திர காலத்ததாய் இருக்கலாம். இன்னும் ஒன்று புராதன நகரமாயிருந்தும் இன்றும் சிறப்புடன் விளங்கலாம். சித்தூர் கோட்டை, டில்லி, ஆக்ரா ஆகியவை இன்றைய நகரங்களாய் இருப்பது போலவே சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரங்களுமாகும். மதுரை, பிருந்தாவனம், கோகுலம் ஆகியவை புராதன நகரங்களாயும் இன்றும் உள்ளவையாயும் இருக்கின்றன. டில்லிக்கும் ஆக்ராவுக்கு மிடையில் இந்த மூன்று நகரங்களும் உள்ளன; தாஜ் மஹாலை ஒட்டி ஓடும் யமுனை நதி டில்லியிலிருந்து மதுரை வழியாக ஆக்ராவை நோக்கிப் பாய்கிறது.

பகவான் மனித உருவில் அவதாரமெடுத்த கால மென்று புரோகிதர் கூறும் அந்தப் பழைய காலத்தில் மதுரையில் கிருஷ்ணன் பிறந்தான். அவனுடைய பிள்ளைப் பருவம் கோகுலத்தில் கழிந்தது. பிருந்தாவனத்தில் சிறிது வயதான பிறகு ஆனந்தமாக 100 நாட்கள் இருந் தான். 'கீத கோவிந்தம்' என்ற பாட்டுக்கள் கிருஷ்ண னுடைய இன்ப வாழ்க்கையைப் பற்றியவை; ஆய்ச்சியர் அவனுடைய குழலொலிக்கு ஒத்து ஆடிக்குதித்ததையும் அவன் செய்த அற்புத லீலைகளையும் அது வர்ணிக்கிறது. கிருஷ்ணனுடைய குழந்தைப் பருவத்தில் பிருந்தாவனம் காடாய் இருந்தது. இப்பொழுதோ அது கோயில்கள் நிறைந்த ஒரு நகரம். மதுரை, பிருந்தாவனம், கோகுலம் ஆகிய மூன்று நகரங்களுக்கும் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான யாத்திரிகள்

வந்து கொண்டேயிருக்கிறார்கள்; ஏனெனில் கிருஷ்ணன் வெண்ணெய் திருடியதும், மாடு மேய்த்ததும், அசுரர்களைக் கொன்றதும், தம் தோழிகளான கோபிகளை மகிழ்விக்கக் குழல் ஊதியதும் இந்த நாட்டிலேயே.

கிருஷ்ணன் அதன் கரைகளில் விளையாடியதால் ஹிந்துக்களுக்கு யமுனை நதி புண்ணிய நதியாகும். பால கிருஷ்ணனையும் அவனுடைய லீலைகளையும் பற்றி ஜய தேவர் 'கீத கோவிந்த'த்தில் இவ்வாறு பாடுகிறார்:—

"ஆகாயமெல்லாம் மேகங்கள் சூழ்ந்துகொண்டன;
தமால மரங்கள் அடர்ந்த காடெல்லாம் இருண்டுவிட்டது;
காட்டில் சுற்றித்திரியும் அந்தச்சிறுவன் இரவின் இருளைக் கண்டு அஞ்சுவான்!
பெண்ணே, நீபோய் அவனை என்வீட்டிற்கு அழைத்துவா!"

என்று இடையர் தலைவன், நந்தன் தன் மகளிடம் கூறுகிறான்.

பிருந்தாவனத்தின் காடுகளில் திரிந்த இந்த யுவன் பிற்காலத்தில் பாரதப் போர்க்களத்தில் பகவத் கீதை என்ற புகழ்பெற்ற தத்துவ நூலை உபதேசிக்கிறான்.

ஆகவே, யாத்திரைக்குக் கிளம்பியுள்ள பக்தன் கிருஷ்ண பரமாத்மாவின் பிறப்பிடமான மதுரைக்கும், அவன் வளர்ந்த கோகுலத்திற்கும் வாலிபத்தில் லீலைகள் பல புரிந்த பிருந்தாவனம், கோவர்த்தனம் ஆகிய இடங்களுக்கும் யாத்திரை போகிறான்.



உஜ்ஜயினியில், கவி காளிதாசனுக்கு
வரமளித்த காளியின் கோயில்.



பிருந்தாவனத்திலுள்ள கிருஷ்ணன் கோயில்.

XI

வரகவி வாழ்ந்த ஊர்

சிப்ரா நதியின் கரையில் (Tropic of Cansor க்குச் சிறிது கீழே) உஜ்ஜயினி நகரம் இருக்கிறது. இப்பொழுது அது குவாலியர் சமஸ்தானத்தைச் சேர்ந்திருக்கிறது. இந்தியாவின் வேறு பல பிரசித்தமான நகரங்களைப் போலவே உஜ்ஜயினியும் வாழ்வையும் தாழ்வையும் மாறி மாறிக் கண்டு வந்திருக்கிறது. ஆனால், அழிந்து மறைந்து போன வேறு பல நகரங்களைப் போலன்றி உஜ்ஜயினி இன்றும் மத்திய இந்தியாவில் சிப்ரா நதியின் கரையில் ஒரு செழித்த நகரமாகவே விளங்குகிறது.

இந்திய சரித்திரத்தின் பொற்காலம் என்று கூறப்படும் குப்தர் காலத்தில் ஸம்ஸ்கிருத இலக்கியம் மிகவும் செழித்து வளர்ந்தது. அந்தக் காலத்திலேயே சித்திரம் சிற்பம் முதலிய கலைகளும், விஞ்ஞானங்களும் சிறப்புற்று ஓங்கின. உஜ்ஜயினியின் ராஜசபையிலேயே ஸம்ஸ்கிருத மகா கவியான காளிதாசன் வீற்றிருந்தான். காளிதாசன் பிறந்த ஊர் நிச்சயமாகத் தெரியாவிட்டாலும் (உஜ்ஜயினிக்கு அருகிலுள்ள ஏதோ ஒரு ஊர் என்பது கர்ண பரம்பரை) அவன் ஆயுளில் பெரும் பகுதியை சிப்ரா நதியின் கரையிலேயே கழித்தானென்பதும், சிறு பையனாய் இருக்கையில் அந்த ஆற்றின் கரையிலிருந்த ஒரு காளிகோயிலில் பூஜை செய்துகொண்டிருந்த பொழுது, காளி, பையன் காளிதாசன்முன் பிரஸன்னமாகி அவனுக்குக் கவிதா சக்தியை அருளினாள் என்பதும் பிரசித்தம். இவ்வாறு தெய்வ அருள் பெற்ற காளிதாசன் தன் எஜமானனை எவ்வாறு கௌரவித்தான் என்பதை ஈடும் எடுப்பு இல்லாத நடையில் அமைந்துள்ள அவனுடைய நாடகங்களிலும், காவியங்களிலும் காணலாம். 'மேக தூதம்' என்ற காவியத்தில் உள்ள சில செய்யுட்கள் உஜ்ஜயினியிடத்தில் கவிக்கு இருந்த பற்றை நன்கு விளக்குகின்றன.

13-வது நூற்றுண்டிலிருந்து வெகு வருஷங்களுக்கு உஜ்ஜயினி அமைதியாய் இருந்ததென்பதேயில்லை. அந்தக்காலத்தில் ஒருவர் பின் ஒருவராய் வந்த எதிரிகளெல்லாம் அங்கிருந்த விக்கிரகங்களை உடைத்தும், கோயில்களைக் கொளுத்தியும், நகரத்தின் பொருளைக் கைப்பற்றியும் சென்றுர்கள். பொற்காலத்தைச்சேர்ந்த பொக்கிஷங்களும், புராதன காலத்துப் பொருள்களும் கொள்ளைக்காரர்களின் கையில் சிக்கினமையால், இன்று உஜ்ஜயினியில் அதன் புகழுக்குரிய பழைய சிறப்பு எதையும் வெகுவாகக் காணக்கூடவில்லை.

தற்காலத்தில் உஜ்ஜயினியின் கோயில்கள் புதிபிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக யந்திரசாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மோட்டார் சாலைகளும், ரெயில் சாலைகளும் இந்த கேந்திரஸ்தானத்திற்கு வந்து யந்திரசாலைகளில் தயாரான சாமான்களையும், மாளவ பீடபூமியில் விளையும் பொருள்களையும் எடுத்தேகுகின்றன. பெரிய ஆபீஸ் கட்டடங்களும், குறுகிய தெருக்களில் உள்ள பழைய காலத்துச் சிறிய வீடுகளும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமல் எங்கும் காணப்படுகின்றன. ஒரு சில யாத்திரிகள் இன்றும் சிப்ரா நதித் துறைகளைத் தேடிக் கண்டுபிடித்து மூழ்குகிறுர்கள்; பாத்திர வேலைக்காரன் வேலையை சுறுசுறுப்பாகச் செய்துகொண்டும், துணி வியாபாரி துணி வாங்க வருகிறவர்களிடம் சுவாரஸ்யமாக பேரம் செய்துகொண்டும் இருப்பதையும், சந்தையில் குடியானவர்கள் தங்கள் பொருள்களை நகரத்தவரிடம் விற்றுக் கொண்டிருப்பதையும் காண்கிறேம்.

சரித்திர காலத்துச்சின்னங்கள் சில இன்னும் இங்கு இருக்கின்றன. ஒரு மிகப்புராதனமான கோயிலில் மிகவும் சக்திவாய்ந்ததெனக் கருதப்படும் ஒரு சிவலிங்கம் இருக்கிறது. இக்கோயில் வெயிலிலும், மழையிலும் அடிபட்டு மிகப் பழையதாக இருந்த போதிலும், பூசாரிகளாலும் பக்தர்களாலும் வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளப்பட்டு வருகிறது. சந்தடியில்லாமல் ஓடும் ஆற்றின்

உஜ்ஜயினி நகரின் ஒரு காட்சி. கோயில், மசூதி, அரண்மனை ஆகியவை யெல்லாம் ஒரே இடத்தில் இருக்கின்றன.



அகமதாபாத் கோட்டை.

கரைகளில் உள்ள துறைகளில் மக்களின் தினசரி வாழ்க்கை மதத்துடன் இரண்டறக்கலந்து இருப்பதைப் பார்க்கிறோம். நகரத்திற்கு வெளியே உள்ள மணல் பாதையின் இறுதியில், காளிதாஸன் அருள் பெற்றதாகக் கூறப்படும் தேவியின் ஆலயம், புலங்களின் எல்லையில் அமைதியான இடத்தில் இருக்கிறது.

ஆற்றை அடுத்தாற்போல், அழகிய தோட்டத்துடனும், கலாதிருஷ்டியுடன் அமைந்துள்ள குளங்கள், ஊற்றுகள் ஆகியவைகளுடன் விளங்கும் உஜ்ஜயினியின் அரண்மனையை அதோ மேற்கு திசையில் காண்கிறோம். நகரத்திற்கு அப்பால் திறந்த புலங்களை அடுத்து 18-வது நூற்றாண்டில் ஜெயப்பூரின் அரசனான ஜெயஸிங்கினால் நிர்மாணிக்கப்பட்ட வான சோதனைச்சாலை இருக்கிறது. வான சாஸ்திரிகள் கணக்கிட்டு ஆராய்ச்சி செய்வதற்கு உதவும்படியாக இங்கே பல இயந்திரங்கள் கல்-சுண்ணத்தைக் கொண்டே பல உருவங்களில் சிறிதும் பிழை படாமல் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் காலத்திலேயே ஹிந்துக்கள் உஜ்ஜயினியை கேந்திரமாகக் கொண்டு தங்கள் பூகோள வானசாஸ்திர ஆராய்ச்சிகளை நடத்திவந்தார்கள்.

அஸ்தமிக்கும் சூரியன் இந்த விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டடங்களின்மீது விசித்திரமான நிழல்கள் விழும்படிச் செய்கிறான். 200 வருஷங்களுக்குமுன் அமைந்ததாயினும் இன்றும் சிறிதும் பிழைபடாது சாய்ந்து நிற்கும் அந்தச் சுவற்றின் ஓரத்திலிருந்து பார்த்தால் துருவ நக்ஷத்திரம் தென்படும். ஒரு காலத்தில் கோயில் கோபுரங்கள் மாலையின் மங்கிய ஆகாயத்தில் தெரிந்ததற்கு பதிலாக, இப்பொழுது இயந்திரசாலைகளின் புகைபோக்கிகள் ஓங்கி நிற்கின்றன. நகர மக்களை மாலைப் பிரார்த்தனைக்கு அழைக்கும் கோயில் மணிக்குப் பதிலாக இயந்திர சாலைகளின் சங்கு 'ஓ' வென்று அலறுகிறது. உஜ்ஜயினின் சினிமா கொட்டகைகளில் காட்டப்படும் புதிய ஒலிப் படங்களை விளம்பரம் செய்யும், பாண்ட் வாத்திய முழக்கத்துடன் மாளவ பீடபூமியின்மீது மாலையின் மஞ்சள் வெயில் பரவுவதைப் பார்க்கிறோம்.

XII

கூர்ஜரம்

மாளவ சமவெளிக்குத் தெற்கிலும் விந்திய மலைக்கு மேற்கிலும், அரவல்லி மலையின் அடிவாரத்திலிருந்து அராபிக்கடல் வரையில், கட்ச், காம்பே வளைகுடா வரையில் சரித்திரப்புகழுள்ள கூர்ஜர தேசம் பரந்து கிடக்கிறது.

இந்த மாகாணத்தின் எல்லையைக் குறித்தே ஆயிரம் வருஷங்களுக்குமுன் தன் தலைநகரான கஜினியைவிட்டுக் கிளம்பிவந்த முகமத் படையெடுத்துச் சென்றான். அவன் மேற்கிந்திய பிராந்தியங்களில் மிகவும் மதிக்கப்பட்டுவந்ததும், பொருள் வளத்திற்குப் பேர்போனதுமான சோமநாத் கோயிலைச் சூறையாடினான். அதிலிருந்த பெரிய விக்கிரகத்தை உடைத்து அந்தத் துண்டுகளையும் வேறு பொருள்களையும் எடுத்துக்கொண்டு ஸிந்துவின் பாலைவனத்தின் வழியாக ஊருக்குத் திரும்பினான். கஜினிமுகமதைப்போலவே வேறு பலரும் கூஜராத்திகளின் நாடான அன்ஹில்வாராவைப் படையெடுத்தார்கள். அந்தப் பக்கம் இன்றும் பொருள் வளமுள்ள அகமதாபாத், புரோச், சூரத் பரோடா, கத்தியவார், பம்பாய் போன்ற இடங்களுக்கும், கோயில்களுக்கும் பெயர்போனதாகும்.

கஜினிமுகமதின் படையெடுப்பு நடந்து 4 நூற்றாண்டுகள் கழிந்த பிறகு கூர்ஜரத்தின் சுல்தானான முதல் அகமத்ஷா அன்ஹில்வ்ராப் பட்டிணத்திலிருந்து சபர்மதி நதிக்கரையிலுள்ள அஸாவார் நகரத்துக்குத் தன் தலைநகரை மாற்றினான். இந்த இடத்தின் சீதோஷ்ணஸ்திதி அவனுக்கு மிகவும் பிடித்திருக்கவே அவன் பெயராலேயே இங்கு புதிய நகரமொன்று அமைக்கப்பட்டது. அதுவே அகமதாபாத்.



சபர்மதி ஆற்றங்கரை



ஆமதாபாத்தில் செல்வர் வாழும் பகுதியிலுள்ள
ஒரு மாளிகை.

அகமதாபாத் வெகு குறைந்த காலத்தில் வெகு விரைவாக வளர்ந்திருக்கிறது. அமைந்த சில வருஷங்களுக்குள்ளேயே அது கூர்ஜரத்தில் முக்கிய ஸ்தானத்தைப் பெற்றுவிட்டது. ஹிந்து, ஜைன சிற்பக் கலைகளில் தேர்ந்த தொழிலாளிகள் வெகு சுலபமாக முகமதிய சிற்ப முறையையும் கற்றுக் கொண்டார்கள். ஒரு வித்வான் கூறுவதைப்போல் “இந்தச் சிற்பிகள் ஒரு நூற்றுண்டுக்குள்ளேயே ஹிந்து, ஜைன ஸ்தல சிற்பத்தை முகம்மதியரின் வான சிற்பத்துடன் அற்புதமாக இணைக்கக் கற்றுக் கொண்டு விட்டார்கள்.” இந்த மிச்ரக்கலைக்குச் சிறந்த உதாரணங்களை அகமதாபாத்திலுள்ள சரித்திரப்பிரஸித்தி பெற்ற கோட்டையிலும், அதன் பிரம்மாண்டமான வாயில் வளைவுகளிலும், மசூதிகளிலும் வேறு பல கட்டடங்களில் உள்ள நுண்ணிய கல் சித்திர வேலைகளிலும் காணலாம். இன்னும் எத்தனையோ கலைகளும், கைத்தொழில்களும் இங்கே செழித்து விளங்கின. நேரில் கண்ட ஒருவர் அகமதாபாத்தில் தயாரான தங்க, வெள்ளி ஜரிகை உடைகளுக்கும், பூவேலையமைந்த பட்டாடைகளுக்கும் முகலாய சாம்ராஜ்யம் முழுவதிலும் மிகுந்த கிராக்கியிருந்ததாக எழுதிமிருக்கிறுர்.

இன்றோ இங்குள்ள பல நெசவாலைகளிலும் எண்ணற்ற தறிகளில் கணக்கற்ற தொழிலாளிகள் வெறும் பருத்தியிலிருந்து மிகவும் நேர்த்தியான பலவகைத் துணிகள் தயாரித்து அனுப்புகிறுர்கள். கூர்ஜரத்தின் தலைநகரென்று சிலர் வெகு பொருத்தமாக அழைக்கும் இந்த அகமதாபாத் நகரம் பல நூற்றுண்டுகளுக்கிடையே சுல்தான்களும், தனவந்தர்களும், அறிவாளிகளும், தொழிலாளிகளும், கலைஞர்களும் சேர்ந்து தற்பொழுது சிறப்புடன் விளங்கும் நகரமாக அமைத்ததாகும்.

ஆற்றின் அக்கரையில் சபர்மதி ஆச்ரமம் இருக்கிறது. அங்கிருந்துதான் காந்தியடிகள் சரித்திரப் பிரஸித்திபெற்ற தண்டி (உப்பு) யாத்திரையைத் தொடங்கிஞர்கள். இந்த சம்பவம் அகமதிஞல் நிர்மாணிக்கப்

பட்ட. இந்த நகர வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைச் சேர்க்கிறது.

அகமதாபாத் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்னல் கிழக்கு, மேற்கு சமுத்திரக்கரைகளிலிருந்தும் மக்கா, பாஸ்ரா, பாரசீகம் ஆகியவைகளிலிருந்தும் மணிலா, மலாக்கா, மாலதீவு ஆகியவைகளிலிருந்தும், சைனவிலிருந்தும், மற்ற தூரக் கீழ் நாடுகளிலிருந்தும் பலவகைக் கப்பல்கள் தப்தி நதியின் முகத்வாரத்தில் அமைந்துள்ள சூரத் மாகாணத்தைச் சேர்ந்த 'சுவாலி' என்ற துறை முகத்திற்கு வருவது வழக்கம். அக்காலத்தில் சூரத் நகரம் ஜனநெருக்கமுள்ளதாய் பொருள் வளத்துடன் இந்தியாவின் 'மேற்கு வாயில்' என்ற சிறப்புப்பெற்று விளங்கியது.

சூரத் அத்தகைய சிறப்பு எய்தியதற்கு வெகு காலத்திற்குமுன் புரோச் நகரம் மேற்குக் கடற்கரையின் முக்கிய நகரமாகத் திகழ்ந்தது. அராபிக்கடலில் காம்பே ஒரு த்வீப சாம்ராஜ்யமாக விளங்கியபொழுது புரோச் அதன் பிரதான நகரம் என்ற சிறப்புப் பெற்றிருந்தது. "அது நியார்க்கஸ் கப்பல் தொடரினுடைய மாலுமிகள் கண்ட தலை சிறந்த நகரம். அது ரோமன் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களையும், புராதன மிச்ர தேசத்தவர்களையும், அரேபியாவின் புராதன யாத்திரிகளையும் கண்டதுண்டு. அதில் ஜைனர்களும், முகம்மதியர்களும், பிராம்மணர்களும் தங்கள் ஆற்றலையெல்லாம் காட்டியிருப்பதால் அத்துடன் சரித்திர மாணவனுக்கும், வியாபாரிகளுக்கும், பிரியமான எத்தனையோ தொடர்புகள் அமைந்திருக்கின்றன." இவ்வாறு ப்ரிக்ஸ் என்றவர் தமது "கூர்ஜரத்தின் நகரங்கள்" என்ற நூலில் புரோச் நகரத்திற்குப் புகழ் மாலை சூட்டுகிறார். தற்காலத்தில் சூரத்தையும்விட புரோச் அதிக இழிவு எய்தியிருக்கிறது. ஆயினும் ஜனநெருக்கமுள்ள நகரமாகவும் பருத்தி வியாபாரத்தில் 'புரோச் பருத்தி' என்ற சிறந்த ரகப் பருத்தி விளையும் நிலங்களை அருகாமையில் கொண்டதாகவும் இருக்கிறது.

ஆண்களுக்குச் சளைக்காத கூர்ஜரப் பெண்கள் பாரம் தாங்கிச் செல்லுகின்றனர்.



பிகானீர் பழைய கோட்டையின் வாயிலொன்றின் மேலுள்ள
சீதாலக்ஷ்மண சமேத ஸ்ரீ ராமசந்திரனின் பிம்பங்கள்.

நர்மதா நதியின் அக்கரையிலிருந்து தொலேவிலுள்ள இந்த நகரத்தைப் பார்த்தால், ஆகாயத்தைப் பின்புலமாக வும் ஓடும் ஆற்றை முன் அணியாகவும் கொண்ட ஓர் அழகிய சித்திரத்தைப்போல் இது காட்சியளிக்கிறது.

சூரத் இன்றும் தனது வியாபாரச் சிறப்புடன் விளங்குகிறது. அது, சில நூற்ருண்டுகளுக்கு முன் வரை யில் தனது ஏகபோகமான கப்பல் வியாபாரத்தை இப் பொழுது பிடித்துக்கொண்ட பம்பாயிடம் சிறிதும் பொரு மையில்லாமல் தன்னிடமுள்ள மூலப்பொருள்களேயும், கைத்தொழிற் பண்டங்களேயும் அனுப்புகிறது. ஆனல் புரோச்சும் சரி, சூரத்தும் சரி, வேறு பல நகரங்களேப் போலும் தமது நீண்ட ஆயுளின் அனுபவத்தால் விளேந்த அறிவின் பயனுக, காலத்தின் மாறுபாட்டை மன அமைதி யுடன் ஏற்று வீற்றிருப்பதாகத் தெரிகிறது. மனிதர் களின் மனப்போக்குக்கும் இவற்றிற்கும் உள்ள விசித்திர மான ஒற்றுமையை என்னென்பது!

பம்பாயிலிருந்து அகமதாபாதுக்கும், பரோடாவுக் கும், டில்லிக்கும் போகும் ரயில் பாதையில் அமைந்திருப்ப தால், சூரத்தை ஒரு வகையில் அதிருஷ்டமுள்ளதென்றே சொல்லவேண்டும். அதைச் சுற்றிலும் நல்ல வளமுள்ள நிலம் இருப்பதுடன் வியாபாரத்தில் வல்லவர்களான பார்ஸிகளும் குஜராத்திகளும் அதில் ஏராளமாக வாழ்வ தால் அங்கு பெருத்த வாணிபம் நடைபெறுகிறது.

சூரத்துக்கு அதன் பண்டைப் பெருமையே ஒரு சாசு வதமான மூலதனம். தப்தி நதிக்கரையிலுள்ள கோட் டைச் சுவர்கள் படையெடுப்புக்கள் மலிந்த பழைய காலத் தின் சின்னமாகும். ஆதியில் ஐரோப்பியர்களும் முதல் இங்கிலீஷ் கம்பெனியும் இங்கு குடியேறிய இடங்கள், ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும் போர்த்துகேசி யரும் தம்முள் போட்டியிட்டு வியாபார மேன்மைபெறச் செய்த முயற்சிகளேக் காட்டுகின்றன. கடந்த காலத்திய சில முக்கியமான சம்பவங்களே நினைவுறுத்துவதற்கே

அமைந்தவை போல் சூரத்திலுள்ள சில சின்னங்கள் உள்ளன.

இங்குள்ள நதியே, படகுகள் பொருள்களைத் தாங்கித் துறைமுகத்தில் கொண்டு போய்ச் சேர்த்ததும், சூரத் வியாபாரிகள் பொருள்களை விற்கவும் வாங்கவும் வெளி நாட்டுக் கப்பல்களில் ஏறித் தொலைவிலுள்ள தேசங் களுக்குச் சென்றதுமான, அந்தப் பழைய காலத்தை நினைவுறுத்திக் கொண்டு ஓடுகிறது. சூரத் நகரத்திற்காகப் பொருள்களைத் தாங்கி வெள்ளத்தை எதிர்த்துச் செல்லும் படகுகளையும், வெள்ளத்தின் போக்கிலேயே விலையுயர்ந்த பண்டங்களைத் தாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய் யப்போகும் படகுகளையும் தாங்கி யோடும் நதியின் தோற்றம், நம் நாட்டின் ஜனநெருக்கமுள்ள தெருக்கள் கடைவீதிகள் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டிருக்கவில்லை.

இக்காலத்தில் சூரத் நகரம் வெகு சுறு சுறுப்பாகவே இருக்கிறது. தெருவெல்லாம் ஜனத்திரளும் குதிரை வண்டி களும் சிறிதும் பெரிதுமான மோட்டார்களும்தான். நதி யில்தான் முன்போன்ற சுறுசுறுப்பைக் காணோம். நாட்டு மரங்களைக்கொண்டு உறுதியான படகுகளும் கப்பல்களும் அமைத்த அந்தத் தச்சர்களும், இங்குமங்கும் போய்க் கொண்டிருந்த படகுகளைச் செலுத்துவோர்களும் எங்கு போனார்களோ தெரியவேயில்லை! அவர்களெல்லாம் பழைய சரித்திரத்தின் பகுதியாய்விட்டார்களோ, இனி புத்துயிர் பெற்று எழுவார்களோ? ஆனால் அன்று போலவே இன்றும் தப்தி நதி சுவாலியை நோக்கி ஓடிக் கடலில் கலந்துகொண்டே யிருக்கிறது.

சூரத்தில் ஐரோப்பிய வியாபாரிகள் தம்மிடையே போட்டியிட்டுக்கொண்டிருந்ததும் ஆங்கிலேய வியாபாரி களின் ஆட்சி ஆரம்ப தசையில் இருந்ததுமான காலத்தில் சூரத்திற்கு சமீபத்தில் ஒரு பிரஸித்தமான நெசவு ஸ்தலம் இருந்தது. சென்ற 200 வருஷங்களுக்குள் அது ஒரு இந்திய சமஸ்தானத்திற்குத் தலைநகரமென்னும் சிறப்

பெய்தி கெய்க்வார் ராஜகுலத்தின் வாசஸ்தலமாகி விட்டது.

பரோடா நகரம், அரண்மனைகள், சிங்காரத்தோட்டங்கள், பொதுக்கட்டடங்கள், ராஜாங்கக் காரியாலயங்கள், வியாபாரக் கம்பெனிகள், தொழிற்சாலைகள், கடைத் தெருக்கள், ஆகியவைகளுடன் கூடிய ஜனநெருக்கமுள்ள பெரிய நகரமாகும். நகரத்திலுள்ள சில கட்டடங்கள் அந்த நாட்டுச் சிற்பமுறையில் அமைந்திருக்கின்றன. வேறு சில பங்களாக்களோ ஆங்கிலேய முறையில் கட்டப்பெற்றிருக்கின்றன. நகரின் சில பகுதிகளில் அமைதியும், சுத்தமும் நிலவினாலும், வேறு சில மிகவும் ஜனநெருக்கமாயும் அசுத்தமாயும் காணப்படுகின்றன.

அரண்மனையும் அதை அடுத்துள்ள மைதானங்களும் அரசர்களுக்கே உரித்தான ஆடம்பரத்துடன் அமைக்கப் பட்டிருக்கின்றன. மகர்புராவிலுள்ள கோடை அரண்மனையின் உட்புறத்தில் உள்ள அலங்காரங்களும் சுற்றியுள்ள தோட்டங்களும் அதை ஒரு விதேசிக் கட்டடமாகவே ஆக்கிவிடுகின்றன. சில சமயங்களில் நகரம், விசித்திரப் பவனிகள், ஆடம்பரமான ஆட்டப் போட்டிகள், அலங்கரிக்கப்பட்ட தெருக்கள் தீபாலங்காரத்துடன் விளங்கும் வீடுகள் ஆகியவற்றுடனும் அரசனுக்கே உரிய சிறப்புக்களுடனும் காட்சியளிக்கும். அந்தக் காலங்களில் பொருள் வளத்திற்கும் ஆடம்பர வாழ்க்கைக்கும் பேர் போனதாகக் கூறப்படும் புராதன இந்தியாவிற்கு பரோடாவைச் சிறந்த உதாரணமாகக் கூறலாமென்று தோன்றும். அத்தகைய சமயங்களில் இந்த கூர்ஜர ராஜ்யத்தின் பொருள் வளம் நம் நினைவுக்கு வரும். அது மட்டுமல்ல; கிருஷ்ணனுடைய ராஜ்யத்தின் தலைநகரான துவாரகையும் கூர்ஜரத்திலே அடங்கியிருந்ததென்பதையும் நாம் நினைத்துக்கொள்வோம்.

கூர்ஜரத்தின் கிராமங்களில் குடியானவர்களின் அழகிய வாழ்க்கையைக் காணலாம். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு

ராட்டை சுற்றிக்கொண்டிருக்கும். குடிசைத் தொழில்கள் நன்கு பயிலப்பட்டு வரும்; சூது வாதற்ற ஜனங்கள் உழைத்தும் ஆடம்பரச் செலவில்லாமலும் வாழ்கிறார்கள். பஞ்சம் படையெடுத்தாலல்லது மற்றக் காலங்களிலெல் லாம் குஜராத்திகளின் வீடுகளில் அழையாது வந்த விருந் தாளிகளுக்கும் வட்டமான பெரிய வெண்கலத்தட்டுகளில் வயிறு நிறைய வகைவகையான உண்டி படைக்கப்படும். பரோடவை யடுத்த கிழக்குப் பக்கங்களிலும் சரி, கிர்னார் மலைகளை அடுத்த காத்யவாரின் மேற்கு சமஸ்தானங்களி லும்சரி, கார்பா என்ற கூர்ஜரத்தின் புராதன நாட்டியம் மக்களால் பெரிதும் விரும்பப்படுகிறது. அந்த நாட்டியம் பூவேலைகள் அமைந்த அழகிய ஆடைதரித்த பெண்கள் சேர்ந்து ஆடுவது. கூர்ஜரத்தின் வாழ்க்கை பெரும்பா லும் கிராம வாழ்க்கையாயினும் சில சமயங்களில் பல விடங்களிலிருந்தும் மக்கள் வந்து கூடுவதால் எல்லாம் முற்றிலும் மாறியதுபோல் தோன்றுகின்றன. அப் பொழுது எங்கும் ஒரே காந்திக் குல்லாய் மயம் தான்! ஆயிரக்கணக்கான மக்கள் மரியாதையுடன் மௌனமாய் இருந்து தம் தலைவர் ராட்டையின் தத்துவத்தையும், அஹிம்சையின் பொருளையும், தீண்டாமையின் தீமையை யும், கீதையின் பெருமையையும் விளக்குவதைக் கேட்பார் கள். இவைகளும், இவற்றைப் போன்ற பிறவும், கூர்ஜர கிராமங்களுக்கு-அவை மேல் திசையைச் சேர்ந்தவையாயி னும் சரி, கிழக்கிலுள்ளவையாயினும் சரி - ஒரே குடும்பத் தின் தோற்றத்தை அளிக்கின்றன.

சரித்திரத்திலிருந்து சுருக்கமாகத் தொகுக்கப்பட்ட கூர்ஜரத்தின் வரலாறு இதுவே. ஆனல் தற்காலத்திய சரித்திர ஆசிரியனும் சரி, வருங்காலத்தின் சரித்திரம் வரைவோனும் 'சரி, கூர்ஜரமே காந்தியடிகளின் பிறப் பிடம் என்பதை நினைவில் இறுத்தாவிட்டால், வரலாறு பூர்த்தியானதாகாது. இந்த ஒரு விஷயமே கூர்ஜரத் திற்கு சரித்திரத்தில் சிரஞ்சீவித் தன்மையை அளித்து விட்டது.



காந்தியடிகளின் சபர்மதி ஆச்ரமத்திலுள்ள, தண்டி யாத்திரையைக் குறிக்கும் கல்வெட்டு.



அந்த வேளையில் கிராமத்து ஜனங்கள் கூடு மிடம்.—ஆந்திரதேசம்.

XIII

கிருஷ்ணா நதி டெல்டா

"கிழக்கு சமுத்திரக் கரையில் கோதாவரிக்கும் கிருஷ்ணாவுக்குமிடையிலுள்ள நிலத்தில் வாழும் (தற்சமயம் தெலுங்கு பேசும்) மக்களைப்பற்றி மிகப் பழைய இந்திய இலக்கியத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது" என்று 'கேம்பிரிட்ஜ் இந்திய சரித்திரம்' என்ற நூல் கூறுகிறது. ஆந்திரர்களுக்கும் கூர்ஜரத்திற்கும் சரித்திரத் தொடர்பு உண்டு. கிழக்கு மாளவத்திலும் கூர்ஜரத்திலும் ஆந்திரக் கல்வெட்டுகளும், நாணயங்களும் கிடைத்திருக்கின்றன.

கோதாவரிக்கும் கிருஷ்ணாவுக்கும் இடையிலுள்ள வளமிக்க நிலம் இந்தியாவின் பிரிதொரு உருவைக் காட்டாநிற்கும். இரண்டு கோடிக்கதிகமான பலதரப்பட்ட ஆந்திரர்களையும் மேலெழுந்தவாரியாக நோக்குவோமானல், அவர்களுள் வக்கீல்களும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், நிலங்களுள்ள கொழுத்த ஜமீன்தார்களும், புரோகிதர்கள், பாவலர்கள், நூல், பத்திரிகை ஆசிரியர்களும், மத-ராஜீயத் தலைவர்களும்—மக்களைச் சீர்திருத்தவோ, காங்கிரஸ் முதலிய ஸ்தாபனங்களிற் சேர்ந்து பாடுபடவோ, தற்கால அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவோ முயன்று வருவதைக் காண்போம்.

பெரும்பாலோரான உழவர்களோ கள்ளமற்ற அடக்கமான அன்புமிக்க குடியானவர்கள்; அவர்கள் நிலத்தையுழுது அதன் விளைவைக்கொண்டு ஜீவிப்பவர்கள்; முரட்டுக் கதர் முதல், மிக மிருதுவான பட்டாடை வரை நெய்தளிக்கும் நெசவாளரும், ஒவ்வொரு கிராமக் குடும்பமும் விரும்பிப்பெற்று கையாளும் பாண்டங்களைச் செய்து தரும் குயவர்களும், வெறும் மரத்துண்டுகளைச் செதுக்கி

கண்ணைக் கவரும் அற்புதமான பொம்மைகள் செய்யும் தொழிலாளர்களும், கீழ்கரைத் துறைமுகங்களை சென்னையுடன் இணைக்க உதவுகின்றனராயினும், அவர்கள் நாள் முழுமையும் பாடுபட்டும் வயிறு வளர்க்கப் போதிய வருமான பெறமுடிவதில்லை.

1611-ல் முதன்முதல் டச்சுக்காரரின் பண்டசாலை மசூலிப்பட்டினத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. வெகுகாலம் வரையில் இத்துறைமுகம் இந்திய வாசனைத் திரவியங்களையும், ஆடைகளையும் ஏற்றுமதி செய்யும் முக்கிய ஸ்தலமாயிருந்தது. டச்சுக்காரர்களுக்குப் பிறகு பிரெஞ்சுக்காரர்கள் அதிகாரம் பெற்றனர்; பிறகு கிளைவ் அரங்கத்தில் தோன்றினன். விசாகப்பட்டினத்தைத் தாக்கிய ஒரு நாட்டுப் படைத் தலைவன், கிளைவின் உதவியை நாடினன். இவ்வாறு கிட்டிய சந்தர்ப்பத்தைச் சிறிதும் தாமதமின்றி கிளைவ் பயன்படுத்திக்கொண்டான். கிளைவின் கட்டளையின்படி வடக்கு ஸர்க்கார் பிரதேசத்திற் புகுந்த ஒரு படை, அதிக பலமுள்ள பிரஞ்சுப்படையைத் தோற்கடித்தது. புஸ்ஸியும், லாலியும் சென்னையில் போரிட்டனர்; மசூலிப்பட்டினம் நன்கு பாதுகாக்கப்படவில்லை; கர்னல் போர்டே அதைக் கைப்பற்றவும், வடசர்க்கார் பிரதேசம் முழுதும் கைக்கு வந்துவிட்டது.

பெஜவாடா வரவர மூக்கியத்துவம் பெறவே மசூலிப்பட்டினத்தின் பெருமை குன்றியது. பந்தரிலிருந்து (மசூலிப்பட்டினம்) 12 மைல் உள்ளே யுள்ளது, தற்காலத்தில் பிரபல வியாபார ஸ்தலமாயுள்ள இந்நகரம். பாரப் படகுகளும், கட்டு மரங்களும், ரயில் வண்டிகளும், பெஜவாடாவிலிருந்து பண்டங்களைக் கொண்டுபோய்க் கொண்டுவந்த வண்ணமிருக்கின்றன. நகரின் இடையே கிருஷ்ணாநதி பாய்கிறது; பெஜவாடா ரயில்களும், கால்வாய்களும் சந்திக்கும் கேந்திரமாகும்; இங்கிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் சென்னைக்குப் போகிறது; பந்தர் கால்வாயோ இதையும் மசூலிப்பட்டினத்தையும் இணைக்கிறது.



ஆந்திர நாட்டைச் சேர்ந்த ஒரு பொம்மை வியாபாரி.



தெலுங்குநாட்டுப் பெருமாள் மாடு.



அதிகாலையில் தலைமகளோ அவள் பெண்ணோ வீட்டு
வாயிலை சுத்திசெய்து கோலமிடுகிறாள்.

டெல்டா முழுவதும் உள்ள பரந்த வயல்களில் நெல், சோளம் முதலிய தானிய வகைகளும், புகையிலை, கரும்பு முதலியவையும் பயிராகின்றன. உண்மையில் கிருஷ்ணா ஜில்லாவே மிகவும் செழித்த பூமி. சில சமயங்களில் வயல்களுக்கிடையே ஓடும் கால்வாய்களில் படகுகள் செல்வதைக் காணலாம்; அவற்றின்மீது பறக்கும் பெருத்த வெண்ணிறப் பாய்கள், பச்சைப் பசேலென்ற புலன்களின் மீது குறுக்கும் நெடுக்கும் பட்சிகள் பறப்பதுபோல் காட்சியளிக்கும். இதோ உழவர்கள் தானியங்களை அறுக்கிறார்கள்; அங்கே தானியத்தைக் கோணிகளில் நிரப்புகிறார்கள். மற்றோரிடத்தில் தாளைக்கட்டுகிறார்கள்; இடையிடையே கூட்டங்கூட்டமாக தோகையைத் தேய்த்துத் தானியத்தைப் பிரிக்கிறார்கள். பொழுது சாயும் சமயத்தில் கீழ்காற்று வீசத் தொடங்கியதும், ஒரு உழவன் வண்டியின்மீது ஏறி நின்று கூடையிலிருந்து தானியத்தைக் கொட்டி இயற்கையாகவே சோடைகள் பிரிந்து போகும்படிச் செய்கிறான்.

கிராமக் குடும்ப வாழ்க்கை எளிமை பொருந்தியது; பொழுது புலர்ந்ததும் வெளிவாயிலை வீட்டுத் தலைவியோ அவளது மகளோ கூட்டிப் பெருக்கி நீர்தெளித்துக் கோலமிடுகிறாள்; மாலை நேரத்தில் பாட்டும் பஜனையும் நடைபெறுகின்றன. அமைதியான இரவு நேரமோ சந்தடியின்மையால் ஜீவனற்றதுபோல் தோன்றும்.

ஒரே மாதிரியான இந்த வாழ்க்கையினால் அலுத்துப் போகாதிருக்க உதவுவோர் நாடோடி நடிகர்களும், தாமே படித்தும் பாடியும் புராண இதிகாசங்களை விளக்கும் பௌராணிகர்களுமே. பஸவண்ணாவென்ற பெருமாள் மாடு கண்ணைப் பறிக்கும் பலநிற ஆடையாபரணங்களுடனும், ஆடம்பரமான தன் எஜமானனுடனும் கிராமங்களின் ஒவ்வொரு வீட்டிற்கும் விஜயம் செய்யும்.

கிராமத்தின் நிழலுள்ள ஒரு ஒதுக்கத்தில் நூற்றுக் கணக்காக மக்கள் கூடி அங்கு நடைபெறும் கோழிச்

சண்டையில், பந்தயம் வைக்கவும், சண்டையைப் பார்க்கவும், தோற்கவும், ஜயிக்கவும் செய்கிறார்கள். ஆந்திரர்களின் பழைய நாட்டுப் பாட்டுக்களில் இத்தகைய சண்டைகள் வர்ணிக்கப்படுகின்றன.

ரூ. 500 பந்தயம்; பல போர்முனைகளில் வெற்றி மாலை சூடி கிராமத்தின் புகழுக்குக் காரணமாயுள்ள சண்டை (ஆட்டு)க் கிடாவுடன் போர்தொடுக்க, பக்கத்து ஊரிலிருந்து ஒரு ஆடு வந்திருக்கிறது. ஏகக் கூச்சல், பிறகு முணுமுணுப்பு, பின்னர் இரு ஆடுகளின் தலைகள் மோதும் சத்தத்தைத் தவிர, எல்லாம் மௌனம், நிச்சப்தம். போர் முடிந்தது. ஜெயித்த ஆட்டைச் சார்ந்தவர்களின் வெற்றி முழக்கம்! அதைப் பழக்கியவர்களின் ஆனந்தக் கொக்கரிப்பு, கூப்பாடு! வெற்றி வீரனுக்கு மாலைகள் சூட்டித் தலையால் தாங்கிக் கொண்டு போகிறார்கள்!

சிறிய பட்டிகள், கிராமங்களிலிருந்து அருகாமையிலுள்ள பட்டினங்களுக்குக் கூட்டமாகப் போகிறார்கள். வருஷத்தில் எத்தனையோ பண்டிகைகள், திருநாட்கள்; மக்கள் அவைகளைக் கொண்டாடத்தான் செய்கிறார்கள். கோயில்களுக்குப் போகிறார்கள்; ஆட்டத்தையும், ஊர்வலத்தையும் கண்டு களிக்கிறார்கள்; விருந்துண்டு வேடிக்கையாகப் பொழுது கழிக்கிறார்கள்; இரவு முழுவதையும் ராமாயணம், பாரதம் கேட்பதிலோ, நிழலாட்டம் பார்ப்பதிலோ போக்குகிறார்கள். சிறிது இளமை முறுக்குள்ளவர்களோ லம்பாடிகள் எனப்படும் நரிக் குறத்திகள் கோஷ்டியாகச் சுற்றியாடுவதைக் கண்டு இன்புறுகிறார்கள்.

பகல் வேஷக்காரர்கள் இன்றும் இப்பகுதிகளுக்கு அடிக்கடி வருவதுண்டு. இரவில் ஆடாது, பகலிலேயே ஆடுவதால் அவர்களுக்கு இப்பெயர் வந்தது. ராஜா வேஷத்துடன் ஒருவன், ராணி வேஷத்துடன் மற்றொருவன், ஒரு வாத்தியக்காரன், மிருதங்கம் வாசிப்போன் ஒருவன்—ஆக சாதாரணமாக நான்கு பேர் கொண்டது



தெலுங்கு நாட்டைச் சேர்ந்த பகல்வேஷக்காரர்கள்.

தெலுங்கு நாட்டு உழவர் பெண்கள் தலைசீவி முடிக்கும் முறை.



கோழிச்சண்டை (தெலுங்கு தேசம்)

ஒரு கோஷ்டி. சமீப காலத்தில், 'கீச்' என்று கத்தும் ஒலி இயந்திரமும், ஓடும் படமும் இவர்களுக்குப் போட்டி யாகிவிட்டன!

விதைவிதைக்கும் பருவத்தில் பௌர்ணமியன்று ஜமீன்தாரும் எளிய குடியானவனும், சரி நிகர் சமமாக வயல்களில் வேலை செய்கிருர்கள். ஒவ்வொரு உழவனும் அன்று அதிகாலையிலிருந்தே கலப்பை முதலிய உழவுக் கருவிகளைச் சுத்தம் செய்கிருன்; அவன் இல்லக்கிழத் தியோ, கலப்பை, நுகத்தடி, எருதுகள் ஆகியவற்றைப் பூஜை செய்கிருள். மாட்டு ஜதை ஒன்ருே, பலவோ, ஏழையினுடையதோ, பணக்காரனுடையதோ, எல்லாம் சந்தனம், மஞ்சள், குங்குமம் அணியப் பெறுகின்றன. இத்திருநாளைக் கொண்டாடுவதின் நோக்கம் யாவருக்கும் ஒன்றே; முதன்முதல் ஆழ உழும்பொழுது, வரும் ஆண்டில் "பொங்கும் மங்களம் எங்கும் தங்குக" என்றே ஒவ்வொரு உழவனும் உள்ளத்தில் ஆண்டவனை வேண்டிக் கொள்கிருன்.

இந்தக் கிராமங்களில், அந்திப்பொழுது அமைதியாகவும், ஆறுதலளிப்பதாயுமிருக்கிறது. எங்கோ வீடு திரும்பும் உழவன் பாடுவது கேட்கிறது; அதோ கிராமத்தில் பலர் கூடிப் பஜனை செய்கிருர்கள். கால்வாய்களில் உள்ள ஓடங்களில் அடுப்புப் பற்ற வைக்கப்பட்டிருக்கிறது. சந்திரனும் உதயமாகிவிட்டதாஞல், படகோட்டியின் கீதம் ஒலிக்க, வெளுத்துப் பருத்து கோதாவரி—கிருஷ்ணுவின் நீரை யுண்டு ஓடும் கால்வாய்களில் மெதுவாக நகரும் பாய்கள், ஒருவகை மயக்கும் அழகைப்பெற்றுத் திகழ்கின்றன!

XIV

கர்னுடகத்தின் தலைநகரம்

கிழக்குக் கடற்கரையில் உலகிலேயே மிக்க வனப்பு வாய்ந்த சென்னைக் கடற்கரை நீண்டு கிடக்கிறது. மூன்று மைலுக்கதிகம் நீளமுள்ள இவ் வெண்மணற் பரப்பை யொட்டியே, ஆங்கிலேயர் ஆதியில் இந்தியாவில் குடி யேறியவற்றுள் ஒன்ருன செயிண்ட் ஜார்ஜ் கோட்டை யும், மிகவும் அழகான நீண்ட சாலையும் உள்ளன.

300 வருஷங்களுக்குமுன், அரணுடனமைந்த கோட் டையொன்றும், சிறு பட்டிகள் சிலவுமே இங்கிருந்தன; அவைகளில் செம்படவர்களின் கிராமம் ஒன்று இன்றும் செழித்து வாழ்கிறது. செம்படவர்கள் இன்றுவரை தம் தொழிலை விட்டாரில்லை. அவர்கள் தம் கட்டுமரச் சவாரி களிற் கிளம்பி, கடலைக்கலக்கி வயிற்றை வளர்க்கிருர்கள்; 17 வது நூற்ருண்டின் யாத்திரியொருவன் கூறுவதைப் போல், அவர்கள் 4, 5 அல்லது 6 இலேசான மரங்களைச் சேர்த்துப் பிணித்து, அதைக் 'கட்டுமரம்' என்கிருர்கள். அது 3 அல்லது 4 டன் பாரத்தைத் தாங்கும். அவர்க ளிடம் இதைப் போன்ற சிறிய மரங்களும் உண்டு; ஒன்று முதல் 4 மனிதர் வரையில் அவைகளிற் செல்ல லாம். இவைகளினுதவி கொண்டு அவர்கள் துணிவாகக் கடலிற் செல்கிருர்கள்; நீந்தும் கலை அவர்களிடம் இயற் கையிலேயே அமைந்திருக்கிறது. "கடந்த 250 வருஷங் களில் இந்தச் செம்படவர்களின் வாழ்க்கையில் எவ்வித மாறுபாடு மேற்படவில்லை; ஆனல் ஒரு விஷயம் இவர்கள் மறந்திருக்கலாம்; இவர்களுடைய முன்னோர் தென்னை நார்க்கயிறுகளை உபயோகித்தனர்; இவர்கள் கடையில் கயிறு வாங்குகின்றனர்; மரப்பட்டையால் செய்த பாய் களுக்குப் பதிலாக உள்ளூர் ஆலைகளிலிருந்து இவர்களுக் குப் பாய்த்துணி வருகிறது. சென்னைக்கடற்கரையின் கட்ட



சென்னையையும் பெஜவாடாவையும் இணைக்கும் பக்கிங்ஹாம் கால்வாய்.



சென்னை ஹைகோர்ட் கட்டடத்தின் மேலே ஓங்கி
நிற்கும் கலங்கரை விளக்கம் (லைட்ஹவுஸ்)

டங்களைக் கண்ணுற்றால் 300 வருஷத்திய சரித்திரம் புலனாகும்; ஆர்க்காட்டின் சரித்திரப் பெருமையும், சின்னஞ் சிறு கிராமங்கள் வளர்ந்து சென்னையென்ற தென்னிந்தியத் தலைநகரானமையும் தெளிவுறும். தனித்த கோட்டையைச் சுற்றி நகரம் வளர்ந்தது. சென்னைப் பட்டினம், பிளாக் டௌனாகி, இப்பொழுது ஜியார்ஜ் டௌனாகியிருக்கிறது. வாணிபம் வளர்ந்தது, வியாபாரக் கம்பெனிகள் பெருகின; ஜனத்தொகை அதிகமாயிற்று. பம்பாய், கராச்சி, கல்கத்தா ஆகிய நகரங்களைப்போல், சென்னையும் முக்கிய நகரமாயிற்று. வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் நகரம் பரந்தது; போக்குவரவு சாதனங்கள் உண்டாயின; எட்டு மைல் பரப்பில் அமளியும் பரபரப்புமாகிவிட்டன. மாகாணத்தின் தலைநகரானதையால் சென்னை, விசால-சென்னையாகிவிட்டது. டிராம் வண்டிகளும், பஸ்களும், மின்சார ரயிலும் விசால-சென்னையையும், சென்னையைச் சேர்ந்ததாகச் செய்துவிட்டன. பல கல்லூரிகளும் தனி வீடுகளும் நகரின் மத்தியிலிருந்து, காற்றோட்டமான சுற்று வட்டாரத்திற்கு மாறின. பிளாக் டௌனாயிருந்தது இப்பொழுது ஜியார்ஜ் டௌன்; காலம் சென்னையை எப்படியெல்லாம் மாற்றிவிட்டது!

ஜியார்ஜ் டௌனின் தெருப்பெயர்களில், பழைய சென்னையின் அறிகுறிகளை இன்றும் காணலாம். 'சைனா பஜார்' என்பது சீனாவிலிருந்து வந்த பண்டங்களை விற்கும் இடமாயிருந்திருக்கலாம். 'ஆர்மீனியன்' தெருவுக்கு அந்தப் பெயர் வந்ததற்குக் காரணம், அதில் தனவந்தர்களான ஆர்மீனிய வணிகர்கள் வாழ்ந்திருந்ததாயிருக்கலாம். பவழக்காரத் தெருவே இவர்கள் வியாபாரம் புரிந்த இடமாகும். பிளாக்டௌனே நகரமாகவும், செயின்ட் ஜியார்ஜ் கோட்டையே அதன் அரண்வாயிலாகவும் நிர்வாகக் கேந்திரமாகவும் இருந்த நாட்களுக்குப் பிறகு, தெருக்கள் எவ்வளவோ மாறிப்போயின. எத்தனை மாறுதல்கள் உண்டாயிருக்கின்றன வென்பதைப் பழைய சித்திரங்களிலிருந்தே ஒருவாறு ஊகித்துணரலாகும்.

ஆனல், சர்க்கார் காரியாலயங்களில் மட்டும் மாற்றங்கள் ஆமை நடையிலே ஆவதாய்த் தெரிகிறது; அங்கே சிங்காரித்த பொம்மைகள்போல் வளையவரும் பியூன்களைப் பாருங்கள்! முழங்கால் வரைத் தொங்கும் பெருத்த சுற்றளவுள்ள சொக்காய்களும், இடுப்பிலும், தோளிலும் சுற்றித் தொங்கும் பட்டிகளும், தலையில் பட்டைத் தலைப்பாகைகளும், 150 வருஷங்கள் முந்திய தஞ்சை மராட்டிய அரசர்களின் உடுப்பை நினைவூட்டுகின்றன. மற்ற யாவரும் அணியும் ஐரோப்பிய உடையையும், இந்திய உடையையும் ஒப்பிடும் பொழுது—வேற்றுமை நன்கு புலனகிறது. இந்தப் பயங்கரமான உடுப்புகள் ஆற்காட்டு நவாபின் அரண்மனை ஆங்கிலேய சர்க்காரின் காரியாலயமாக மாறுவதற்குமுன் அதில் வாழ்ந்து வந்த சுதேசிகளின் ஞாபகச் சின்னம்போ லிருக்கின்றன.

வட்டமான விதானங்களும் அகன்ற வாசல் வளைவுகளும் கல் ஜன்னல்களும் அமைந்த ஹிந்து-முஸ்லிம் சிற்பத்திற்குத் தனிச் சிறப்புண்டு. இன்னும் பிந்திய காலத்தில் நிர்மாணிக்கப்பட்டவை, ஹைறகோர்ட்டு, சட்டக் காலேஜ், கனிமாரா புத்தகாலயம் ஆகிய கட்டடங்கள்; இப்புத்தகாலயத்தில், விலை மதிக்க வொண்ணுத பழைய தஸ்தாவேஜிகள் வைக்கப் பட்டிருக்கின்றன; அதையடுத்த காக்ஷிச்சாலையில் சரித்திர ஆராய்ச்சிக்குதவும் எத்தனையோ புராதனப் பொருள்கள் உள்ளன.

சட்டக் காலேஜிற்குப் பின்புறத்திலுள்ள செயிண்டு மேரீஸ் சர்ச்சின் கல்லறைத் தோப்பில் டேவிட் ஏல் என்பவனுடைய சமாதி தனியாக ஆடம்பரமற்று நிற்கிறது; அதற்கும் 17-ஆம் நூற்றாண்டின் புதிய இங்கிலாந்திற்கும் உள்ள எதிர்பாராத தொடர்பினல் அதற்கு விசேஷ மகிமையுண்டு. எலிஹூ ஏலின் தந்தை போஸ்டனிலிருந்து சென்று இங்கிலாந்தில் குடியேறினர். எலிஹூ வாலிப வயதில் கிழக்கிந்தியக் கம்பெனியில் குமாஸ்தாவாகச் சேர்ந்தான். 1661 க்குள் அவன் சென்னையில் வெகுவாக முன்னேற்றமெய்தியிருந்ததால், பல தடவைகளில்



சென்னை சர்வகலாசாலை செனேட் கட்டடம்.



சென்னைக்கு வடக்கிலுள்ள புராதனமான திருவொற்றியூர்
கோயிலும் குளமும்.



மைலர்ப்பூர் சிவன் கோயிலும் குளமும்.

தற்காலிக கவர்னராக நியமனம் பெற்று 1687-இல் கவர்னராகவே காயம் செய்யப்பட்டான். அவன் ரஜாப் பெற்ற சமயத்தில் தன் சொந்த ஊரான போஸ்டனுக்கு காணிக்கையாகப் பல புத்தகங்களும், பிற கிழக்கிந்தியக் கம்பெனிச் சாமான்களும் கப்பலில் அனுப்பிவைத்தான். இந்தப் பொருள்கள் 662 பவுன் 12 ஷில்லிங்குக்கு விலைபோயின; அத்தொகை 'கனெக்டிகட்'டிலுள்ள காலேஜ்-ஸ்கூலுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது; இதிலிருந்து 'ஏல்' என்ற பெயருடன் விளங்கும் ஸர்வ கலாசாலை ஸ்தாபிதமாயிற்று. செயின்ட் மேரீஸ் சர்ச்சில் நடத்தப்பெற்ற முதல் விவாகம் எலிஹு ஏலுக்கும், உள்ளூர் வியாபாரி ஒருவரின் மகளுக்குமாகும். இந்த தம்பதிகள் தங்கள் இரண்டு வயதுப் பாலனை இழந்தனர். பழைய கல்லறைத் தோப்பிலுள்ள அப்பாலனுடைய சமாதி, கடலையும் பூகண்டத்தையும் தாண்டிச் சென்னையையும் போஸ்டனையும் பிணைக்கிறது.

ஜியார்ஜ் டௌனைச் சுற்றி கிராமங்களாயிருந்து, பின் நகரத்தின் பகுதியானவைகளுள், திருவல்லிக்கேணி, 8-ஆம் நூற்றூண்டிலேயே அதன் விஷ்ணு (ஸ்ரீ பார்த்தசாரதி) கோயிலுக்குப் பெயர் போனது. முதல் நூற்றூண்டிலேயே கிரீகோ-ரோமன் பூகோள விற்பன்னனை 'டோல்மீ' மயிலாப்பூரைக் குறிப்பிட்டிருக்கிறன்; அதன் கோயில் மிகப் புராதனமானது. அடையார் அங்கு அமைந்துள்ள பிரம்மஞான சங்கத்திற்குப் பெயர் போனது. 10-வது நூற்றூண்டில் வந்த அராபிய மாலுமிகளுக்கு ஸான்தோம் தெரியும். அது கீழ்க் கடற்கரையிலேயே முதல் கிறிஸ்துவ ஸ்தலமென்று தோன்றுகிறது; ஸான்தோமிலோ, அதன் அருகாமையிலோ மதத்திற்காகப் பலியான மஹான் தாமஸினுல் அது ஸ்தாபிதமானதாகக் கூறப்படுகிறது. அகன்ற மவுண்டு ரோடானது செயிண்டு ஜார்ஜ் கோட்டையிலிருந்து, ஸெயிண்ட் தாமஸ் மவுண்டுவரையில் நீண்டிருக்கிறது.

கட்டப்பட்ட சென்னைத் துறைமுகம் கடற்கரையின் வெண்மணற் பரப்பில் ஒரு மைலுக்கு அதிகமான இடத்தில் அமைந்திருக்கிறது. கோடைக் கடும்வெயிலில், அந்த வெண்மணல் ஸஹாராப் பாலைவனத்தை நிதர்சனமாக்கும்; ஆனால், பொழுது சாயவும் நீர்க்காற்று வீசத் தொடங்கவே, மக்கள் கூட்டம் கூட்டமாக இங்கு வந்து அவரவர்களுடைய வழக்கமான இடங்களில் அமரவோ, பாடவோ, அலைகளின் ஒலியுடனொத்து உலாவவோ செய்கிறார்கள். அந்திப் பொழுதில், பெண்களின் பல நிறப் புடவைகளும், விதவிதமான ஆடையணிந்த குழந்தைகளும், மணலின் ஓரத்தில் தலைதூக்கி நிற்கும் கரிய பச்சைச் சவுக்கைமரங்களும் சேர்ந்து கண்கொள்ளாக் காட்சியாகின்றன.

பண்டைச் சரித்திரத்தில் கீழ்க் கரையிலிருந்த மற்றத் துறைமுகங்களைப் போலவே சென்னை சுறு சுறுப்பான நகரமாகும்; இதற்கு அருகாமையிலேயே, பல துறைமுகங்களும் வியாபார ஸ்தலங்களும் தென் இந்திய சரித்திரத்தில் பிரசித்திபெற்ற அழகிய இடங்களும் அமைந்திருக்கின்றன. தென்னிந்தியா கலைஞனுக்கும், படம் பிடிப்போனுக்கும் சரித்திர ஆசிரியனுக்கும் புராதன ஆராய்ச்சியாளனுக்கும் சுவர்க்கமாகும். இந்தியாவின் தென்பகுதியே அழகின் இருப்பிடம்; கவர்ச்சிப் பெட்டகம்.



கர்நாடகத்தின் பழங்காலத்துத் துறைமுகப்பட்டின
மாகிய மஹாபலிபுரத்துத் தீபஸ்தம்பம்.



யானையும் சிங்கமும்
பன்னிரண்டு நூற்றாண்டுகட்கு முன்
பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்டவை.

XV

சில தென்னிந்தியக் காட்சிகள்

இப்பொழுது கேட்பாரற்ற இந்தக் கீழ்கரையில் ஒரு காலத்தில் தூரக் கிழக்கு தேசங்களிலிருந்தும், தொலைவிலுள்ள நாடுகளிலிருந்தும் (பாய்மர) கப்பல்கள் வந்து தங்கியதுண்டு. பெரிய வியாபாரக் கப்பல்கள் இங்கு தயாராக்கப்பட்டு சென்று வந்தன. இப்பொழுது மறைந்துபோன இந்தத் துறைமுகத்திலிருந்து சீன தேசத்துச் சக்ரவர்த்தியிடம் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். பெருத்த சந்தடியும் சுறுசுறுப்பும் வாணிபமும் யாத்ரிகளின் கூட்டமும் இருந்த இடத்தில், இப்பொழுது நிச்சப்தம் நிலவுகிறது. காற்றில் ஆடி அசையும் சவுக்கைமரங்களின் சத்தத்துடன் கடற்கரையில் தனித்து நிற்கும் கோயிலில் இரவு பகல் ஓய்வில்லாமல் மோதி சப்திக்கும் அலைகளின் ஒலியும் சேர்வதால் இயற்கையே இந்தக் கேழ்பாரற்ற கடற்கரையின் விதியை நினைந்து ஓலமிடுவதுபோல் தோன்றுகிறது. அந்தக் கடற்கரைக் கோயில் ஏழுகோயில்களில் ஒன்றென்றும், மற்ற ஆறு கோவில்களும் கடலுள் மறைந்தனவென்றும் கூறப்படுகிறது. சென்னையில் துறைமுகம் அமைவதற்கு முன்னால் கப்பல்களையெல்லாம் வரவேற்றுக்கொண்டிருந்த இந்த இடத்தில் இப்பொழுது வெகு தூரத்தில் வரும் கப்பல்களை எச்சரிக்கும் 'கலங்கரை விளக்கம்' (லைட் ஹவுஸ்) உள்ளது.

சவுக்கங்காட்டினுள் பல கோயில்கள் ஒருங்கே சூழ்மி நிற்கின்றன. அவைகளில் ஒவ்வொன்றும் ஒரே கருங்கல்லில் மிகவும் அழகான வேலைப்பாடுடன் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாறைக் கோயில்களும் இவைகளை அடுத்த குகைக் கோயில்களும் கல்லிலேயே அடித்து ஆக்கிய சிங்கம், யானை, ரிஷபம் ஆகியவைகளும் தென்னிந்தியாவில் பல்லவர்கள் ஆண்ட காலமாகிய 3—8 வது

நூற்றுண்டுகளுக்கு இடையில் 'சப்த கோபுரங்கள்' அமைக்கப்பட்ட செழித்த காலத்திலேயே நிர்மாணிக்கப்பட்டன. அவர்கள் தங்கள் ராஜ்யத்தின் பலவிடங்களிலும் கோயில்கள் எழுப்பினர்கள். ஆனல் இந்தக் கருங்கற் கோயில்களே நாம் அவர்களை என்றும் மறவாதிருக்கக் காரணமாயிருக்கின்றன.

இந்தப் பல்லவர்களுடைய தலைநகரம் காஞ்சீபுரம். இது ஹரித்வாரம், உஜ்ஜயினி முதலிய ஏழு முக்கியமான க்ஷேத்திரங்களில் ஒன்றுகும். இது வடமொழி நூல்களிலும், 'காஞ்சி' என்ற பெயருடன் வர்ணிக்கப்படுகிறது. 'பூக்களில் மல்லிகையும் நகரங்களில் காஞ்சியும்' என்பது ஒரு பழைய ஸம்ஸ்கிருதப் பழமொழி. இன்றும் இது கோயில்கள் நிறைந்த, அழகாக நிர்மாணிக்கப்பட்ட நகரமாகவே இருக்கிறது. வருஷத்திற்கு ஒருமுறை நடைபெறும் தேர் உத்ஸவத்திற்கு இங்கு வரும் யாத்ரிகளுக்குக் கணக்கில்லை. அவர்கள் நூற்றுக்கால், ஆயிரக்கால் மண்டபங்களைச் சுற்றிப்பார்த்தும், 15-நூற்றுண்டுகளுக்கிடையே கைதேர்ந்தவர்களால் எழுப்பப்பட்ட ஆகாயத்தை அளாவும் கோபுரங்களைக் கண்டும் களிக்கிறுர்கள். இந்த 1000 வருஷங்களுக்கிடையே இங்கு ஹிந்து, ஜைன, புத்த மதங்கள் ஒவ்வொரு காலத்தில் செழித்து விளங்கியிருக்கின்றன. எப்பொழுதுமே இது கல்விக்குப் பெயர்போன இடம்.

காஞ்சீபுரத்திற்குத் தெற்கே கீழ்கரைச் சமவெளியும், காவேரிப் பள்ளத்தாக்கும் இருக்கின்றன. இவை நல்ல விளைவுக்கும் ஏராளமான கோயில்களுக்கும் பேர் போனவை. சரித்திரத்தில் இந்த இடங்களுக்கு முக்கியமான ஸ்தானமுண்டு. காஞ்சீபுரத்திலிருந்து கன்னியாகுமரிவரையிலும் காணப்படும் கணக்கற்ற கோயில்கள் இங்கு ஆண்ட அரசர்களுடைய தெய்வ பக்திக்கும் கலைப் பற்றுக்கும், பொருள் வளத்திற்கும் அறிகுறியாக இருக்கின்றன. காவேரியாற்றின் குறுக்கேயுள்ள அணைக்கட்டுகள் இந்தியாவிலேயே மிகப் பழையவையாகும். அவைகளிலிருந்து அரசர்களும் சரி, மக்களும் சரி நிலத்

திற்கு உயிரான உரத்தையும், நீரையும் அளிக்கும் நதியை எவ்வளவு முக்கியமாகக் கருதிவந்தார்களென்று விளங்குகிறது.

இந்தியா முழுவதிலிருந்தும் யாத்ரிகர் வந்து தரிசிக்கும் ஸ்ரீரங்கநாதர் கோயில், ஸ்ரீரங்கம் என்ற காவிரி நதியின் தீவில் அமைந்திருக்கிறது. கோயிலைச் சுற்றியுள்ள ஜனநெருக்கமான தெருக்களில், ஓங்கி நிற்கும் கோபுரங்களைப்போல், ரங்கநாதருடைய யானை கம்பீரமான அமைதியுடன் பவனி வருகிறது. இங்கே பக்தர்கள் ஸ்வாமி தரிசனத்திற்கு வேண்டிய பொருள்களை வாங்குகிறார்கள். அதோ மண்டபங்களிற் குழுமியிருக்கிறார்கள். ஆற்றில் படகுகள் யாத்ரிகளை ஏற்றிக்கொண்டு வெள்ளத்தின் நடுவே போய்த் திரும்புகின்றன. யாத்ரிகள் புஷ்பங்களையும், விளக்குகளையும் காவிரியின் நடுவில் கொண்டுபோய் விட்டு வருகிறார்கள். அதோ அக்கரைக்கப்பால் மைதானத்தினிடையில் ஏறக்குறைய 270 அடி உயரம் ஓங்கியிருக்கும் மலைக்கோட்டை தெரிகிறது. அதன் உச்சியில் தடைகளைப் போக்குகிறவரும், அறிவுக் கடவுளுமான கணேசருடைய கோயில் திருச்சிராப்பள்ளியையும் அதன் சுற்றுப்புறங்களையும் கடாக்ஷித்துக்கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டின் கடும் வெயிற் காலங்களிலும் யாத்ரிகள் இந்த சக்தி வாய்ந்த கணேசரைத் தரிசிப்பதற்காகச் செங்குத்தான மலைப்படிகளில் காலையிலிருந்து இரவுவரை இடையறாது ஏறிக்கொண்டேயிருக்கிறார்கள். மலையின் அடிவாரத்திலுள்ள ஒரு கட்டடம் தென்னிந்தியாவில் நடந்த சில சரித்திரப் பிரசித்தியுள்ள போர்களையும், கிழக்கிந்தியக் கம்பெனியின் படைத் தலைவன் அதிகாரத்திற்கு வந்ததையும் ஞாபகம் மூட்டுகிறது. அந்தக் கட்டடம் ‘கிளைவ் ஹவுஸ்’ ஆகும். மலைக்கோயிலைச் சேர்ந்த குளத்தின் புண்ய தீர்த்தத்தில் மாதா கோயிலின் நிழல் தெரிவதைப் பார்த்தால், இயற்கைக்குச் சமய வேற்றுமையில்லையென்று எண்ணத் தோன்றுகிறது. மற்றொரு பக்கத்தில் பழைய நகரத்திற்கு அப்பால் 20-வது நூற்றாண்டின் திருச்சி தற்காலத்திய

இயந்திரசாலையில் மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கிறது!

11 வது நூற்றாண்டின் தொடக்கத்தில் 85 டன் நிறையுள்ள ஒரு உருண்ட பாறையை பல மைல்கள் தூரத்திற்கு அப்பாலிருந்து கட்டப்பட்ட சாரத்தின் வழியாக ஏற்றிக்கொண்டு போய் தஞ்சாவூர் கோயிலின் கோபுரத்தின்மேல் அமைத்தார்களாம். இதை உச்சியில் தாங்கிக்கொண்டு 200 அடிக்கு மேல் உயரமுள்ள இந்த சித்திர வேலைப்பாடுள்ள அழகிய விமானம் இன்றும் அங்கு கம்பீரமாக நிற்கிறது. ஒவ்வொரு சிவன் கோயிலிலும் உள்ளது போல் இதிலும் ஒரு கல் நந்தி உண்டு. இது இந்தியாவிலேயே பெரியதாகும். கோபுரத்திலும், கம்பங்களிலும், சுவர்களிலும் நுண்ணிய சிற்ப வேலைகள் காணப்படுகின்றன. கோயிலின் 4 பக்கங்களிலும் பழைய கோட்டை கொத்தளங்களும், அகழியும் இருக்கின்றன.

தமிழ் அரசர்களின் ஆட்சிக்குப் பிறகு மகாராஷ்டிர வீரரான சிவாஜியின் வம்சத்தவர் தஞ்சாவூரில் வந்து குடியேறி அரசாண்டனர். இந்த அரசர்களுடைய நினைவைக் குறிப்பதாக மிகப்புராதன ஓலைச் சுவடிகளும் நூல்களும் உள்ள ஒரு புஸ்தகசாலை அரண்மனையின் ஒரு பகுதியில் இடம் பெற்று விளங்குகிறது. தஞ்சையில் பல ஆண்டுகள் வாழ்ந்து பாடுபட்ட கிறிஸ்துவப் பாதிரியான சுவார்ட்ஸ் (Schwarts) என்பவரின் பெயரால் மாதா கோயில் ஒன்று இருக்கிறது. நகரத்திலுள்ள முக்கியமான வீதியில் சிறிய கடைகளும், பிச்சைக்காரர்களும், தேள்கடி மருந்து விற்பவர்களும், அங்காடிக்காரர்களும் ஈ மொய்த்துக் கொண்டிருக்கும் பழக்கடைகளும் இருக்கின்றன. மாட்டு வண்டிகளும், காதைத் துளைக்கும் சப்தத்தோடு இங்குமங்கும் ஓடும் பஸ்களும், மோட்டார்களும், தலைதெறிக்க சைக்கிளில் பறந்து பிரயாணிகளின் மேல் மோதி விழும் சைக்கிள்களும், ஏதேதோ சாமான்களைத் தூக்கிக்கொண்டு செல்லும் கிராமவாசிகளும், விசித்திரமான வகையில் இந்தப் புராதனமானதும் புதுமை பெற்று



காஞ்சியிலுள்ள சிவன்கோயில் கோபுரம்.



காஞ்சியிலுள்ள சிவன்கோயில் ஆயிரங்கால் மண்டபம்.



Temple towers and pillared halls are a feature of the many temples of Kanchi. Inside the shrine of Kamakshi, one of the celebrated temples of India.

வருவதுமான தஞ்சை வீதியில் ஒருங்கு காணப்படுகிறார்கள். தஞ்சையிலிருந்து புழுதி நிறைந்த சாலைகள் சுற்றுப்புறங்களுக்கும் அருகிலுள்ள நகரங்களுக்கும் போகின்றன. சாலைகளின் இரு புறமும் எத்தனையோ பாழடைந்தவையும் நல்ல நிலைமையிலுள்ளவையுமான கோயில்கள் காணப்படுகின்றன. காவிரியின் பல கிளை நதிகள் இந்தப் பக்கங்களில் பாய்வதால் அவற்றின்மீது அமைக்கப்பட்டுள்ள பாலங்கள் நகரங்களை இணைக்கின்றன. ஒவ்வொரு நகரத்திலும் கோயிலும் அதைப்பற்றிய சரித்திரமும் உண்டு. ஏனெனில், பல்லவர்களும் சேர-சோழ-பாண்டியர்களும் அரசு புரிந்தது தென்னிந்தியாவில் அல்லவா? பாண்டியர்களுடைய தலைநகரம் மதுரை. அது பெரிய தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்த இடம். அங்குதான் தமிழ் இலக்கியம் உச்ச நிலையை அடைந்தது. மதுரை மீனாக்ஷி என்று பிரசித்தமான அம்மனுடைய அற்புதமான கோயில் அங்கே இருக்கிறது.

உழவர்கள் வயல்களில் மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆடவர்கள் உழுகிறார்கள், பெண்கள் விதைக்கிறார்கள். குழந்தைகள் காக்கை, குருவிகளை விரட்டி விளையாடுகிறார்கள். அறுவடைக் காலத்தில் கதிர்களை அடித்து காற்றில் தூற்றுகிறார்கள். இந்தக் காட்சிகளை நாம் பார்த்துக்கொண் டிருக்கும்பொழுது நமது மனதில் கேள்விகள் பல எழுகின்றன. 500 மைல் நீளமுள்ள ஆறு இந்த மண்ணில் ஓடிச் செழிப்பிக்காவிட்டால் இது என்னவாயிருக்கும்? செழித்த பூமியும் நல்ல விளைவும் இருந்தும் இங்குள்ள உழவர்களிடையே திருப்தியும் சந்தோஷமும் இருப்பதற்குப் பதிலாக ஏழ்மை ஏன் குடி கொண்டிருக்கிறது? சென்ற பல நூற்றாண்டுகளில் இந்த உழவர்களின் முன்னோர் இந்த நிலங்களை உழுது விளைவைக் கொடுத்திருக்காவிட்டால் நகரங்களின் நிலைமை எப்படியாயிருக்கும்?............

மதுரைச் சமவெளிக்கப்பால் குன்றுகளும், மலைகளும் இருக்கின்றன. இந்த மலைச்சரிவுகளில் தேக்கு முதலிய

பலவகை மரங்களுள்ள காடுகள் உண்டு. இந்த மலைச் சரிவுகளில் வாழை, நாரத்தை முதலிய பல வகை மரங்கள் வளர்கின்றன. இந்த மலைகளுக்கு அப்பால் ஸ்ரீபத்மநாப ஸ்வாமியின் அடியவர்களான வாஞ்சி தாஸர்களின் திருவிதாங்கூர் இராஜ்யம் இருக்கிறது.

மலைகளின் மீதும், மலைகளைக் குடைந்தும் எஞ்ஜினியர்கள் ரெயில்பாதைகள் அமைப்பதற்கு முன் ஹிந்து மதத்தைக் காக்கும் கடவுளான, அனந்த - நாகத்தின் மீது பள்ளிகொண்டிருக்கும் விஷ்ணுவைத் தரிசிப்பதற்காக யாத்திரிகர் வடநாடுகளிலிருந்தும் மலைகளையெல்லாம் கடந்து இங்கு வருவது வழக்கம். இப்பொழுது திருவனந்தபுரத்தில் பத்மநாப ஸ்வாமியின் புகழ்பெற்ற ஆலயம் இருக்கிறது. இந்த விக்கிரகத்தை நிர்மாணித்த ஸ்தபதி தன் வித்தையில் கரைகண்டவனாக இருக்க வேண்டும். ஏனென்றால் பத்மநாபர் சன்னதியில் நம்மை அறியாமலே நாம் மன அமைதி பெறுகிறோம்.

திருவிதாங்கூரின் சிவப்பு மண் குன்றுகள், பச்சைப் பசேலென்ற மரங்கள், அந்திச் சூரியனின் ஒளியை பிரதிபிம்பிக்கும் மேற்குக் கடல் ஆகியவற்றின் அழகை அனுபவித்துக்கொண் டிருக்கும்பொழுது, கடவுளும் இளைப்பாறுவதற்கு இந்த இடத்தைத் தேர்ந்து எடுத்ததற்குக் காரணம் இதன் அழகுதானோ என்ற எண்ணமெழுகிறது.

ஸ்ரீ ரங்கத்துக் கோயில் யானை.



திருச்சி மலைக்கோட்டையிலுள்ள கணேசர் கோயில்.



காஞ்சியில் பல்லவர் கட்டிய பழைய கோயில்.

XVI

மேற்குக்கரை அரசி

காம்பே துறைமுகம் சிறப்புற்று ஓங்கிய காலத்தில் பம்பாய் ஒரு சிறிய செம்படவர் கிராமமாக இருந்தது. இங்கிலாந்தின் அரசன், 2 வது சார்லஸ் பாரகனின் ராஜகுமாரியான கேதரீனை 1663 ம் வருஷம் மணந்த பொழுது, ஸ்பெயின் - போர்ச்சுகலினுடைய அரசன் பம்பாய் என்ற ஏழு சிறிய தீவுகளைத் தன் மகளுக்கு ஸ்திரீ தனமாக அளித்தான். அவைகளிலிருந்து அவனுக்குக் கிடைத்துவந்த வருஷ வருமானம் 10 பவுனே!

இன்றோ, இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷனுக்கும், விஸ்தாரமாக ஸிமெண்டினால் அமைந்துள்ள புதிய பம்பாய் ஸென்ட்ரல் ஸ்டேஷனுக்கும் ரயில்கள் வருகின்றன. பம்பாய்க்கும் அதன் அருகிலுள்ள நகரங்களுக்கும், ஊர்களுக்கும் மின்சார ரயில்கள் வந்து போய்க்கொண்டிருக்கின்றன. பெருத்த இரும்புக் கம்பங்கள், மேற்குத் தொடர் மலையில் எங்கிருந்தோ வரும் மின்சார சக்தியைக் கொணர்ந்து இந்தப் பெரிய நகரத்தில் வசிப்போருக்கெல்லாம் அளிக்கும் கம்பிகளைத் தாங்கி நிற்கின்றன. லக்ஷக்கணக்கானவர்கள் வசிப்பதும், ஆயிரக்கணக்கானவர்கள் அகில உலகிலிருந்தும் சதா வந்துகொண்டிருப்பதுமான இந்த நகரத்திற்கு அருகிலுள்ள ஏரிகளிலிருந்து வரும் குழாய்கள் தண்ணீரைக் கொணர்ந்து தருகின்றன. அக்கம்பக்கத்து ஊர்களிலிருந்தும் தொலையிலிருந்தும் வரும் வண்டிகள் இதன் விசாலமான ஸிமெண்ட் சாலைகளில் அல்லும் பகலும் போய்க்கொண்டேயிருக்கின்றன. பழைய மாட்டு வண்டிகளும் போகின்றன. ஆனால் அந்த வண்டிகளின் சக்கரங்கள் ரப்பரினால் செய்யப்பட்டிருப்பதிலிருந்து பழமையும், புதுமையும் கலந்திருப்பது தெரிகிறது.

பல கைத்தொழில்களுக்கு இருப்பிடமும், பெருத்த வியாபார ஸ்தலங்களுடன் விளங்குவதும், இந்திய நாட்டிலேயே பஞ்சு ஆலைகளுக்குப் பேர்போனதும், மிகுந்த ஜனநெருக்கமுள்ளதும், துறைமுகப்பட்டினமுமான இந்த பம்பாய், பாட்டாளி மக்களும் முதலாளிகளும் செழித்துச் சிறந்தோங்கும் இடமாகும். முத்துமாலையின் நடுவில் தொங்கும் ரத்தினத்தைப்போல் தென்னிந்திய தீபகற்பத்திற்கே இந்தத் தீவு அலங்காரமாக அமைந்திருக்கிறது. எல்லாத் தேசங்களிலிருந்தும் வரும் வியாபாரக் கப்பல்களும் யாத்திரைக் கப்பல்களும் இதன் விசாலமான துறைமுகத்தில் தங்குவதால், பம்பாய் நகரத்தை அராபிக் கடற்கரையின் அரசியாகச் செய்கின்றன.

சரித்திரத்தின் பல பெரிய சம்பவங்களைப்போல் இந்த நகரத்தின் சரித்திரமும் மிகவும் சுருக்கமானது. இது வெகு சாதாரணமாகத் தொடங்கி 300 வருஷங்களுக்குள் பெரும் புகழ் பெற்றுவிட்டது! உலகத்திலுள்ள மகான்களெல்லாம் சாதாரணமாய் இருந்துதானே பெரியவர்களானார்கள் ?

சூரத் நகரத்தை கொள்ளைக் கூட்டங்கள் சூறையாடிய காலத்தில், ஐரோப்பிய ராஜ்யங்கள் தப்தி நதிக் கரையில் தலைமை பெறுவதற்காகப் போட்டியிட்டுப் போரிட்டுக் கொண்டிருந்தபொழுது, ஆங்கிலேயர்கள் தங்களுடைய மேல்கரைத் தொழிற்சாலைகளுக்குப் பம்பாயைத் தலைமை இடம் ஆக்கினார்கள். போர்த்துகேசியரின் போர்க்கப்பல்களும் மகாராஷ்டிரர்களின் படைகளும் வேறு கொள்ளைக்காரர்களின் கப்பல்களும் இடையிடையே இங்கு விஜயம் செய்த போதிலும், பம்பாயிலிருந்த ஆங்கிலேயரின் தொழிற்சாலைகள் செழித்தோங்கியே வந்தன.

ஜெஸ்யூட் கிறிஸ்துவர்கள் 'தானா' துறைமுகத்தோடு கூடின 'ஸால்ஸெட்டி'யில் மும்முரமாக வேலை செய்து வந்தகாலம் அது. அதற்கு அடுத்தாற்போல் முக்கியத்துவம் வாய்ந்த இடம் 'மஹீம்'; 'பரேல்' பல தோட்ட



மலபார் குன்றத்திலிருந்து தெரியும் சௌபாத்தி கடற்கரைக் காட்சி

பம்பாயின் ஒரு சுறுசுறுப்பான
பகுதியிலுள்ள நீரூற்று.



மலபார் குன்றத்திலிருந்து காணப்படும் கடற்காட்சி.

மாளிகைகளுடன் கூடியது; ஜனங்கள் 'பைதோனி'ல் இறங்கி அங்குள்ள ஆற்றில் காலைக் கழுவிக்கொண்டு '.ழ்ம்பா தேவி'யின் தரிசனத்திற்குப் போவது வழக்கம். கோலிசெம்படவர்கள் பழைய காலத்திலிருந்தே தொழில் நடத்திவந்த இடம் 'குலாபா'வாகும். இந்தத்தீவுகளின் தொகுதி, காலம் செல்லச் செல்ல இக்காலத்திய மாபெரும் பம்பாய் நகரமாக மாறியிருக்கிறது. இதன் முன்ஸிபல் எல்லைக்குள் கொலாபா. கோட்டை, காங்தேவி, மஸாகான், மலபார் குன்று, பைதோனி, பைகல்லா, பரேல், தாதர், மாதுங்கா, மஹீம் ஆகியவை அடங்கும். மஹீமிலிருந்து கொலாபாவுக்கு ரயிலும், மோட்டாரும் நூற்றுக்கணக்கான ஜனங்களை எடுத்தேகும் இக்காலத்தில், இந்தப் பெயர்களுக்கெல்லாம் ஏதும் பொருளில்லாமல் ஆகிவிட்டது. ஆயினும் ஒரு காலத்தில் ஒரு தீவிலிருந்து மற்றொன்றுக்குப் போகவேண்டுமானல் ஒருவர் இருவராகப் படகுகளில் ஏறி இடையிலுள்ளநீரைக் கடந்து சென்றார்கள். அந்த ஏழு தீவுகளும் மேல்கரையின் அரசியான பம்பாய் தீவினுள் இப்பொழுது ஐக்கியமானவைபோல் உள்ளன.

கடற்கரையின் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடம் வரையில், அப்பாலோ துறைமுகத்திலிருந்து ஜுஹூ வரையில், கடற்கரைச் சாலையிலிருந்து மஹீம் வரையில்-பம்பாய் நகரத்தின் தன்மையே இந்தியாவின் மற்றெல்லா நகரங்களிலிருந்தும் வேறுபட்டதா யிருக்கிறது. அதன் முக்கிய வியாபார ஸ்தலங்களிலும், பஞ்சுச் சாலைகளிலும் இரவும் பகலும் ஓய்வின்றி இயங்கும் பஞ்சு ஆலைகளிலும், அதிகாலையில் திறந்து மீண்டும் விடிவதற்குச் சிறிது மூன் மூடும் போஜன சாலைகளிலும், கடைத் தெருக்களிலும், ஜனக் கூட்டங்களிலும், லக்ஷக்கணக்கான ஜனங்கள் தலைவர்கள் செய்யும் உபதேசங்களைக் கேட்டு சுதந்திரப் பாதையில் செல்வதற்கு ஆவலுடன் கூடும் ஆஸாத் மைதானம் போன்ற மைதானங்களிலும், பூரி பந்தரிலும், அடிக்கடி லத்தியினல் ஜனங்கள் அடிபட்ட இடத்தை அடுத்த இடத்திலும், பல மாடிகள் உள்ள கட்டடங்களி

லும், இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் உலகின் பல நாடுகளிலிருந்தும் மக்கள் வந்து வாழும் ஆகாயத்தை அளாவும் கட்டடங்களினிடையிலும் நின்று, எத்தனையோ எழுத வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் குலாபாவிலும் சரி, மஹிம், டன்டா, வெர்ஸோவா ஆகிய இடங்களிலும் சரி, பழைய செம்படவர் கிராமங்களின் சின்னங்கள் இன்றும் காணக் கிடைக்கின்றன.

தலைமை தபால் ஆபீஸின் (G.P.O.) பக்கத்தில் நின்று நிமிர்ந்து நோக்கினால் பண்டைக்காலத்து தபால் சாதனங்களான புறாக்களையும், தற்காலத்துச் சாதனங்களான தந்திக் கம்பிகளையும் காணலாம். 'தோபி தலோ' வழியாக நடந்து சென்றால் பழைய காலமும் தற்காலமும் இணைந்து காட்சியளிக்கும்; அருகிலுள்ள வயல்களில் உலர்வதற்காகத் துவைத்துத் தொங்கவிட்டிருக்கும் துணிகளும், நவீன சாதனங்களுடன் கூடிய பிரம்மாண்டமான சினிமாக் கொட்டகையும், பழைய காலத்தையும் தற்காலத்தையும் ஒரேயிடத்தில் சேர்த்துக் காட்டும். இடைவேளைப் போஜன சமயத்தில் தெருக்களில் ஆண்களும், பெண்களும் பலருடைய உணவுப் பாத்திரங்களை தலையின் இருபுறத்திலும் தொங்கும் தூக்குக் கூடைகளில் நிரப்பிக் கொண்டு போவதைப் பார்க்கிறோம். அவர்கள் பாரம் தூக்குவதற்குச் சுலுவான ஒரு பழைய முறையை இன்றும் அனுஷ்டித்து வருகிறார்கள். பிற்பகலில் நகரத்தின் பஜார்களில் விற்பதற்காக சுற்றுப்புறத்துக் கிராமங்களிலிருந்து வரும் திடகாத்திரமுள்ள செம்படவர்கள் அன்று பிடித்த மீன்களைச் சுமந்து கொண்டு வருவதைப் பார்த்தால் இப்பொழுது பெரிய நகரமாய் இருந்தும், முன்னொரு காலத்தில் இது செம்படவர்களின் கிராமமே என்பது நினைவுக்கு வருகிறது. காலம் மாறிக்கொண்டே போயினும் வழக்கங்கள் நிலைத்து விடுகின்றன.

"மார்க்கெட்டுக்கு! மார்க்கெட்டுக்கு!" கிராபோர்ட் மார்க்கெட்டுக்கு. இந்த விசாலமான கட்டடத்தின் பல பகுதிகளிலும் தினத்தோறும் வந்து போகும் ஜனங்கள்

பம்பாய் நகரின் ஆபீஸுகளில்
வேலை பார்ப்போருக்கு உணவு
கொண்டு வருவோர்.



சௌபாதி (பம்பாய்) யில் தாகசாந்திக்குதவும் இளநீர்க் கடை.



பம்பாய்த் துறைமுகத்திலிருந்து தெரியும் எலிபெண்டா முதலிய தீவுகளும் பாறைகளும்.

பம்பாய்த் துறைமுகம்.

அனந்தம். வேலைக்காரிகளும், வேலைக்காரர்களும், நகர வாசிகளும், யாத்திரிகளும், இந்தியர்களும், விதேசிகளும்- சுருங்கக்கூறின் எல்லா இடங்களிலிருந்தும் எல்லாவித மானவர்களும் இங்கு வந்து செல்கிறார்கள். யாவரும் கிராபோட் மார்க்கெட்டுக்கு வருவதில் ஆச்சரியம் ஒன்று மில்லை; ஏனெனில் இங்கு எல்லாம் கிடைக்கின்றன. ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியதை வாங்கலாம்; இன்றியமையாத பொருள்களும், ஆடம்பர வஸ்துக்களும் கறிகாய்களிலிருந்து வாசனைப் பொருள்கள் வரையில் எது வேண்டுமானாலும் வாங்கலாம்.

கண்ணைக் கவரும் மினராக்களும், சலவைக்கல் வளைவு மாடமுள்ள அழகிய ஜும்மா மசூதியின் நாற் புறங்களிலும், புடவைகளும், பட்டுவஸ்திரங்களும், சுதேசி, விதேசி மில் துணிகளும், கம்பளங்களும், தைத்த உடைகளும், கத்தி, கத்தரி, பீங்கான் சாமான்கள், செருப்பு, பூட்ஸ் முதலியவைகளும் இன்னும் பல பொருள்களும் விற்கும் கடைகள் இருக்கின்றன.

இந்தப் பண்டசாலைகளிலிருந்தும் பஜார்களிலிருந்தும் போகும் கூட்டங்களுடன் நாமும் சேர்ந்துகொண்டால் பம்பாயிலேயே மிகவும் அதிக ஜனநெருக்கமுள்ள பாகத்தில் போய்ச் சேருவோம். புலேஷ்வரிலுள்ள குறுகலான கற்கள் பரப்பிய தெருக்களிலும், சந்துகளிலும் உள்ள தெரு விற்பனைக்காரர்களிடமும், கடைகளிலும் சிறு ஆணியிலிருந்து விலை உயர்ந்த தங்க ஜரிகை வரையில் எந்தப் பொருளும் கிடைக்கும். இந்தப் பகுதியில் சிறிதும் பெரிதுமான கோயில்கள் பல உண்டு. புலேஷ்வர் பிரசித்தமாயிருந்த காலத்திலிருந்து யாத்ரிகள் அவைகளைக் குறித்து வந்துகொண்டு இருந்திருக்கிறார்கள். கோயில் கோபுரங்களிலெல்லாம் புறாக்கள் அதிகம். கோயிலின் மணி ஒலியும் மக்களின் அரவமும் சேர்ந்து இந்தப் பகுதியையே எப்பொழுதும் சந்தடி மயமாய்ச் செய்துவிட்டன. கைவண்டிமுதல் மோட்டார் வரையில் உள்ள பலவகை வண்டிகள் குழப்பத்தையும், சத்தத்தை

யும் அதிகமாக்க, அங்காடி விற்பவர்கள் உள்ள குறை யைப் பூர்த்தி செய்கிறார்கள். காதிலும் உள்ளத்திலும் இவ்விடத்திய ஒலிகளும் காட்சிகளும் பல குழம்பிய சித்தி ரங்களைப் பதியச் செய்கின்றன.

தங்களிடமுள்ள சிறிய பொருளைச் சிறிது நேரத்திற் குள் பல மடங்காகப் பெருக்கித் தனவந்தர்களாக ஆசை யுடன் கூடும் மக்களின் காட்சியே காட்சி! பருத்தியின் விலை ஏறுவதையும் இறங்குவதையும் பொறுத்து இவர் களுடைய அதிர்ஷ்டமும் துரதிர்ஷ்டமும் இருக்கின்றன. சில சமயங்களில் இவர்கள் மிகவும் ஆத்திரம் கொள்வ தைப் பார்க்கிறோம். வேறு சில சமயங்களில் போலீஸ் காரர்கள் இவர்களை அடித்து விரட்டிக்கொண்டு இருப்ப தையும் பார்க்கலாம். எப்படியிருந்தாலும் மாலை 6 மணி முதல் இரவு 2 மணி வரையில் இவர்கள் உள்ள இடத்தில் ஒரே கூச்சலும் அமளியும் தான்.

புகழ்பெற்ற மஹாலட்சுமியின் கோயில் ஒரு குன் றின் உச்சியிலிருக்கிறது; அக்குன்றின் அடிவாரப் பாறையில் பம்பாய் நகரத்திற்கு எல்லையாய் விளங்கும் அராபிக் கடலின் அலைகள் மோதிக்கொண்டே யிருக்கின் றன. பம்பாயின் இந்தப் பகுதிக்கு மஹாலட்சுமி என்ற பெயர் இப்பொழுது வந்ததற்கு இக்கோயிலே காரணம் போலும். இக்கோயிலிலிருந்து பார்த்தால் மஹாலட்சுமி (குதிரைப்) பந்தய மைதானத்தின் மனோஹரமான காட்சி தென்படும். எப்பொழுதும்போல் இன்றும் பக்தர்கள் மஹாலட்சுமியை வணங்குவதற்கு வருகிறார்கள். பந்தய மைதானத்திற்கும் ஆரம்பத்திற் போலவே இப்பொழு தும் ஜனத்திரள் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, மஹாலட்சுமி வட்டாரத்தில் எப்பொழுதும் கூட்டம் தான். ஆனால் அதில் உள்ள லட்சுமி பக்தர்கள் எய்தும் பயன் அதிகமா, ஆட்டப் பித்தர் பெறும் இலாபம் அதிகமா? மஹாலட்சுமியிலிருந்து செல்லும் சிமெண்டுச் சாலைகள் வேஷ்லி கடற்கரைக்கும், மலபார் குன்றுக்கும் சௌபாதி கடற்கரை அல்லது கடற்கரைச் சாலைக்கும், கொலாபா,

அப்பாலோ துறைமுகத்திற்கும் போகின்றன. இவைகளுள் ஒவ்வொன்றும், பம்பாயின் ஒவ்வொரு அழகிய ப்குதியைக் குறிக்கும். வோர்லி குன்றத்தில் நின்று கொண்டு அராபிக்கடலுள் ஆழும் அந்திச் சூரியனைக் காண்போர் இயற்கையின் ஒப்பிலாவனப்பைக் காண்பர். மலபார் குன்றிலிருந்து கீழே பம்பாய் நகரின் பரப்பைக் காணும்பொழுதும், கடற்கரைச்சாலையில் காற்று வாங்கும் பொருட்டு வந்துள்ள ஆயிரமாயிரம் மக்களிடையே மோட்டாரில் போய் வரும்பொழுதும், இந்து மஹா சமுத்திரத்தின் முக்கியத் துறைமுகம் என்பதை யுணர்த்தும் பொருட்டு 'இந்தியாவின் வாயில்' என்ற பெயருடன் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்டமான வளைவின் கீழே நிற்கும்பொழுதும், 'ஸ்ட்ரேண்டி'ல் போய்வந்து, 'கீழ் நாட்டின் தலைசிறந்த ஹோட்டலி'லிருந்தும் மற்ற விடுதிகளிலிருந்தும் வரும் இசையை அனுபவிக்கும் பொழுதும் தான்—பம்பாய் தலைசிறந்த சமரச நகரமென்பதன் பொருள் விளங்கும்.

இந்த வரலாற்றில், ஏழு தீவுகளாயிருந்து ஒன்றான பம்பாயில் நடைபெறும் கலைப்பணிகளையும், கைத் தொழில்களையும் பற்றிக் கூறவேண்டியது அவசியமாகும். பேசும்படம் தயாரிக்கும் இடங்களைப் பற்றியும், பத்திரிகைகளையும், பத்திரிகைக்காரர்களையும், நிருபர்களையும் பற்றியும், பாலார்டு எஸ்டேட்டிலும் மஹாத்மா காந்தி ரோடிலும் ஆபீஸுகள் உள்ள தனவான்களையும், சுருங்கக்கூறுமிடத்து, பம்பாய்க் கோட்டையைப்பற்றிக் கூற வேண்டும். பங்கு மார்கெட்டுக்காரர்களையும் தெரு விற்பனை செய்வோரையும், பிச்சைக்காரர்களையும், வியாபாரிகளையும், வக்கீல்கள், ராஜதந்திரிகள், எழுத்தாளர்கள் முதலிய பம்பாயின் சாலைகளிலும் தெருக்களிலும் பகல் நேரமெல்லாம் நிரம்பியுள்ள நூற்றுக்கணக்கான வேறு பல் தொழிலாளரையும் பற்றிச் சொல்லவேண்டும். பகலெல்லாம் எது நடைபாதையா யிருக்கிறதோ அது இரவில் தூங்குமிடமாகிறது! பம்பாயைப் பார்க்கும்பொழு

தும் 'திருப்தி எங்கே, சந்துஷ்டி பெறுவது எவ்வாறு?' என்ற என்றும் தீராத பிரசினை, எழத்தான் செய்கிறது.

செய்திப்படம் பிடிப்போனும், சரித்திர வித்துவானும் பம்பாயைத் தன்-முயற்சியாலேயே அமைந்த நகரமாகவே கருதுவார்கள். அது சாதாரணமாகத் தொடங்கி தன் பரந்த பெருமையின் விளைவாக கோடீச்வரர்களின் இருப்பிடமாகவும், பருத்தி நகராகவும், இந்தியாவில் இணையில்லாத இயற்கைத் துறைமுகமாகவும், மேற்குக்கரையரசியாகவும் ஆகியிருக்கிறது.

பம்பாயின் இக்கதைச் சுருக்கத்தை முற்றுவித்து 'சித்திரமும் சொற்சித்திரமும்' என்ற இந்த வரலாற்று மாலையை முடிக்கும் பொருட்டு எழுதுகோல் எடுக்கப்படுகிறது. எழுதுகோலும், படயந்திரமும் இரு நண்பர்கள்; அவை நீண்ட புகழ்பெற்ற சரித்திரமுள்ளதும், புராதனச் சின்னம், பொக்கிஷங்கள், கலைச்செல்வங்கள், வீரக்காதல், பண்பாட்டுச் சிறப்பு ஆகியவற்றிற்குப் பேர் போனதுமான இந்நாட்டில் சுற்றிவந்த செய்திப்படம் தயாரிப்போனும், படம் பிடிப்போனுமான ஒருவனுடைய கண்ணிற் பட்டவைகளையும், மனதிலெழுந்தவைகளையும் குறிக்க உதவியிருக்கின்றன. பட யந்திரம் மயிரிழையும் பிசகாமல் பிடித்த பல படங்களை யொட்டி எழுதுகோல் பதினைந்து வரலாறுகளை வரைந்திருக்கிறது. யந்திரம் வேறு படங்கள் பிடித்துக் கொணரும் வரையில், இந்தப் பரந்த, மனோஹரமான நாட்டின் பிறவிடங்களைப் பற்றிக் கூறும் பொருட்டு எழுதுகோலும், பட-யந்திரமும் ஜோடியாய் மீண்டும் கிளம்பும் வரையில், எழுதுகோல் இளைப்பாறிக் கொண்டிருக்க வேண்டியதே!